பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 10 சனிக்கிழமை (23.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 058

# புதிய ஜனாதிபதியைத் தீர்மானிப்போர் வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்களே

## அறுதியிட்டுக் கூறுகிறார் கூட்டமைப்பின் சம்பந்தன்



வவுனியா, ஜனவரி 23

நாட்டின் புதிய ஜனாதிபதி யார் என்பதனை வடக்கு -கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களே தீர்மானிக்கப் போகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்கள் இருவருக்கும் இடையில் நெருக்கமான - கடுமையான - போட்டி நிலவுகிறது. அந்தப் போட்டியில் தீர்ப்பு வழங்க உள்ளவர்கள் வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் என்பது வெளிப்படையானது.

இவ்வாறு அறுதியிட்டுத் தெரிவிக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரிலும் வடமராட்சியிலும் இன்று தேர்தல் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.23

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி

(24ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் வாக்களிக்கச் செல்ல இலவச பஸ் சேவை

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக இலவச பஸ் சேவைகள் நடத்

(24ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகளைக் கட்டுப்படுத்தாமைக்கு மஹிந்தவே பொறுப்பு என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஜன.23

நாட்டில் இடம்பெறும் வன்முறைகளைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே குற்றம் சொல்லவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் செயலாளர் ரிரான் அலஸின் வீட்டின் மீது இடம்பெற்ற குண்டுத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இந்தத் தாக்குதலுக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் அவர் சாடியுள்ளார்.

நேற்று அதிகாலை குண்டுத் தாக்குத

(24ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவல் விளக்க மறியல் கைதிகளில் 120 பேர் விடுவிப்பு; அவர்களில் 35 பேர் புனர்வாழ்வு முகாமுக்கு

கொழும்பு, ஜன. 23

அரசால் தடுப்புக் காவலிலும் விளக்க மறியலிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் நூற்றியிருபது பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர் அல்லது புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சட்டமா அதிபர் இவர்களுக்கு எதிராக எந்தவிதக் குற்றச்சாட்டுகளையும் சுமத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதை

(24ஆம் பக்கம் பார்க்க)

## ரிரான் அலஸின் வீடு மீது குண்டு வீச்சு! அவரும் குடும்பத்தவரும் அருந்தப்பு!!

கொழும்பு, ஜன. 23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் பிரதான செயலாளர் ரிரான் அலஸின் வீட்டின் மீது நேற்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்கு அரசே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நாவல, கல்பொத்த வீதியில் அமைந்துள்ள

(23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி வெலிக்கடைச் சிறைக்கு முன் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 23

பயங்கரவாத மற்றும் அவசரகாலச் சட்டங்களின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்குமாறு கோரி அவர்களது உறவினர்கள் நேற்று வெலிக்கடை சிறைச்சாலையின் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

மனித உரிமைகள் இல்லம், தொழிற் சங்கங்கள், மக்கள் கண்காணிப்புக் குழு, ஐக்கிய சோஷலிசக் கட்சி மற்றும் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் போன்றோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் 100 இக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரம் இன்றுடன் முடிவுறுகிறது; 'அமைதிக் காலத்தில்' சகல செயற்பாடுகளும் முடக்கம்

யாழ்ப்பாணம், ஜன.23

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சகல வித பிரசார வேலைகளும் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றன.

இன்று 23ஆம் திகதி நள்ளிரவு 12மணியுடன் சகல பிரசார நடவடிக்கைகளும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தேர்தல் நடைபெறும் 26ஆம் திகதி முடிவடையும் வரையான அமைதிக்காலத்தில் தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முடக்கப்படவேண்டும் என்று தேர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கு விமானத்தில் வந்துள்ள போலியான மாதிரி வாக்குச் சீட்டுக்கள்

### விழிப்புடன் இருக்கக் கோருகிறார் எதிரணியின் பேச்சாளர்

கொழும்பு, ஜன.23

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வாக்குச்சீட்டு மாதிரியான போலியாக அச்சிடப்பட்ட சீட்டுக்கள் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தப் போலியான மாதிரி வாக்குச் சீட்டுக்கள் குறித்து மக்

(23ஆம் பக்கம் பார்க்க)




- 13++ முதல் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு வரையில் உறுதியளித்திருக்கும் ஒருவரா?
- 'இல்லாத' ஆவணத்தில் 'சொல்லாத' விடயங்களை முன்னிறுத்துபவர்களா?

தமிழர்கள் புத்திசாதுர்யமாகச் சிந்தித்து செயலாற்றவேண்டிய தருணமிது...

X



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

அறிமுகப்படுத்துகிறோம்
யாழ் நகரிலும், கொழும்பிலும்
ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm

விசேட வடஇந்திய காலை உணவு

பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்

Indian, Chinese, Panjabi & Jaffna Foods

கொசி உணவகம்
Feel like home

இல: 25, புகையிரத நிலைய வீதி; வெள்ளவத்தை. HOTLINE: 0112504020

இல:15, சிராம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசாரங்கள் இன்றுடன் முடிவு

கொழும்பு, ஜன. 23

இன்று நள்ளிரவுடன் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுக்கு வரும் அதேவேளை, நாளையுடன் அனைத்துப் பிரசார அலுவலகங்களும் மூடப்பட வேண்டுமென சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல்களை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்து 294 பிரசார அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன எனப் பதிவாகியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் 6 ஆயிரத்து 31 அலுவலகங்கள் உள்ளன. புதிய ஜனநாயக முன்னணி சார்பில் ஆயிரத்து 83 உம், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 692 உம், மக்கள் விடுதலை முன்னணி சார்பில் 117 உம் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான கால எல்லை குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா அனைத்துக் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவித்து விட்டார் என்றும் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நிலயங்களிலிருந்து 500 மீற்றர் வரையான தூரத்துக்குள் வேட்பாளர்களின் 'கட் - அவுட்'கள், போஸ்டர்கள் காணப்படக்கூடாது என்றும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் இடம்பெறக்கூடாது என்றும், அப்பகுதிகளிலுள்ள அனைத்துத் தேர்தல் விளம்பரங்களையும் நீக்குவதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஒரு மாவட்டத்தில் ஒரு அலுவலகத்தை மட்டும் வைத்திருப்பதற்குத் தேர்தல் செயலகம் அனுமதி அளித்துள்ளது.

அதேவேளை, அக்கட்சி அலுவலகம் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களது அடையாள அட்டைகளை மிகப் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ளுமாறும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸாரிடத்தில் கூட அடையாள அட்டைகளைக் கையளிக்க வேண்டாம் எனவும் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மஹிந்தவுக்கு ஆதரவாக வரணியில் பிரசாரம்


சாவகச்சேரி, ஜன. 23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து வரணி மகா வித்தியாலயத்தில் நேற்று மாலை பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆசிரியர் எஸ்.நவரத்தினசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதி நீதியமைச்சர் புத்திரசிகாமணி, காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எஸ்.எம்.அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(ஒ-6-131)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி றொக்ஸி செல்வகுமார்

(ஆசிரியர், யாழ்/ புனித சாள்ஸ் ம.வி.)

தாளையடி தனில் உன் உயிர்ப்பு
கோவில் வீதியில் உன் உதிர்ப்பு
அன்பான ஆசானாய் சாள்ஸ் தனில்,
ஒன்றாக கல்வியூட்டிய றொக்ஸி -நீ
ஓடோடிப் போனது தான் ஏன் ???
சொல்லாய்.................................

எமது சக ஆசிரியையின் பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா பணியாளர்கள்.**
**யா/ புனித சாள்ஸ் ம.வி.**

(94174)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

வையகம் 29 ★ 04 ★ 1978



வானகம் 02 ★ 02 ★ 2009

### திருமதி சிவகுமார் வளர்மதி

மதி! மதி! மதி! என் உயிர் மதி! எங்கள் தெய்வமதி
துயரக் கடலில் எமைத் தூக்கி எறிந்துவிட்டு
காலன் இட்ட கட்டளையைக் காப்பாற்ற வேண்டுமென்று
கண்காணாத தேசத்திற்குக் காற்றாய் பறந்ததேனோ?
உங்கள் பிரிவால் என் உயிரை இழந்து
ஏங்கித் தவிக்கிறேன்
கள்ளமில்லாத புன்சிரிப்பும் கனிவான பார்வையும்
அன்பு கனிந்த பேச்சையும் என் கண்முன் நிலைக்கவிட்டு
சிவன் பாதம் சென்றீரோ? - போதும் இவ்
வாழ்வென ஓய்வெடுத்துக் கொண்டீரோ?

*அன்னாரின் நினைவலை நிகழ்வு இன்று (23.01.2010) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

*நொச்சியம்பதி வீதி,* (சி/564285) என்றும் நினைவுடன்:
*அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.* வை.சிவகுமார் (கணவர்).

## SLAS போட்டிப் பரீட்சை வகுப்பு

இன்று (23.01.2010) சனிக்கிழமை
ஆரம்பம்
சனி / ஞாயிறு 2 - 5
யாழ்ப்பாண கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்ப்பாணம்.

## கடையும் காணியும் வாடகைக்கு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் கடையும் காணியும் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0773510511

## பூபதி காட்சியறையில்



*பூபதி காட்சியறை*
*மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.*
Mobile: 0777427777
BENTLEY PRODUCTS CO
Mirigama-Srilanka
Tele: 0332273735, 0332273795.
(சி/564266)

## வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவு சங்க
## வருடாந்த பொதுக் கூட்டம் 06.02.2010

*வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 06.02.2010 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.*

*பிரேரணை அனுப்ப விரும்பும் அங்கத்தவர்கள் எதிர்வரும் 29.01.2010 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் செயலாளர், ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், வலி.வடக்கு பிரதேச செயலகம், வலி.வடக்கு, தெல்லிப்பழை என்னும் விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

நா.தவநாதன், (செயலாளர்) (C/564283) க.திருநாவுக்கரசு, (தலைவர்)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா கந்தசாமி



மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி 20.01.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-தெய்வானை தம்பதியரின் புத்திரனும், வரணியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும், இராசம்மாவின் துணைவரும், அமரர் தம்பிப்பிள்ளை (ஆசிரியர்), அமரர் தங்கம்மா, அமரர் துரையப்பா (ஆசிரியர்), திருமதி மாணிக்கம் ஆறுமுகம், அமரர் நாகம்மா (ஆசிரியை) ஆகியோரின் உடன் பிறப்பும் சிவசங்கர் (சுவிஸ்), சிவநேசன் (லண்டன்), சிவகெங்கை (லண்டன்), சிவசேகர் (உரிமையாளர், சேகர் பந்தல் சேவை,மட்டுவில்), சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் ஜெனிதா (சுவிஸ்), நிர்மலா (லண்டன்), கேதீஸ்வரன் (லண்டன்), வ[illegible]தலா, ஜெனார்த்தனி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ராகவி, ரவீனா, நிரோசன், சாருசன், சர்மிலன், சரண்ஜா, சர்னிக்கா, ஜிருத்திகா, குவேதிகா, அபீமா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேகர் பந்தல் சேவை,*
*மட்டுவில் கிழக்கு,* தகவல்:
*சாவகச்சேரி.* (94187) க.சிவசேகர் (மகன்).

### வைத்திலிங்கம் செல்லத்துரை

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லத்துரை நேற்று முன்தினம் (21.01.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும், குணவதனா, பாஸ்கரன், சாந்தவதனா, உதயதாசன், றதிவதனா, மதிவதனா, தேவதாசன், பவானி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அமரர் கிருஸ்ணபிள்ளை, குமாரசாமி, அமரர் ராஜேந்திரன், உத்தமன், பாஸ்கரன், சரஸ்வதி, கிருஷ்ணவேணி, மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரன், ஜெயகௌரி, வசந்தன், சயந்தன், தனுசன், மிதுனன், டிலக்சன், சானு, கிசாந், கயேந், லக்கி, பிரசாந், சுதா, கஜானா, டிலக்சனா, ராம்சன், ரகீசன், றஜித்தனா, கயன், கஸ்தூரி, கயனிகா, சங்கவி, சாரங்கா, யாழவன் ஆகியோரின் அன்புப் பேரனும், டேனுகா, டிலான், கிஜன் ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி வடக்கு,* தகவல்:
*அளவெட்டி.* (சி/564284) மக்கள், மருமக்கள்.

### கந்தையா சண்முகம்

(தனியார் சிற்றூர்தி நடத்துநர், காரைநகர்)

கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பூதர் அடைப்பு, காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகம் நேற்று (22.01.2010) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ருக்குமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் திருமதி சர்மிஷ்டா (பிரதேச வைத்தியசாலை, காரைநகர்), சர்வரமணன் (தபாற் கந்தோர், காரைநகர்), அனார்த்தனன் (சாரதி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன் (பிரதேச வைத்தியசாலை, காரைநகர்), கலையரசி (MPCS, கிராமியவங்கி, பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்சிகன், கோபிகா, மதுவர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதரடைப்பு,* தகவல்: மனைவி, பிள்ளைகள்,
*காரைநகர்.* மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மறுப்பு அறிவித்தல்

*நேற்று முன்தினம் (21.01.2010) வியாழனன்று வெளிவந்த உதயன் பத்திரிகையின் 20 ஆம் பக்கத்தில்*

*திருநிறைச் செல்வன்* **வரதராசா** — *திருநிறைச் செல்வி* **பிரஸ்சாந்தி**

ஆகியோரின் திருமண அழைப்பு என என்னால் பிரசுரமாக்கப்பட்ட விளம்பரம் முற்றிலும் தவறானது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதனால் சம்பந்தப்பட்டோருக்கு ஏற்பட்ட மன உளைச்சலிற்காக மன்னிப்புக்கோருகின்றேன்.

**சோமலிங்கம் வரதராசா,**
4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.

(A)

## புலமைப்பரிசில்-2010

பயிற்சிப்பரீட்சை-02ல் பரிசுக்குரிய மாணவர்கள்

- ★ உ.விதுஷன் - 184 (யோன் பொஸ்கோ)
- ★ த.கிருத்திகா - 175 (யா/இந்து ஆ.பாடசா)
- ★ சி.சஜீவன் - 171 (யா/இந்து ஆ.பாடசா)
- ★ ஜெ.ஜெஸ்னி - 171 (யா/ஆனைப்பந்தி மெ.பி.வி)

பயிற்சிப் பரீட்சை - 03
23.01.2010 (சனி) (இன்று) வெளி மாணவர்களும் பரீட்சை எடுக்கலாம்.

[illegible]
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தேர்தல் வந்ததால் வந்த நன்மை

போர்ப் பேரழிவுகளினால் துவண்டு, சின்னாபின்னமாகிச், சிதறிச், சிதைந்துபோய்க் கிடக்கும் தமிழினத்துக்கு, அந்த அனர்த்தத்தின் சுமையிலிருந்து விடுபட முன்னதாகவே அவசர அவசரமாக ஒரு தேர்தல் சுமத்தப்பட்டு விட்டது.

பெரும்பாலான தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி, தங்களை ஆசுவாசப்படுத்தி, மூச்சுவிட்டு, ஆற, அமர இருந்து சிந்தித்து ஒரு தீர்மானம் எடுப்பதற்குக் கூட வழி விடாமல் ஜனாதிபதித் தேர்தல் என்ற சுமை அவர்கள் மீது சுருக்காக வந்து வீழ்ந்துவிட்டது.

'ஊரோடு ஒத்து ஓடு' என்ற கணக்கில் முழு நாடுமே ஜனாதிபதித் தேர்தல் ஜுரத்தில் அமிழும் போது, அதனோடு சேர்ந்து தம்மையும் சிக்கிக்கொள்ள வைக்க வேண்டிய கட்டாயம் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழினத்தைப் பொறுத்தவரை இத்தகைய தேர்தலை அவர்கள் எதிர்பார்த்து வரவேற்கவோ அல்லது காத்திருக்கவோ இல்லை. அதுபோலவே, இத் தேர்தல் மூலம் தாம் விரும்பும் ஒருவரை ஜனாதிபதியாக்கி அழகு பார்க்கும் ஆசையும் கூட அவர்களுக்கு இருக்கவில்லை.

கட்டாய பாணியில் தம்மீது எதிர்பாராமல் சுமத்தப்பட்ட இந்தத் தேர்தலை,அதேவழியில் எதிர்கொள்வதன் மூலம் - தந்திரோபாயமாகக் கையாள்வதன் வாயிலாக - தங்களின் நிகழ்கால நெருக்கடிகளுக்கேனும் தற்காலிகத் தீர்வு எதையாவது கூட எட்ட முடியுமா என்று சோதித்துப் பார்ப்பதே அவர்களின் எத்தனமாக இருக்கின்றது. சுருக்கமாகக் கூறுவதானால், கிடைத்த சந்தர்ப்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி, வசமாக எதையாவது ஈட்ட முடியுமா என்பதே அவர்களின் சிந்தையாகும்.

ஆனாலும், இத் தேர்தல் மூலம் எதிர்பாராத சில நன்மைகளும் தமிழர் பக்கத்துக்குக் கிடைத்திருப்பது மறைக்கற்பாலதல்ல.

ஆயுத வழியில் தமிழினத்தின் உரிமைப் போரை வழி நடத்திச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கை அரசுப் படைகளின் இராணுவத் தீவிரத்தின் முன்னால் சிதைத்தழிக்கப்பட்ட பின்னணியில், சரியான மேய்ப்பரின்றித் தமிழினம் சிதறிச் சின்னாபின்னமாகி, நிரந்தரமாகச் சிதைந்து அரசியல் வலுவிழந்து விடுமோ என்ற அச்சம் சூழ்ந்திருந்த நிலையிலேயே இத்தேர்தல் நினையாப் பிரகாரமாக வந்து சேர்ந்தது.

அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, இலங்கைத் தமிழர்களின் அரசியல் சக்தியாக - வலுவான சக்தியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரெழுச்சி கொள்ளும் ஒரு சந்தர்ப்பமும் சேர்ந்தே வந்திருக்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒன்றுபட்ட ஒரு கட்டமைப்பு - அரசியல் இயக்கம் - களத்தில் இல்லாமல் இல்லை என்ற நம்பிக்கையைத் தமிழினத்துக்குத் தமிழ்க் கூட்டமைப்பு சூசகமாகத் தன்னும் வெளிப்படுத்தி, அடையாளப்படுத்திக் காட்டுவதற்கு இலங்கைத் தீவு முற்றிலுமாக நடத்தப்படும் இந்தத் தேர்தல் நல்ல சந்தர்ப்பமாக வாய்த்திருக்கின்றது.

ஒரு மாகாண சபைக்கோ அல்லது ஒரு உள்ளூராட்சிக் கட்டமைப்புக்கோ நடத்தப்படும் ஒரு தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு தானே நேரடியாகப் பங்கு கொண்டால் கூட இத்தகைய நிலையைத் தனது மக்களுக்கு அது வெளிப்படுத்திக் காட்டி உணர்த்துவதற்கு அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது.

ஆனால், இலங்கையில் தீவார்ந்த மட்டத்தில் - நாடு முழுவதிலும் - ஒரே சமயத்தில் நடத்தப்படும் ஒரு தேர்தலில் - தான் நேரடியாகப் போட்டியிட்டுப் பங்குபற்றாத நிலையிலும் - தன்னை ஒரு காத்திரமான கட்டமைப்பாகவும், எழுச்சிபெற்ற தமிழர்களின் ஏகோபித்த - ஐக்கிய - சக்தியாகவும் வெளிப்படுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பம் கூட்டமைப்புக்குக் கிட்டியிருக்கின்றது.

அதுமட்டுமல்ல. இன்னொரு பேருபகாரத்தையும் இந்தத் தேர்தல் தமிழ் பேசும் சமூகத்துக்குத் தந்து நிற்பது சிலாகித்துக் கூறப்படுகின்றது; விதந்துரைக்கப்படுகின்றது.

தமிழ்ப் பேசும் மக்களிடையே கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளாகக் கட்டவிழ்ந்த அரசியல் போக்குகளும், உள்நாட்டு யுத்தமும் இந்தத் தீவின் இரு முக்கிய சிறுபான்மை இனங்களான தமிழர்களையும், முஸ்லிம்களையும் கன்னை பிரிய வைத்து, ஒருவரை ஒருவர் பரம வைரிகளாக - எதிரிகளாக - பார்க்க வைக்கும் விதத்தில் விலகிச்செல்ல வைத்தன. இரு இனங்கள் மத்தியிலும் முகிழ்த்த சில அரசியல்தலைவர்களின்திட்டமிட்ட -குறுகிய நோக்குக்கொண்ட-பொறுப்பற்ற - தீர்க்கதரிசனமற்ற - சமூக விரோதச் செயற்போக்குகளும், இரு சிறுபான்மை இனங்களையும் நிரந்தர எதிரிகளாக்கும் உள்நோக்கத்துடன் ஆட்சித் தரப்புகள் கையாண்ட சதி நோக்கச் செயற்பாடுகளும் இந்த நிலைமையை மிக மோசமான கட்டத்தை அடைய வைத்தன.

அந்தக் குரோத மனப்பான்மைப் போக்கிலிருந்து விடுபட்டு - சிறுபான்மை இனங்களாகிய தாங்கள் இரு தரப்பினரும் ஐக்கியப்பட்டால் மட்டுமே ஏதேனும் சேர்ந்து சாதித்துத் தங்கள் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற உண்மையை தமிழ், முஸ்லிம் தலைமைகளுக்கு மிகவும் உறைப்பாக உணர்த்தி, ஐக்கியப்பட்டுச் செயற்படுவதற்கான வாய்ப்பையும், வழிகாட்டலையும், நியாயத்தையும் இந்தத் தேர்தல் ஆழமாக உணர்த்தி நிற்கின்றமை கண்கூடு. அதன் உடனடிப் பயனை தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுபட்டு முன்னெடுக்கும் தேர்தலை ஒட்டிய ஐக்கியப் பிரகாரம் நமக்குத் தெளிவுபடுத்தி நிற்பது வெளிப்படையான யதார்த்தமாகும்.

சிறுபான்மைத் தரப்புகளின் இந்த ஐக்கியத்துக்குள் தங்களையும் இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்பைப் பறிகொடுத்தபடி -

தமது மலையக மக்கள் மீதான செல்வாக்கு ஆளுமையையும் கோட்டை விட்டபடி -

மலையகத்தின் முக்கிய சில தமிழ்க் கட்சிகள் ஆளும் தரப்பைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பது வேதனையிலும் வேதனை மட்டுமல்ல, சிறுபான்மைத் தரப்பின் துரதிஷ்டமும் கூட.

சிறுபான்மைத் தரப்புகளின் ஐக்கியத்தில், தற்சமயம் வெளியில் நிற்கும் ஒருசில மலையகக் கட்சிகளும் தம்மை இணைத்துக் கொண்டிருக்குமானால் சிறுபான்மையினரின் அரசியல் தலைமை அசைக்கமுடியாத பெருவலிமையுடையதாக மேலும் நிமிர்ந்திருக்கும் என்பது உண்மை.

# வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் யாழ்.நகரில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் மாபெரும் வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கண்காட்சி யாழ். மத்திய கல்லூரியிலும் வேம் படி மகளிர் கல்லூரியிலும் மார்ச் 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கழகப்பிரதிநிதிகள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் கைத்தொழில், வர்த்தகம், விவசாயம், மீன்பிடித்துறை மற்றும் கணனி, கல்வி ஆகிய துறைசார் காட்சிக் கூடங்களும் விற்பனையும் இடம்பெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மேற்படி துறைகள் சார்ந்தோர் யாழ். நகர் மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்.மாவட்ட வணிகர் கழகத்துடன் நேரில் அல்லது 0212222367, 021 2228593 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்த உறுதிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

ஏ-9 வீதி திறக்கப்பட்டு மக்களின் இயல்பான வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமையில் யாழ். மாவட்ட வர்த்தகத் துறையை மேம்படுத்துதல், உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், உற்பத்திக்கான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையிலான பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தலும் இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

## வரணி பாடசாலை மாடிக் கட்டடத்துக்கு இன்று அடிக்கல்

சாவகச்சேரி, ஜன.23

கொடிகாமம், வரணி மகாவித்தியாலயத்துக்கு புதிதாக அமைக்கப்படவுள்ள மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் ந.நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

'இசுறு' பாடசாலை திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள இக் கட்டடத்துக்கான அடிக்கலை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நட்டு வைப்பார். (ஒ-131-6)

# வட்டுக்கோட்டைப் பிரதேசத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

## நாளை அடிக்கல், திறப்பு விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.23

வட்டு.தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் 'வட்டுக்கோட்டைப் பிரதேசத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை' ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வட்டு.தெற்கு கிராம அபிவிருத்தி சங்க உபதலைவர் சசிதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக வட்டு. தெற்கு கிராம உத்தியோத்தர் செ.சிவபாலனும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் சனசமூக நிலையக் கட்டடம், வட்டு.கார்த்திகேய வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம் என்பனவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகளும் கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகம், கமக்கார அமைப்பு அலுவலகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன. அத்துடன் சமுர்த்தி பயனாளிகளுக்கான மரணக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ஒ-6)

## கவனம்! போலித் தேர்தல் பிரசுரம்

யாழ்ப்பாணம், ஜன.23

உதயனின் இலச்சினை மற்றும் பெயருடன் ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு எதிரான துண்டுப்பிரசுரம் ஒன்று நேற்று கிளிநொச்சி, முறிகண்டிப்பகுதியில் வைத்து பொதுமக்களிடமும், அந்த வழியாகச் செல்லும் பிரயாணிகளிடமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அது முழுக்க முழுக்கப் போலியானதாகும்.

குறிப்பிட்ட மோசடியான வெட்டிப் பொருத்தப்பட்ட 'போட்டோ ஸ்ராட்' போலித் துண்டுப்பிரசுரத்துக்கும் உதயன் நிறுவனத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதனை பொதுமக்களுக்கும், வாசகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

## இந்திய சுவாமிகளின் ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.23

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமி வேதாந்த ஆனந்தாவின் ஆன்மீக சொற்பொழிவு இடம்பெறும். (ஒ-6)

## பருத்தித்துறை - சரசாலை ஊடாக

# சாவகச்சேரிக்கு பாடசாலை பஸ் சேவையை நடத்துமாறு மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.23

பருத்தித்துறையில் இருந்து சரசாலை ஊடாக சாவகச்சேரிக்கு காலையில் பாடசாலை பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு மாணவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கப்புதூ, சரசாலை, மட்டுவில், நுணாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு மாணவர்கள் சாவகச்சேரியில் உள்ள கல்லூரிகளில் கல்வி கற்று வருகின்றனர். காலையில் சேவையில்ஸில் வடமராட்சியிலிருந்து நிறைந்த பயணிகளுடன் இந்த பஸ் வருவதனால் மாணவர்கள் பஸ்ஸில் பயணிக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

அத்துடன் இந்த மார்க்கத்தில் வேறு பஸ்சேவைகள் இல்லாததால் இப் பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களும், அரச உத்தியோகத்தர்களும் இந்த பஸ்ஸிலேயே பயணிக்கின்றனர். இதனால் பஸ்ஸில் பெரும் இடநெருக்கடி ஏற்படுகிறது.

பஸ்ஸில் இடம் கிடைக்காத மாணவர்கள் ஐந்து மைல் தூரத்திற்கு நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் மாணவர்களின் நலன் கருதி பாடசாலை சேவையை இந்த மார்க்கத்தில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை மாணவர்கள் கேட்டுள்ளனர். (ஒ-207)

# மண்டைதீவு சென்.பீற்றர் ஆலயம் மக்களின் வழிபாட்டுக்கு அனுமதி

## ஆயரிடம் கடற்படையினர் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

இதுவரை காலமும் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருந்த மண்டைதீவு சென்.பீற்றர் ஆலயம் மக்களின் வழிபாட்டு வசதிக்காக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரி சாம் சமரசிங்க, மண்டைதீவு பொறுப்பதிகாரி அபேவர்த்தன, புங்குடுதீவு அதிகாரி மகாநந்த மற்றும் மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் றொடீஸ் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் பிரார்த்தனை வழிபாடுகளை நடத்தி இந்த நிகழ்வை சிறப்பித்தார்.

மண்டைதீவு மக்களின் முக்கிய தேவைகளை நிறைவேற்றித்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. தேவாலயச் சுற்றாடலில் 210வீடுகள் உள்ளன. தற்போது 48வீடுகளில் படைத்தரப்பினர் தங்கியுள்ளனர். இந்தப் பகுதிக்குள் பிரதேச வாசிகள் குடியிருக்க அனுமதி பெற்றுத்தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-111)

## நாளை

| | | |
|---|---|---|
| தை | 11 | 24.01.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | | நவமி |
| | | மு.இ. 11.27 வரை |
| நட்சத்திரம்: | | பரணி |
| | | மு.இ. 08.00 வரை |
| சுபநேரம்: | | 09.36-11.06 வரை |
| ராகுகாலம்: | | 05.06-06.36 வரை |

# வடிகால்கள் அனைத்தையும் துப்புரவு செய்யும் பணி துரித கதியில்



யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வடிகால்கள் அனைத்தையும் துப்புரவு செய்யும் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன.

பலாலி வீதி, கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.பிரதான வீதி உட்பட குறுக்கு வீதிகளில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்பட்டு அவற்றில் தேங்கியுள்ள கழிவுப் பொருள்கள் உடனடியாக அகற்றப்பட்டு வருகின்றன.அத்துடன் துப்புரவு செய்யப்படும் கால்வாய்களுக்கு மலத்தியோன் விசிறும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 47 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

Happy Birthday

ஊரெழு திரு.திருமதி சபாபதி கதிரவேலு தம்பதியினரின் செல்வப் புதல்வன்
க.செவ்வேள் (சட்டத்தரணி - லண்டன் - யாழ்.இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத் தலைவர் )
அவர்கள் இன்று (23.01.2010) சனிக்கிழமை தனது பிறந்த ஊரான ஊரெழு, சுன்னாகத்தில் தனது பிறந்தநாளை வெகுவிமரிசையாக குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கொண்டாடுகிறார். இவரை நல்லூர்க் கந்தன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(94177)

வாழ்த்துவோர்: நலன்விரும்பிகள், நண்பர்கள்.
இல.56, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

# மாநகரசபை யாழ்ப்பாணம்

## பகிரங்க ஏல விற்பனை - 2010

யாழ்ப்பாணம் மாநகரசபையில் பயன்படுத்தப்பட்ட பழைய நிலையிலுள்ள வாகன ரயர்கள், பற்றறிகள் என்பன எதிர்வரும் 03.02.2010 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு மாநகரசபை வளாகத்திலே ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. இதில் பங்குபற்றி சித்தி பெறுவோர் உரிய பொருள்களுக்கான பணத்தினை உடன் செலுத்தி பொருள்களை பெற்றுச் செல்லவும்.

| பொருள்கள் | அளவு | இருப்பு | ஒன்றின் விலை |
|---|---|---|---|
| 1. ரயர் | 11 X 28 | 18 | 5000.00 |
| 2. ரயர் | 750 X 16 | 18 | 3000.00 |
| 3. ரயர் | 600 X 16 | 25 | 1500.00 |
| 4. பற்றறி | 90 A | 26 | 600.00 |
| 5. பற்றறி | 100 A | 02 | 700.00 |
| 6. பற்றறி | 70 A | 02 | 600.00 |
| 7. பற்றறி | 95 A | 04 | 600.00 |
| 8. பற்றறி | 50 A | 01 | 600.00 |
| 9. பற்றறி | 120 A | 02 | 1500.00 |

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி/564274)

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 803 திகதி: 21.01.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| C | 11 | 24 | 29 | 60 | 35 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 11,926,840.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 06 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 312 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14617 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 204700 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **8,779,700.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை **12,213,716.00**

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk

# VACANCIES

## University of Jaffna, Sri Lanka

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post upto 03.02.2010.

**PHYSICAL EDUCATION UNIT**

Visiting instructor in the following sports fields Carrom (Men)/ Karate (Men)/ Table Tennis (Men)/Table Tennis (Women)/ Tennis (Men)/ Volley Ball (Men)

**Rate of payment per hour of Instruction - Rs.250/-**

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Register/ Academic Establishments, University of Jaffna Sri Lankan on a payment of Rs 100/= per form at the People's Bank, University Branch or at the shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order - drawn in favour of the **Burser, University Of Jaffna** together with a **self -addressed stamped envelope** 23 x 10 c.m in size.

Applicants from the University System / Government Department / Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

**Registrar**
**2010.01.23**

(564271)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலம் ஆறுமுகம்



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலம் ஆறுமுகம் நேற்று (22.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் ஆறுமுகத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், சதர்மதேவா மற்றும் வேலாயுதபிள்ளை, சறோஜினிதேவி, செல்வராஜா (லண்டன்), றஞ்சன் (பிரான்ஸ்), கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகாம்பிகை, சரஸ்வதி, தனலட்சுமி, பாலசுப்பிரமணியம், காந்திமலர் (லண்டன்), இதயரஜனி (பிரான்ஸ்), இராசபாலன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

07ஆம் வட்டாரம், நயினாதீவு. (94178) தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இணைப்பு ஆசிரியர்; நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களின் நிரந்தர இடமாற்றம் தொடர்பாகவும், இணைப்புப் பெற்று இதுவரை காலமும் சம்பளம் பெறாதவர்களின் விடயம் குறித்தும் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அறிவிக்கும் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 12.30 மணிக்கு, யாழ்.ஆரியகுளம் சந்தி புதிய உயர் கல்லூரியில் நடைபெறும் என்று வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-6)

# அர்ச்சகர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 23

மோட்டார் சைக்கிள் ஓடிக் கொண்டிருந்த வேளையில் தலைக்கவசம் அணிய முயன்ற அர்ச்சகர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

நேற்று ஆலய பூஜைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புகையில் மிருசுவில் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த வெற்றிவேலு தில்லையம்பலம் (வயது 26) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-207)

# விடுதிகளில் நிரம்பி வழியும் நோயாளர்

யாழ்ப்பாணம், ஜன. 23

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. விடுதிகளில் உள்ள கட்டடங்கள் நிறைந்து விறாந்தைகளிலும் நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தினமும் 50 இற்கும் மேற்பட்டோர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுவருவதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (ஒ-207)

# கோடா வைத்திருந்த மீசாலை வாசிக்கு ரூ.60 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன. 23

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த மீசாலை மேற்கைச் சேர்ந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதமும் மூன்று மாத கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

நீதிமன்றில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிவான் அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு வருடம் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அல்லியம்மா சிதம்பரநாதன்

காங்கேசன்துறை, சந்தைவீதியைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டிச்சந்தி, கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்லியம்மா சிதம்பரநாதன் 21.01.2010 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதனின் (பாரவாகன சாரதி) அன்பு மனைவியும் ரகுநாதன், ரஜனி, ரஞ்சினி (ஜேர்மனி), ரமேஷ்நாதன், ரகுநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி (கொழும்பு), உதயச்சந்திரன் (கட்டார்), சுவேந்திரன் (ஜேர்மனி), ரோகினி (RDA, கிளிநொச்சி), சிவசோதிலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணிகா, சோபனா (கொழும்பு), சுரேன், சுதன் (ஜேர்மனி), கருவூலன், ஹாஷ்னா (லண்டன்), பிரசான் (லண்டன்), பபிகேஷன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில். (94175) தகவல்: சி.ரமேஷ்நாதன் (மகன்).

## அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (கனகு)

[முன்னாள் பரி.யோவான் கல்லூரி ஆசிரியர், ஸ்ரீலங்கா குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர், புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர், பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர்]



குருநகரைப்பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (கனகு) கனடாவில் கடந்த 20.01.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியின் அன்பு மகனும், ஜோன்பிள்ளை - ரெபேக்கா தம்பதியினரின் மருமகனும், அஞ்சலா கொன்சியின் அன்புக் கணவரும், சத்தியன் ஸ்பென்சர், சிந்தியா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நீற்றா மற்றும் மைக்கல் (நில அளவையாளர்-அவுஸ்திரேலியா), சைமன் (தியாகு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இம்மனுவேல் மற்றும் சிம்மன், லூத்அன்ரனற்எக்பெட், ஷேக்ஸ்பியர் (இங்கிலாந்து), அலெக்ஸ்சாண்டர், றோஸ்மைக்கல், சைமன் குணகுந்தம்மா ஆகியோரின் மைத்துனரும், டெஸ்மன், செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் மாமனாரும் ரிஸ்டன்றய்லி, மிச்சன் றேமன் ஆகியோரின் பேரனும், அருட்சகோதரி ஜெறால்டின் மைக்கல் (யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்) அவர்களின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் 25.01.2010 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அவரது ஆத்ம சாந்திக்கான திருப்பலி (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். பூசை முடிந்ததும் வீட்டில் நடைபெறும் ஆராதனையிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (சி/564277)

50/3, மைண்கார்மேல்வீதி, குருநகர், யாழ்ப்பாணம். தகவல்: சகோதரர் சைமன் (தியாகு) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 64 வீத வாக்காளர் அட்டைகள் விநியோகம்

## தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி என அரச அதிபர் தகவல்



யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

இரு மாவட்டங்களிலும் 64.82 வீதமான வாக்காளர் அட்டைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. யாழ்.தெரிவத்தாட்சி அலுவலரான யாழ். அரச அதிபர் கே.கணேஷ் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

**வாக்காளர் அட்டைகள் விநியோகம்**

மொத்த வாக்காளர் எண்ணிக்கை - 721,359 யாழ்.மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை - 630,548, கிளிநொச்சி மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை - 90,811, தபால் மூலம் வாக்களித்தோர், இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கான விண்ணப்பங்களுக்குரிய வாக்காளர் அட்டைகள் நீக்கப்பட்டுத் தற்போது விநியோகிக்கப்படும் வாக்காளர் அட்டைகளின் விவரம் அடியில் தரப்பட்டுள்ளது.

இற்றைவரை வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது தபால் நிலையத்திற்குச் சென்று 2010.01.26 ஆம் திகதி பிற்பகல் 4 மணி வரை தமது ஆள் அடையாளத் தைக் காண்பித்து வாக்காளர் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். .தற்போது கணிசமான அளவு இடம் பெயர்ந்த வாக்காளர் வதிகின்ற வலிகாமம் பிரதேசத்திற்கான வாக்காளர் அட்டைகள் மருதனார்மடத்தில் இயங்கும் தெல்லிப் பழை தபால் நிலையத்திலும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் குடத்தனை உப தபால் நிலையத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டைகளை மேற்குறிப்பிட்ட இரண்டு தபால் நிலையத்திலும் ஆள் அடையாள அட்டையைக் காண்பித்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**வாக்களிப்பதற்கான விசேட அடையாள அட்டை**

தேர்தல் திணைக்களத்தினால் வாக்களிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள ஆவணங்கள் வருமாறு:-

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கால எல்லையைக் கொண்ட கடவுச்சீட்டு
3. செல்லுபடியான கால எல்லையைக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம்
4. ஓய்வூதிய அடையாள அட்டை
5. முதியோர் அடையாள அட்டை
6. ஆள்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வணக்கத்திற்குரிய குருமா ருக்கான அடையாள அட்டை
7. ஆள்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை
8. தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை

இந்த 8 ஆவணங்களையும் வைத்திராத வாக்காளர்ககளுக்காக யாழ். மாவட்டத்தில் விசேட அடையாள அட்டைகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஊடாகச் செய்யப்பட்டு, இற்றை வரை 13,059 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**வாக்களிப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடு**

யாழ். மாவட்டத்தினுள் வழமையாகப் பொதுப் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்திருக்கின்ற வாக்காளர்களுக்காக தேர்தல் திணைக்களத்தினால் விசேட போக்குவரத்து வசதிகள் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்திற்குச் செல்லவிருக்கின்ற வாக்காளர்களுக்கும், வன்னி தேர்தல் தொகுதிக்குச் செல்லவிருக்கின்ற வாக்காளர்களுக்கும் ஏ-9 வீதியூடாக இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படும். இதற்குரியவிவரமான அறிவித்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட பத்திரிகைகளில் பிரசுரமாகும். அதே போன்று வவுனியாவிலிருந்தும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களின் வாக்காளர்களுக்கும் மாத்திரம் இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படும்.

**வாக்களிக்கும் நேரம்**

வாக்களிப்பு காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

**வாக்குகளை அடையாளமிடும் ஒழுங்கு முறை**

ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்ற காரணத்தினால் வேட்பாளர் ஒருவருக்கு வாக்கொன்றையும், இரண்டு வேறு வேட்பாளர்களுக்கு இரண்டாம் விருப்பையும், மூன்றாம் விருப்பையும் அடையாளமிட முடியும். இது சம்பந்தமாகத் தேர்தல்கள் ஆணையாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடகங்களுக்கான அறிவிப்பு இலக்கம்-26 இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையம் யாழ். மத்திய கல்லூரியிலும், தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் உள்ளவர்களுக்கான வாக்கெடுப்பு நிலையம் புனர்வாழ்வு நிலையத்திலும், பனை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளவர்களுக்கான வாக்கெடுப்பு நிலையம் அதே இடத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

**வாக்கு எண்ணும் நிலையங்கள்**

யாழ். மாவட்டத்திலுள்ள 11 தேர்தல் தொகுதிகளுக்கான 22 வாக்கெண்ணும் நிலையங்கள், அஞ்சல் வர்க்குகளை எண்ணும் நிலையம், இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வாக்குகளை எண்ணும் நிலையம் என மொத்தம் 24 வாக்கெண்ணும் நிலையங்கள் மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்குகள் எண்ணும் பணி மாலை 4 மணிக்கு ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சகல தேர்தல் கடமைகளுக்குமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும். (1-224)

| மாவட்டம் | தபால் திணைக் களத்திடம் கையளிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் | விநியோகிக்கப் பட்ட வாக்காளர் அட்டைகள் | விகிதாசாரம் | மீதியாகவுள்ள வாக்காளர் அட்டைகள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 625,986 | 450,685 | 72% | 175,301 |
| கிளிநொச்சி | 84,449 | 9,826 | 11,64% | 74,623 |
| மொத்தம் | 710,435 | 460,511 | 64,82% | 249,924 |

# சங்கானை மயானத்தில் காணப்படும் கழிவுகள் விரைவில் அகற்றப்படும்

## வலி. மேற்கு பிரதேச செயலர் நடவடிக்கை

சங்கானைப்பிரதேசத்தில் உள்ள கரைச்சி மயானப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள திண்மக்கழிவுகள் முழுமையாக நவீன தொழில்நுட்பத்தின் கீழ் புதைக்கப்படவுள்ளன.

வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் மிக விரைவில் இந்தப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டத்திற்கு சங்கானைப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சங்கானை கரைச்சி மயானப்பகுதி திண்மக்கழிவுகள் முழுமையாக அகற்றிய பின்னர் வேறு ஓர் இடத்தில் கழிவுகளை கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேசசபை செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார். (ஒ-302)

# கோயில் குளக்கட்டு சேதம்; நீர் முற்றாக வற்றும் அபாயம்

கோப்பாய் பலானை அம்மன் கோயில் குளக்கட்டின் புனரமைப்பு வேலைகள் இவ்வருடமும் மேற்கொள்ளப்படாமையால் அதிலுள்ள நீர் முற்றாக வற்றும் சாத்தியம் உள்ளதாக பிரதேச விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 1993 ஆம் ஆண்டு சிறந்த முறையில் இக்குளக்கட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் இதுவரை உரிய முறையில் பழுதுபார்க்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

மேலும் கடந்த காலங்களில் விஷமிகள் இதனை உடைத்துச் சேதமாக்கிய போதும் ஆலய பரிபாலன சபையினர் திருத்தம் செய்திருந்தனர். ஆனால் இதனால் உரிய பயன் கிட்டவில்லை என்பது இப் பிரதேச விவசாயிகளின் கவலையாகும். (50-72)

# யாழ்ப்பாணப் பிரதம தபாலகத்தில் மட்டும் 49 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன.23

பெயர், முகவரி என்பன தெளிவின்மையால் யாழ்.பிரதம தபாலகத்தில் மட்டும் 49 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படாமையால் தேங்கியுள்ளன.

யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் இந்த தகவலை தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். பிரதம தபாலகத்தினால் நேற்றுக் காலை வரை 63 ஆயிரம் வாக்காளர்கள் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் அட்டைகளில் பெயர்கள் மற்றும் முகவரிகள் தெளிவாக இல்லாத காரணத்தினால் அவற்றை விநியோகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. சில விலாசங்களில் இருப்பிடங்களில் வாக்காளர் அட்டைக்குரிய வாக்காளர்கள் இல்லை. இதனால் அவற்றை உரியவர்களிடம் சேர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் 49 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்க முடியாமல் யாழ். பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளன. இவற்றைத் தபாலகத்தில் வைத்து விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தபாலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50- 224)

# கைதடியில் நேற்று தேர்தல் பிரசாரக்கூட்டம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கோரித்தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்று நேற்று பிற்பகல் கைதடி இணுங்கித் தோட்டப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பிரசாரக் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர், தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.திருச்செந்தூர்நாதன், கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (50-288)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**

மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். புதியவர்களை நம்பிப் பணப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் யோசனை கேட்கலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்குக் கூடும்.



**இடபம்**

புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புதுமைகள் படைக்கும் நாள். நண்பர்கள் சிலருக்காக மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று சுமுகமாக முடிவுக்கு வரும். மூத்த உடன் பிறப்புக்களால் அனுகூலம் பெறலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்புகள் உண்டு. இனிமையான நாள்.



**மிதுனம்**

எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து ஏற்றம் பெறும்நாள். நேற்றுச் செய்ய மறந்த சில வேலைகளால் இன்று அவதிகளுக்கு ஆள்படலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். நெடு நாள்களாக மனதில் நினைத்திருந்த காரியம் ஒன்று இன்று நிறைவேறும். மாலை நேரத்தில் சிறிய அளவிலான பணவரவுகளைப் பெறலாம்.



**கடகம்**

சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்களைக் குறைகூறாமல் அனுசரித்துச் செல்ல வேண்டும். வெளியூர் பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர் ஒருவரை திடீரெனச் சந்திக்கலாம்.



**சிங்கம்**

வாக்குவாதங்களை, பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக அலைய நேரிடலாம். வியாபாரிகள் வேலையாள்களின் திடீர் விடுப்பால் பிரச்சினையைச் சந்திக்கலாம். எளிதில் முடிந்து விடும் என நினைத்து தொடங்கிய வேலைகளில் இழுபறி ஏற்படலாம்.



**கன்னி**

சுபசெலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொள்வீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பெற்றோர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். காலை முதல் மாலை வரை உற்சாகமாகச் செயற்படுவீர்கள். தொலைபேசி வழியில் கேட்கும் செய்தியால் மகிழ்ச்சியடையலாம்.



**துலாம்**

போட்டி, பந்தயங்களில் வெற்றிபெறும் நாள். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். தாய் வழி உறவினர்களால் அனுகூலம் பெறலாம். அலைந்து திரிந்து முடிக்க நேரிடும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம்கூடும்.



**விருச்சிகம்**

வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். மற்றவர்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவு உண்டு. தொழில் ரீதியான பிரச்சினை ஒன்றை நினைத்து அதிக அளவில் கவலை அடைவீர்கள்.



**தனுசு**

உங்களைப் பாராட்டுவது போல சிலர் விமர்சிக்கலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உங்கள் பிள்ளைகளின் செயற்பாடுகள் பற்றி அயலார் குறை கூறுவர். ஆதாயமில்லாத அலைச்சல்களால் அவதிகளுக்கு ஆள்படலாம். நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர்களைப் பார்க்கலாம்.



**மகரம்**

உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். நினைத்த காரியங்கள் மட்டுமின்றி, நினைக்காத சில காரியங்களும் நடக்கலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும்.



**கும்பம்**

பிள்ளைகள் விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நேற்றுச் செய்த தவறு ஒன்றால், இன்று பிரச்சினை உருவாகலாம். விருப்பம் இல்லாமல், சில செலவுகளைச் செய்யலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும். புதியவர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம்.



**மீனம்**

எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். புதியவர்களின் நட்பைப் பெறலாம். நண்பர்கள் சிலர் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசலாம். நாளை நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று இன்றே நடந்து விடலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். சிலர் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பீர்கள்.





## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701178246 முதல் 701194885 வரை. சீட்டிழுப்பு இல. 616 திகதி 21-01-2010

வெற்றி எண்கள்

**17 18 55 57** ஆங்கில எழுத்து **U**

**ஜக்பொட் பரிசு ரூ. 11,901,310/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,901,310/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 18 | 2,000/= | 36,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 363 | 1,000/= | 363,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 546 | 1,000/= | 546,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14585 | 60/= | 875,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6618 | 40/= | 264,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 170699 | 20/= | 3,413,980/= |
| | | மொத்தம் ரூ. | 5,898,800/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - A.A. பிரசன்ன - மஹரகமை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - L.G. நில்மினி நிஷாந்தி லேனகம - தெல்கொட.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,298,800/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 701186236-4-19 |
| திருகோணமலை | 701189085-2-49 |
| பதுளை | 701183384-0-23 |
| கம்பஹா | 701178347-8-46 |
| மொணராகலை | 701179471-1-40 |
| கம்பஹா | 701193673-8-47 |
| மாத்தறை | 701182413-6-27 |
| கேகாலை | 701189943-8-42 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 12,362,950/=

தொடர் இல. 601205718 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜனவரி 25 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7



# முதலாம் ஆண்டு நினைவு தினம்



அமரர்

## ஆறுமுகம் திருநாவுக்கரசு

மண்ணில்: 20.06.1951
விண்ணில்: 02.02.2009
திதி: அட்டமி

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்:
**மனைவி, தாய், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
22, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(94165)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் ஜனாதிபதி வேட்பாளர்களைச் சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன.23

தேர்தல் ஆணையாளரின் அழைப்பை ஏற்று இலங்கை வந்துள்ள சர்வதேச கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் 21 ஜனாதிபதி வேட்பாளர்களையும் சந்திக்கவுள்ளனர். அதனைத் தொடர்ந்து மாவட்ட மட்டத்திலான முகவர்களையும் சந்திக்கவுள்ளனர்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்களின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி தேர்தலைக் கண்காணிக்கவென சர்வதேச கண்காணிப்புக் குழுக்களுக்கு தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பு, பொதுநலவாய நாடுகளின் சபை, ஐரோப்பிய ஒன்றியம், ஆசிய நாடுகளின் தேர்தல் அதிகாரிகள் சங்கம் என்பவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இவற்றில் ஐக்கிய நாடுகளின் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கைக்கு வரமுடியாது என்பதைக் காரணங்களுடன் தெரிவித்துள்ளன. இரண்டு சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் தேர்தல் முடிவின் பின்னர் 28 ஆம் திகதி தங்களது அறிக்கையைத் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கும் என்றும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவிக்கிறது.

பொதுநலவாய நாடுகளின் சபை மற்றும் ஆசிய நாடுகளின் தேர்தல் அதிகாரிகளின் சங்கம் என்பன இந்தத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

பொதுநலவாய நாடுகளின் சபையின் கண்காணிப்புக் குழுக்கள், அந்த நிறுவனங்களினாலேயே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் காண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளன. ஆசிய நாடுகளின் தேர்தல் அதிகாரிகளின் ஒன்றியம் தேர்தல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும். (50)

## செந்தாரகைப் படகை மீண்டும் சேவைகளில் ஈடுபடுத்தக் கோரிக்கை

குறிக்கட்டுவானுக்கும் நயினாதீவுக்குமிடையே சேவையில் ஈடுபட்டு வந்த செந்தாரகைப் படகினை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு நயினாதீவு மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான இப்படகு ஏனைய படகுகளைவிட மிகப்பெரியதாகும்.

கடந்த ஆண்டு அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் கீழ் முப்பது இலட்சம் ரூபா செலவில் இது புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஆனால் இப்படகு அதிக இரைச்சலை வெளியிட்டதோடு அதிக எரிபொருள் பாவனையையும் கொண்டிருந்தமை யால் மீண்டும் புனரமைப்புச் செய்த பின்னரே சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ளது.

எனவே உரியவர்கள் விரைவான நடவடிக்கை மேற்கொண்டு இதனை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நயினாதீவு மக்கள் கோரியுள்ளனர். (188)

## சமூக பாதுகாப்பு நிலையம் திறப்பு

நவாலி, ஜன.23

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சமூக பாதுகாப்பு நிலையக் கட்டடமொன்று கடந்த 18 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் முரியதாசன் ஜெகூ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்துள்ளார்.

தற்போது இக்கட்டடத்தில் சமூக சேவைப் பகுதி அலுவலகம், உதவிப் பிரதேச செயலர் அலுவலகம் என்பன கீழ் மாடியிலும், மேல்மாடியில் சிறுவர் பாதுகாப்பு அலுவலகமும் இயங்கி வருகின்றன. (50-100)


# அரசாங்கத்தின் தொலைக்காட்சிகளில் ஜனாதிபதி மகிந்தவுக்கே முக்கியத்துவம்

### எல்லைகளற்ற அமைப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.23

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் 21 பேர் போட்டியிடுகின்ற போதிலும் அரச தொலைக்காட்சிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அரச தொலைக்காட்சிகளில் கடந்த 18 ஆம், 19 ஆம் திகதி நிகழ்ச்சி நிரல்களில் 98.5 வீதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பாகவும் அவரது ஆதரவாளர்கள் தொடர்பான நிகழ்ச்சிகளுமே ஒளிபரப்பப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளதுடன் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது. (50)



ஹோமாகம, தியகமவில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்த பின்னர் மைதான வாகனத்தில் ஏறி, ஓடு திடலைச் சுற்றி வந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் மேடையில் தோன்றப் போவதில்லை என்கிறார் சந்திரிகா



கொழும்பு,ஜன.23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அத்தனகல தேர்தல் பிரசார மேடையில் தாம் தோன்றப்போவதாக வெளியான வதந்திகளில் எவ்வித உண்மையுமில்லையென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அத்தனகலத் தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இக்கருத்தை தெரிவித்ததாக சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

அவ்வாறான எதுவித எண்ணமும் தம்மிடமில்லையென்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மேடையில் தாம் பேசப் போவதில்லையென்றும், ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் தாம் இணையவில்லையென்றும் கூறிய அவர், எதிர்காலத்தில்கூட அவ்வாறு இணையும் எண்ணமும் தம்மிடமில்லையென்றும் தெரிவித்தார். (50)

# பொன்சேகாவுக்கு வாக்களிக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் தமிழ் மக்கள்

### சி.வி.கே.சிவஞானம் கூறுகிறார்



யாழ்ப்பாணம்,ஜன.23

எதிர்வரும் 26 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் ஏகத் தெரிவாக ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு வாக்களித்துத் தெரிவு செய்ய வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் தமிழ் மக்கள் உள்ளனர்.

இவ்வாறு தமிழரசு கட்சியின் மாவட்ட வாழ்வாதாரப் பொருளாதார அபிவிருத்திக்கான துணைச் செயலாளரான சி.வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விருப்பு வாக்கு அடிப்படையில் மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களைத் தெரிவு செய்யக் கூடிய சந்தர்ப்பம் உள்ள போதிலும்,தமிழ் மக்கள், வேட்பாளர் சரத்பொன்சேகாவை அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யும் அதேவேளை ஏனைய இரண்டு தெரிவுகளையும் மேற்கொள்ளாது தவிர்க்குமாறு தமிழ் மக்களிடம் மிகுந்த பொறுப்புணர்வுடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலத்தின் தேவை கருதி இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் மிகச் சிறப்பாக முடிவெடுத்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு -என்றார் அவர். (50-14-11)

# புலிகளை விட்டு கருணா விலக ஐ.தே.க.காரணமல்லவாம்

### அவரே இதனை உறுதிப்படுத்துகிறார்

கொழும்பு, ஜன.23

புலிகள் இயக்கத்துக்குள் 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிளவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்று தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்துத் தெரிவித்தவை வருமாறு:-

புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்ட பிளவின் பின்னணியில் ஐ.தே.க.தலைவர் இல்லவே இல்லை.நான் எனது சுய விருப்பத்தின் பேரிலேயே புலிகள் இயக்கத்தை விட்டுப் பிரிந்தேன். நான் இயக்கத்தை விட்டுப் பிரிந்து வந்ததும் அன்றைய ஐ.தே.க.அரசு எனக்குப் பல சலுகைகளைத் தர முயன்றது. ஆனால் இன்று என்னைக் 'கொலைகாரன்' என்றும் 'துரோகி' என்றும் அக்கட்சியே கூறுகின்றது.

நான் அமைச்சுப் பதவிக்கு அருகதை அற்றவன் என்று ஐ.தே.கவும், ஜே.வி.பியும் பிரசாரம் செய்து வருகின்றன- என்றார். (சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபீட்சமான ஓர் எதிர்காலத்தை நோக்கி.....

## தமிழ் பேசும் மக்களின் சிந்தனைக்காக... !

தேர்தலொன்றை எதிர்நோக்கி இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தமிழ் பேசும் மக்கள்மீது அரசாங்கம் கொண்டிருக்கும் அக்கறை தொடர்பில் தமிழ் பேசும் மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பொது வேட்பாளர் சரத் பொன்சேகா அவர்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்து தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவுடன் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளும் அபிவிருத்தி செயற்திட்டங்களை தெளிவுபடுத்திய பின்னா அவர் மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பைப் பெற்றுள்ளார் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இதற்கு அஞ்சிய இந்த அரசாங்கம் தற்போது மக்களை ஏமாற்றும் வழியில் ஈடுபட்டுள்ளது என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக** ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் நிலைப்பாடு என்ன? இதோ பதில்..........

**"இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே தீர்வு முன்வைக்கப்படும் , அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பிற்கே முன்னுரிமை வழங்கப்படும்" (15.01 2010 தினகரன்) என்று கூறும் ஜனாதிபதியின் கூற்றை ஆளமாக சிந்தித்துப் பாருங்கள்.**

- இந்த செய்தியின் மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க இந்த ஜனாதிபதி தயார் இல்லை என்ற விடயத்தை புத்திஜீவிகளான உங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியதில்லை.
- இடம்பெயர்ந்த அப்பாவி மக்களை பல மாதகாலமாக ஈவிரக்கமின்றி முட்கம்பிகளுக்குள் அடைத்து வைத்திருந்துவிட்டு தேர்தலை எதிர்நோக்கிய பின் மாத்திரம் கட்டம் கட்டமாக விடுதலை செய்வதன் நோக்கம் என்ன?
- இவ்வாறானவர்கள் ஆட்சிபீடமேறும் சந்தர்ப்பத்தில் இந்த மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பதில் என்ன உறுதித் தன்மை காணப்படுகிறது.
- கடந்த மாநகரசபைத் தேர்தலில் உங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சற்று மீட்டிப் பாருங்கள்.
- யுத்தத்தின் போது சரணடைந்த பத்தாயிரத்திற்கும் அதிகமான இளைஞர் யுவதிகள் இன்னும் சிறையில் துன்பப்படும் போது எழுநூறு பேரை மாத்திரம் விடுதலை செய்த்தன் நோக்கம் என்ன?
- இவர்கள் ஆட்சிபீடமேறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் இந்த இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட மாட்டார்கள் என்பதில் என்ன உறுதித் தன்மை காணப்படுகிறது.
- இவ்வளவு காலமாக மூடியிருந்த ஏ-9 வீதியை தற்போது திறந்துவிடப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன ?
- இவர்கள் ஆட்சிபீடமேறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் 27 ஆம் திகதியிலிருந்து ஏ-9 பாதையை மூடிவிட மாட்டார்கள் என்பதையும், கட்டுப்பாடுகள் விதிக்கப்படமாட்டாது என்பதனையும் கடுகளவேனும் நம்ப முடியுமா?.
- முழு உலகையும் ஏமாற்றிக் கொண்டு "வடக்கின் வசந்தம்", "கிழக்கின் உதயம்" எனும் பெயர்களில் அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாட்டின் மூலம் நீக்கள் அடைந்த நன்மை தான் என்ன ?
- இவர்களின் ஏமாற்று விளையாட்டுக்கு நாம் மீண்டும் அகப்படுவதா?

சற்று சிந்தியுங்கள்...............

- சந்தேகத்தின் பேரில் அடைத்துவைத்துள்ள தமிழ்க் கைதிகளை விடுவிப்பதற்காக இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைதான் என்ன?
- ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்க பிரதிநிதிகள் உங்கள் பிரதேசங்களுக்கு வந்து முன்வைத்த செயற்றிட்டங்கள் தான் என்ன?.
- இற்றைக்கு 4 வருடங்களுக்கு முன்னரும் தமிழ், முஸ்லிம் மக்கள் முன்வந்து "இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களை மீள் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறியதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அதே வாக்குறுதியை இம்முறையும் அதே தொணியில் கூறியதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.
- இதன் மூலம் உங்களை மீள் குடியமர்த்துவதற்கு எதுவித திட்டமும் இல்லை என்பதை ஜனாதிபதி நிறுபித்துவிட்டார்.
- இவர்கள் இதற்கு முன்னரும் உங்கள் முன் வந்து தந்த வாக்குறுதிகள் எங்கே என்று சற்று திரும்பிப் பாருங்கள்.


எனவே .............

**நீங்கள் வேண்டி நிற்பது இவைகள் அனைத்திற்கும் நிரந்தரத் தீர்வே அன்றி தற்காலிக தீர்வு அல்ல.**

*இவைகளுக்கான நிரந்தரத் தீர்வு எதிர்வரும் 26 ஆம் திகதிக்குப்பின்னர் உங்களுக்கு கிட்டும் என்ற உறுதி பொது வேட்பாளர் சரத் பொன்சேகா அவர்களினால் தரப்பட்டிருக்கிறது.*

*இதற்காக எதிர்வரும் 26 ஆம் திகதி அதிகாலை சென்று அன்னப்பறவை முன் புள்ளடியிட்டு பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை வெற்றி பெறச் செய்யுங்கள்.*

**சுபீட்சமான ஓர் எதிர்காலத்திற்காக சரத் பொன்சேகா அவர்களுக்கு வாக்களியுங்கள்!**



X

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




16.05.1987

* யாழ். ஆஸ்பத்திரியை மூட அரசு எடுத்த முடிவுக்குத் தக்க காரணம் உண்டு என அரசின் முடிவை நியாயப்படுத்தி அமைச்சர் தொண்டமான் கருத்துத் தெரிவிப்பு.

* இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என மொரீஷியஸ் நாட்டுக் கல்வி அமைச்சர் ஆ.பரசுராமன் தெரிவிப்பு.

17.05.1987

* இந்திய அரசின் அழைப்பின் பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும், இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றும் புதுடில்லிக்குப் பயணம்.

* விடுதலைப் புலிகளால், சிறைப்பிடிக்கப்பட்ட இராணுவ வீரர்களை விடுவிப்பது குறித்து கப்டன் கொத்தலாவலை விடுதலைப் புலிகளுடன் பேசினார்.

18.05.1987

* நாம் பேச்சுக்கு முயற்சிக்கிறோம். நீங்கள் இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகிறீர்களா? உங்கள் முயற்சியை உடனடியாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என இந்திய அரசு இலங்கைக்குக் கண்டனம் தெரிவிப்பு.

* இலங்கைத் தமிழர் அமைப்புக்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையேயான புதிய சுற்றுப் பேச்சுக்கள் புதுடில்லியில் ஆரம்பம்.

19.05.1987

* அகிம்சை வழியில் அரசியலில் ஈடுபட்டால் ஜே.வி.பி மீதான தடையை நீக்க அரசு தயாராகவுள்ளதாக பிரதமர் பிரேமதாச தெரிவிப்பு.

* உத்தேச மாகாணசபைச்சட்டமூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பு.

20.05.1987

* சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றியது தவறாகப் போய்விட்டதென காணி அமைச்சர் காமினி திசாநாயகா ஒப்புக் கொண்டார்.

* இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்தை நடத்துவதனால் அதற்கு முன்னர் வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணித்தூதுக்குழு இந்திய இணை அமைச்சர்கள் குழுவிடம் வலியுறுத்து.

21.05.1987

* அரச படைகளுக்கு எதிராக மோதலில் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்டத் தளபதி ராதா உயிரிழப்பு.

* வளலாய்ப்பகுதியில் பாதுகாப்புத்தேடி பதுங்குகுழிகளில் இருந்த எட்டுப்பேரை அரச படையினர் சுட்டுக்கொன்றனர்.

22.05.1987

* தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். இலங்கைத் தமிழருக்கென ஒதுக்கிய நிவாரண நிதியில் 15லட்சம் பவுண் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் 15லட்சம் பவுண் ஈரோஸ் இயக்கத்துக்கும் வழங்கப்பட்டுள்ளதாக 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை தெரிவிப்பு.

* நாட்டில் வன்செயல்கள் முற்றாக ஒழிக்கப்பட்ட பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை எதனையும் ஆரம்பிக்க முடியுமென பிரதமர் பிரேமதாச மீண்டும் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

23.05.1987

* தமிழ் நாடு அரசு அயல் நாடான இலங்கைக்கு எதிராகச் சதி செய்த குற்றத்தை இழைத்திருப்பதாகவும் அதனை இந்திய மத்திய அரசு அனுமதிப்பது தவறாகும் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீது கண்டனம் தெரிவிப்பு.

* உரும்பிராய் பகுதியில் வான் தாக்குதல் மேற்கொண்ட விமானத்தில் அமைச்சர் ஒருவரும் இருந்துகொண்டு தாக்குதலை அவதானித்தாரா என வடபகுதி மக்கள் சந்தேகம் தெரிவிப்பு.

24.05.1987

* யாழ். குடாநாடு மீது இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்த இலங்கை அரசு தயாராகி வருவதாக பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவிப்பு.

* பொது மக்களைப் படுகொலை செய்து வரும் இலங்கைத் தீவிரவாத இயக்கங்களுக்கு நிதி உதவி செய்து வருவதால் தமிழ்நாடு அரசும் அப்படுகொலைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அதுலத் முதலி தெரிவிப்பு.

25.05.1987

* யாழ்ப்பாணத் தமிழர்களுடன் ஒருவித இணைப்பு கொண்டுள்ள மலையக இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சம்பவங்களைக் கேள்விப்பட்டு உணர்ச்சி வசப்படுகிறார்கள் என அமைச்சர் தொண்டமான் விவரிப்பு.

* தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்களை இந்திய அரசின் உடன்பாட்டுடன் தான் இலங்கை அரசு நடத்துகிறது என கொழும்பின் அரச சார்புப் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்திக்கு இந்தியத் தூதரகம் ஆட்சேபம் தெரிவிப்பு.

26.05.1987

* சுதுமலை, மானிப்பாய், வேலணை, சாவகச்சேரிப்பகுதிகளில் ஆறு பொம்பர்கள் கூட்டாக குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியதில் ஆறு பொதுமக்கள் பலி; பலர் படுகாயம் யாழ். நகரில் ஷெல் வீச்சினால் 8பேர் பலி; பலர் படுகாயம்.

* யாழ். குடாநாட்டை இராணுவ நடவடிக்கை மூலம் படிப்படியாகப் பிடித்து வருகின்றோம் என தேசியப்பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தெரிவிப்பு.

* இந்திய மத்திய அரசின் அனுமதிபெற்றே பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத்தமிழருக்கு உதவ தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி. ஆர். நிதி ஒதுக்கியதாக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவிப்பு.

27.05.1987

* யாழ்குடாநாட்டின் மீது காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதான அரசின் அறிவிப்பால் யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் பதற்றநிலை.

* போராளிகளது மறைவிடயங்களை மட்டுமே தாக்குகிறோம் என இலங்கை அரசு கூறினாலும் பொதுமக்களுக்குப் பாதிப்பின்றி இராணுவத்தாக்குதலை நடத்துவது சாத்தியமில்லை என இந்திய அரசு,ஜனாதிபதி ஜே.ஆருக்கு அறிவிப்பு.

28.05.1987

* இலங்கை அரச படைகளின் மும்முனைத் தாக்குதல்களுக்கு அஞ்சி வண்ணை சிவன் கோவிலில் தஞ்சமடைந்த பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் 7பொது மக்கள் பரிதாபமரணம்.

* யாழ்.குடாநாட்டின் மீதான ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கையும் ஜனாதிபதி ஜே. ஆரின் நேரடி உத்தரவின் பிரகாரமே நடத்தப்படுவதாக கொழும்பில் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவிப்பு.

29.05.1987

* யாழ்.குடாநாட்டின் மீதான இலங்கை அரச படைகளின் தாக்குதல்களை நிறுத்தக் கோரும் இந்தியப் பிரதமரின் வேண்டுதலை ஜனாதிபதி ஜே.ஆர் நிராகரிப்பு.

* விசேட விமான மூலம் புதுடில்லிக்கு விரைந்த தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர், மோசமடைந்துவரும் இலங்கைத் தமிழர் நிலை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தியிடம் எடுத்துரைப்பு.

* இலங்கையில் தமிழினம் பூண்டோடு அழிக்கப்பட்டு விடுமோ என எண்ணும் அளவுக்கு வடபகுதி நிலைமை மோசமடைந்து வருவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு.

30.05.1987

* இலங்கை அரச படையினர் விசேட விமானமொன்று நாவற்குழி இராணுவ முகாமை அண்டிய பகுதியில் மோதித்தரை இறங்கியது.

* இராணுவத் தாக்குதலை நடத்தத் தன்னைத் தயார் செய்து கொள்ளவே இலங்கை அரசு பேச்சுவார்த்தை எனக் காலத்தைக் கடத்தித் தம்மை ஏமாற்றி விட்டதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கண்டனம் தெரிவிப்பு.

* யாழ். குடாநாட்டின் மீதான இராணுவத் தாக்குதலை நிறுத்தமுடியாது என ஜனாதிபதி ஜே.ஆர். அறிவித்து விட்டதாக பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு

31.05.1987

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டுத் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க வேண்டுமென்ற கோரிக்கை தமிழ் நாட்டில் வலுப்பெற்று வருகின்றது.

* விமான எதிர்ப்பு ஆயுதங்கள் உட்பட பல நவீன ஆயுதங்கள் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்துள்ளதால் அரச படைகளுக்கு எதிரான அவர்களது தாக்குதல்கள் காத்திரமானதாக அமையப் போவதாக பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

* இந்தியாவின் ஆட்சிக்குள் இலங்கை அடங்கியிருக்கவில்லை எனவும், இலங்கையுடனான தனது சிநேக பூர்வ உறவுகளைப் பாதுகாக்கும் விதத்தில் இந்தியா செயற்பட வேண்டுமெனவும் பிரதமர் பிரேமதாஸ தெரிவிப்பு.

# கிழக்கில் சிங்களக் குடியேற்றம் குறித்த சம்பந்தரின் கூற்றை மறுக்கிறார் ஆளுநர்

கொழும்பு, ஜன. 23

கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் மொஹான் விஜே விக்கிரம முழுமையாக மறுத்துள்ளார்.

அரசியல் லாபம் பெறுவதற்காக இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் பரப்பி வருகின்றன எனவும் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளில் வேறு எவரும் குடியேற்றப்படமாட்டார்கள் எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

போர்ச் சூழல் காரணமாக கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர். அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்களின் புள்ளி விவரங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் இவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுகின்றனர். இந்தச் செயற்பாட்டில் எதுவித அரசியல் தலையீடும் இடம்பெறுவதில்லை எனத் தெரிவித்த அவர்,

வேறு பகுதிகளிலிருந்து சிங்கள மக்கள் அழைத்து வரப்பட்டு கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளில் ஒருபோதும் குடியேற்றப்படவில்லை எனவும் -

சட்டவிரோதமான மீள்குடியேற்றங்கள் இடம்பெற்றிருந்தால் அது குறித்து அந்தப் பிரதேச அரச அதிபரிடமோ பிரதேச செயலாளரிடமோ முறையிடலாம் என்றும் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறைகள் குறித்து ஐ.நா. செயலாளரும் கவலை

கொழும்பு, ஜன. 23

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அதிகரித்துக் கொண்டே செல்லும் வன்முறைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் நேற்றுமுன்தினம் கவலை தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள், அவர்களின் ஆதரவாளர்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றமையைத் தவிர்க்க வேண்டும் என்றும், தேர்தல் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

போருக்குப் பின்னர் இலங்கையில் நாடளாவிய ரீதியில் முதன்முதல் இடம் பெறுகின்ற இத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

இத் தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்துகின்றமை மூலமாகவே நாட்டில் நிலையான சமாதானத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவது சாத்தியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

# லசந்தவின் கொலையை நேரில் கண்ட சாட்சியை விசாரிக்க நீதிமன்று அனுமதி

கொழும்பு, ஜன. 23

'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்ட போது, அதனை நேரில் பார்த்த சாட்சி ஒருவர் இருக்கிறார் எனவும் அவர் பற்றிய தகவல்களை வெளியிட முடியாது எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர் எனக்கூறப்படுகிறது.

இந்தக்கொலை தொடர்பான விசாரணைகள் கல்கிசை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சாட்சியாளரிடம் தாங்கள் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனவும் மேலதிக விசாரணைகளை நடத்த நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சாட்சியாளரிடம் விசாரணை நடத்த அனுமதி வழங்கிய நீதிவான் ஹர்ச சேதுங்க, வழக்கு விசாரணைகளை எதிர் வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

மிரிஹான மற்றும் கல்கிசைப் பொலிஸாரால் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வந்ததுடன் அண்மையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

# வலி. மேற்கில் பிரதேச சபையினரின் டெங்கு ஒழிப்புப் பிரசாரம் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.23

வலிகாமம் மேற்குப்பகுதியில் பலர் டெங்கு நோய்க்குட்பட்டதைத் தொடர்ந்து இதுபற்றிய விழிப்புணர்ச்சிப் பிரசாரம் பல்வேறு வகைகளில் எடுக்கப்பட்டு வருகின்றது. வீட்டையும் சுற்றாடலையும் துப்புரவாக வைத்திருக்குமாறும் சிரட்டை, பழைய தகரங்கள் மூடப்படாத ரின்கள் போன்றவற்றை வெட்டிப் புதைத்துவிடுமாறும் காய்ச்சல் அறிகுறி காணப்படுகிறவர்கள் அண்மையில் உள்ள வைத்தியசாலையில் உடனடியாகச் சிகிச்சை மேற்கொண்டு டெங்குநோய் அபாயமுள்ளதா எனப்பரிசோதிக்குமாறும் ஒலிபெருக்கிகள் மூலம் பிரதேசசபையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் இது சம்பந்தமான இறுவட்டு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதிகளில் இயங்கிவரும் தனியார் கேபிள் தொலைக்காட்சி உரிமையாளர்களிடம் இவ் இறுவட்டு விநியோகிக்கப்பட்டு நிகழ்ச்சிகளின் விளம்பர நேரத்தில் அடிக்கடி இவ் இறுவட்டில் உள்ள காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. டெங்கு பரவும் விதம், டெங்கின் அறிகுறிகள், நோய் பாதிப்புக்குள்ளானவர்கள் மேற்கொள்ளவேண்டிய அவசர சிகிச்சை பற்றி விளக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பகுதி மக்கள் இதனை ஆர்வத்துடன் பார்த்துவருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. (4-29)

# சங்கானை மண்டிகைக் குளத்தில் செந்தாமரை பரம்பல்

சங்கானை,ஜன.23

சங்கானை மண்டிகைக்குளத்தில் செந்தாமரைப் பூக்களின் பரம்பல் கூடுதலாக உள்ளது.

விவசாயத்தேவைக்குப் பயன்படும் குளத்து நீரில் இப் பூக்களின் பரம்பலால் , விவசாயிகள் தமது வயல் தேவைக்கென இப்பகுதியின் மூலம் நீரைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அத்துடன் குளத்தில் இறங்கி பூப்பறிக்கும் போது செந்தாமரையில் சொரு சொருப்பான வேர்ப்பகுதியில் கால்கள் சிக்கி உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டோர் ஆரம்பத்திலே இக் கொடிகளை அகற்றாவிடில், குளம் நிறைய இக் கொடியுடன் கூடிய வேர் பரவிவிடும் ஆபத்தும் நிறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (1-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டிய வளர்ச்சிக்கு "கட்புல", "செவிப்புல" சாதனங்களின் பங்களிப்பு

தேவந்தி சிவநேசன்

பன்னெடுங்காலமாக இந்து சமய நிழலிலே கலைகள் மிக நேர்த்தியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. வேதாகமமுறைப்படி அமைக்கப்பட்ட கோயில்கள் சமய உணர்வினைப் புகட்டும் நிலைகளாக மட்டுமன்றி கவின்கலைகளை வளர்க்கும் நிலையங்களாகவும் மிளிர்ந்தன. இவ்வாறு வளர்க்கப்பட்ட கலைகளில் இசையும், நடனமும் பிரதான ஓர் இடத்தினைப் பெற்றுள்ளன. இவ்வாறு இசை, நடன மரபுகளை ஒருங்கே கூறும் காலத்தில் முந்திய நூல் பரதருடைய நாட்டிய சாஸ்திரமாகும். இந்திய நாட்டியம் பற்றிய மூலநூல் என்றவகையிலும் இதன் முக்கியத்துவம் குறிப்பிடற்பாலது. பல்லவர், பாண்டியர் காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் அக்கால சமய, பக்தி நெறியினை மிகவும் எளிமையான முறையில் வெளிப்படுத்தினர். இவ்வாறு நிலவிய பக்தி இயக்கத்திலே ஆடலும், பாடலும் இறைவனை ஏத்தி இகபர நன்மைகள் பெறுவதற்கான சிறந்த சாதனங்களாகக் கருதப்பட்டன.

இவ்வாறு வளர்த்து எடுக்கப்பட்ட கலையானது அன்று தொட்டு இன்று வரை விழிக்கும், செவிக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் இனிய பொக்கிஷமாகத் திகழ்கின்றது. இந்தளவிற்கு நாட்டியமானது பிற்காலத்தில் வளர்ச்சி பெற்று மிளிர விஞ்ஞான தொழில் நுட்ப வசதிகளும் ஒரு காரணமாக அமைவதுடன், நாம் பார்த்தும் கேட்டும் ரசிப்பதற்குக் கட்புல, செவிப்புல, செவிப்புல சாதனங்கள் வசதியாக அமைந்துள்ளன. இவ்வாறான கட்புல, செவிப்புல, சாதனங்கள் ஒவ்வொரு கலைஞனினதும் கலை வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகிறது எனலாம்.

இச் சாதனங்களுள் செவிப்புல சாதனங்களை எடுத்து நோக்குவோமானால் இதில் பிரதானமாக இடம் பெறுவது வானொலி, ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் ஒரு கலைஞர் அல்லது மாணவன் தன் கலையார்வத்தினை வளர்த்துக்கொள்ள முடியும்.

ஒரு நடனக் கலைஞன் ஆவதற்கு சிறந்த பாவம், லயம் என்பவற்றில் முக்கியமாக ஞானம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் இராக, பாவம் ஒருவரது மனதில் நன்கு பதிந்தால் இரசபாவத்தினை நன்கு இரசனையோடு செய்யக்கூடியதாக இருக்கும். பலவிதமான ராகம், லயவின்னியாசப் பாடல்களினூடாக கேட்டு லய ஞானத்தைக் கூட்டிக் கொள்ள முடியும். பிரபல்யமான கலைஞர்களின் நாட்டியக் கச்சேரிகளில் பாடப்பட்ட பாடல்களை தாளஜதியுடன் கேட்டு இரசிப்பதாலும் லயஞானம், இசைஞானம் என்பவற்றைப் பெற்று நாட்டியத்தில் ஓர் உன்னத நிலையினைப் பெறமுடியும்.

அத்துடன் ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தலின்போது நாட்டியப்பாடல்களை மாணவர் மத்தியில் ஒலிப்பேழையில் போட்டுக்காட்டி அதை செவிமடுக்கச் செய்யலாம். அதன் பின் அவர்களுடன் கலந்துரையாடி அவர்களது கலாரசனையினையும், பாடும் திறனையும் அதிகரிக்கச்செய்யலாம். ஒலிப்பதிவு நாடாக்கள் உதவியுடன் தேவையான நாட்டியப் பாடல்கள், ஜதிகள் லயவிந்நியாசங்கள் என்பவற்றைக் கேட்பதன் மூலமும் பாடவிடயம் தொடர்பாக பல நுட்பங்களை ஒலிப்பதிவு செய்து ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் லயஞானம் குறைந்த மாணவன் இவ்லயத்துடனான இசைப்பதிவுகளை அடிக்கடி கேட்பதால் லயஞானத்தினைக் கூட்டிக்கொள்ள முடியும். இவ்விதம் புதிய பாடல்களை நாட்டியத்திற்கு தெரிவு செய்து நாட்டிய வடிவமைப்புச் செய்து ஆற்றுகை செய்ய முடியும். இவ்வாறு நாட்டிய வளர்ச்சிக்கு செவிப்புல சாதனம் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றது.

அடுத்து கட்புலசாதனங்கள் எந்த வகையில் நாட்டிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்றது என உற்றுநோக்குவோமேயானால், இக் கட்புல சாதனங்களில் நூலகப்பயன்பாடு, ஒளிப்பதிவு நாடா, கண்காட்சிகள், கணனி என்பன உள்ளடங்குகிறது. ஒரு கலைஞர் அல்லது மாணவன் நாட்டியத்தின் பெருமை, தொன்மை, வளர்ச்சி போன்றவற்றையும் நடனம் சம்பந்தமான தனக்குள் எழும் சந்தேகங்களையும் நாட்டிய நூல்களை வாசிப்பதனூடாகத் தனது பிரச்சினை, சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவதுடன் நாட்டியம் தொடர்பான அறிவினையும் வளர்த்துக் கொள்ள முடிகிறது. அத்துடன் சஞ்சிகைகள்,

# வீரமணி ஐயரின் நாட்டிய நாடகங்கள் பற்றி...

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நவரஸங்களையும் அதற்குரிய சந்தர்ப்பங்கள் இராகப் பிரயோகங்களை அறிந்து அதற்கேற்ப சாஹித்தியங்களை யாத்துள்ளார். பெரும்பாலும் சிருங்கார (காதல்) சுவை கொஞ்சும் பாடல்களை கமாஸ் காபி பரஸ் சுருட்டி போன்ற ராகங்களில் தந்திருப்பதைக் காணலாம். எடுத்துக் காட்டாக "கதிர்காம குறவஞ்சி நாட்டிய நாடகத்தில்" 'கமாஸ்' ராகத்திலமைந்த ஒரு பதப் பாடல் வரியினை பார்த்தால்.

"மையலும் மீறுதடி மயிலறும் வாரானோ?
தையல் எனையணைத்து தருவானோ பேரின்பம்
வையகம் மீதில் என்னை வதுவை செய்வானோடி
கையதில் வேலேந்தும் காளையிவன் யாரோடி?"

என்ற பாடல் வரிகளைக் கூறுலாம்.இதேபோன்று வீரம், கோபம், போன்ற ரஸங்கள் வெளிப்படும் இடங்களில் நாட்டை அடானா போன்ற ராகங்களையும் பயன்படுத்தியுள்ளார். ஒவ்வொரு ரஸத்திற்கும் அவ்வாறே கையாண்டுள்ளார்.

அது மட்டுமின்றி நிலையான உணர்ச்சிகளை விட (ஸ்தாயி பாவம்) குறிப்பிட்ட நேரங்களில் தோன்றிமறையும் உணர்ச்சி வெளிப்பாடுகளும் (வியபிசாரி பாவங்கள்) மஹாவித்துவானின் பாடல்களில் வெளிப்படையாக விளங்குவதும் ஓர் சிறப்பியல்பாகக் கொள்ளலாம். நாட்டிய அறிவின் காரணமாக நாட்டியத்திலே வெளிப்படுத்தப்படுகின்ற அபிநயங்களுக்கேற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் கையாண்டுள்ளார். உ-ம் ஸகியே, நாயகி மோஹம் அதி தைர்யம் போன்ற இன்றும் பலவற்றைக் கூறலாம். பல பாடல்களில் மூர்த்தி முத்திரை தலமுத்திரை பிரபந்த முத்திரை நாயக முத்திரை ராகமுத்திரை என்பவற்றுடன் ரஸமுத்திரையும் பிரபந்த முத்திரை நாயகமுத்திரை ராகமுத்திரை என்பவற்றுடன் ரஸ முத்திரையும் வெளிப்பட்டிருப்பதை காணலாம். அதாவது குறித்த ராகத்திற்குரிய ரஸம் பாடலில் வெளிப்படுவதை பாடலின் ரஸ முத்திரை என்பர்.பொதுவாக கிராமியப் பாடல்களை இயற்றும் போது அதன் சந்த இசைக்கும் மரபிற்கும் ஏற்றாற் போல் சில இராகங்களில் பாடப்படுவதுண்டு ஐயரது நாட்டிய நாடகங்களிலும் இது பின்பற்றப்பட்டுள்ளமையைக் காணலாம் உதாரணமாக ஆனந்த பைரவி, குறிஞ்சி, நாதநாமக்கிரியை போன்ற இராகங்களை இவ்வாறான இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

அடுத்து இவரது நாட்டிய நாடகங்களில் பல இடங்களில் நாட்டிய உருப்படிகளை யாத்திருக்கின்றார். தில்லானா என்பது நாட்டியக் கச்சேரியின் இறுதி நிருத்த நிகழ்வாக இடம் பெறுவது வழமை. இதனை தஞ்சை சகோதரர்கள் அமைத்த கச்சேரி முறையினூடாக காணலாம். மஹாவித்துவான் அவர்களின் ஒரு சில நாட்டிய நாடகங்களின் இறுதி காட்சி பகுதிகளில் அழகிய தில்லானாக்களை அமைத்துள்ளார். உதாரணமாக பக்த பிரகலாதன் நாட்டிய நாடகத்தின் இறுதி காட்சியிலும் (தேஷ், ஆதி) கர்ணன் நாட்டிய நாடகத்தில் காட்சி ஒன்றிலும் (தேஷ், ஆதி) அழகிய தில்லானாக்களை நாட்டிய நாடகக் கதைக் கருவுடன் இணைந்து சரணசாகித்தியங்களையும் செய்திருப்பார். அது போல பல பதப்பாடல்கள், கீர்த்தனங்கள், சப்தங்கள், பஜன்கள் என்பவற்றையும் தந்துள்ளார்.

குறவஞ்சி என்பது தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று ஆகும். தமிழில் முதன் முதலில் தோன்றிய நாடக வடிவம் என்றும் கூறலாம். இலக்கியச் சுவை, கிராமிய மணம்,காதற்சுவை எனப்பலசுவைகளைத் தன்னுள் கொண்ட வடிவமாக விளங்குகிறது. வீதியுலாவரும் இறைவனைப் பார்த்து அவன் அழகில் மயங்கிய காதல் மோஹத்தை விரதத்தை போக்குவதற்கு குறத்தி ஒருத்தி வந்து குறி சொல்லி ஆற்றுப்படுத்துவதே குறவஞ்சியின் முழுமையான கதையாக உள்ளது. குறத்தி இங்கு முக்கியம் பெறுவதால் (குற வஞ்சி =குறப்பெண்) குறவஞ்சி எனப் பெயர் பெற்றது என்பர். இத்தகைய குறவஞ்சியின் அமைப்பை பரத நாட்டியத்தின் கண் புகுத்தி நாட்டிய நாடகமாகத் தயாரித்து பலர் மேடையேற்றிய போதும் இம் முயற்சியில் முழுமையான வெற்றி கண்டவர் ஸ்ரீ மதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களே என்பதுஉண்மை இதன் காரணத்தினாலோ என்னவோ அவரது நெறிப்படுத்தலில் வளர்ந்த ஐயருக்கும் குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொடுத்தன. இவரது நாட்டிய நாடகங்களில் பல குறவஞ்சி அமைப்பானதே என்பது குறிப்பிடத்தக்கது. ஐயரவர்களின் குறவஞ்சி அமைப்பிலே கர்நாடக சங்கீதப் பாடல்கள் (ஆடல்வடிவங்கள்) நகைச்சுவைப் பாடல்கள், எனப்பலவகைப் பாடல்களால் ஆக்கப்பட்டிருக்கும் ஆரம்ப கலைகளிலே இறைவன் மீது பாடப்பட்ட குறவஞ்சி யாவும் பக்தியையும் பக்திசார்ந்து நாயகி இறைவனைச் சாரும் காதல் நிலையினையும் வெளிப்படுத்துகிறது. ஆனால் பிற்காலத்தில் (சோழர் காலத்தின் பின்னர்) மன்னர்களைச் சார்ந்து குறவஞ்சி எழுதப்பட அங்கு மானிட சிருங்கார ரஸத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. எனினும் முற்றுமுழுதாக பக்தியை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட குறவஞ்சியாக கண்ணப்பர் குறவஞ்சியைக் கூறுலாம். ஏனைய குறவஞ்சியின் கதையமைப்பிலிருந்து இது சற்று வேறு பாட்டாலும் குறவஞ்சிக்குத்தேவையான கதாபாத்திரங்கள் (குறவர்கள்) கொச்சை தமிழ் இலக்கியத்தமிழ் இசைநாட்டியம் கிராமியம் நாடகஇயல்பு எனபலவும் அடங்கியிருப்பது கவனித்தற்குரியது. கண்ணப்பர் குறவஞ்சியை இந்தியக்கலைஞர்களும். ஸாஹித்திய கர்த்தாக்களும் யாத்திருப்பினும் எமக்கு ஐயரின் ஸாஹித்தியமே வரப்பிரசாதமாகும். இயலாகவுள்ள தமிழ் பாடல்களை, இசையுடன் பாடி அபிநயம் பிடிக்கும் தன்மையால் முத்தமிழ் சுவைநிறைந்தது. குறவஞ்சியின் இயல் சிறப்பிற்கும், கிராமிய மணத்திற்கும் ஒரு பாடலடியைக் குறிப்பிடலாம்.

"வேலனுக்குப் பெண் கொடுத்த
வேடர்குல அம்மே!
விழி கொடுத்த கண்ணப்பன் எங்கள்
குலம் அம்மே!
கோலவள்ளி காந்தன்
கொண்டே வேடர் குலம்
அம்மே!
குறிசொல்லும் பரம்பரையும்
எங்கள் குலம் அம்மே!"

(கதிர்காம குறவஞ்சி நாட்டிய நாடகம்)

குறவஞ்சி தவிர்ந்த ஏனைய சில நாட்டிய நாடகங்களிலும் கிராமியப்பாடல்களை சேர்ந்திருக்கிறார். கிராமியஇசை, மற்றும் ஆடல் வடிவங்களான சிந்து வகைகள் (காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து) தெம்மாங்கு கும்மி, கோலாட்டம் எனப் பலதையும் தேவை ப்படும் இடங்களில் அமைந்திருப்பதைக் காணலாம். உதாரணமாக நந்தலாலா நாட்டிய நாடகத்தில் வரும் கண்ணனுடன் கோபியர்கள், யசோதையுடன் இணைந்து ஆடுவதாக ஓர் அழகிய கோலாட்டப் பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

"நந்தகோபால கோவிந்த
முகுந்தனுடன்
சுந்தரக் கோலாட்டம்
ஆடுவோமே
சந்தன, குங்கும சிந்தூட
அலங்காரன்
கந்தர்வவேத கீத ஸ்ருங்கார
கானவேலன்" என்பதைக் கூறலாம்.

வீரமணி ஐயர் பல்துறைசார் கலைஞர் நடனம். இசை என்பவற்றில் புதுமைகள் செய்ய வேண்டும் என்று நினைப்பவர். அதனால் எந்நேரமும் இச் சிந்தையிலே வாழ்பவர் தன் குருமார்களை எந்நேரமும் மறவாதவர் அதனாலேயே அவர் இத்தகைய புகழ் உச்சிக்கு செல்ல முடிந்தது. இந் நாட்டிய நாடகங்களுக் கென்று தனிச் சிறப்பு உண்டு. ஐயரின் அனைத்து நாட்டிய நாடகங்களையும் என் முன்னே காட்டி இன்னொரு தடவை அவற்றை முழுமையாக ஆய்வு செய்ய இறைவன் எனக்கு ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும் எனவேண்டி அந்த உன்னத கலைஞனை மனதில் நிறுத்தி முடிக்கின்றேன். (முற்றும்)

நாட்டியகலாவித்தகர்
உ.உமாமகேஸ்வரி (B.F.A)

உலகின் மிகப்பெரிய
உயரமான
மலைச்சிகரமான
எவரெஸ்டில் ஏறுவது
என்பது சாதாரண
விடயமல்ல. ஆனால்
அந்த எவரெஸ்டில் ஏறிய
எட்மன்ட் கிலாரியின்
சாதனை வரலாற்றில்
பொன் எழுத்துக்களா
பொறிக்கப்ப
வேண்டியதாகும்.மொத்த
இருபத்தொன்பதாயிர
அடி(29,000) பரமா
இந்தச் சிகரத்
உச்சியை 1953
ஆண்டு மே ம
29ஆம் தி
எட்மன்கி
முதன்முறை
டென்சிங்
மலையேறும் வீர
சென்றடைந்தார்.
எவரெஸ்ட் சிகர
தொட்டதால் உ
புகழ்மிக்க -பிரப
மனிதராக
இமய
தொட்டு
ஆனால் அ
தடைவை
மு
வெற்றியடைய
தனது இ
முயற்சிய
அவரால் வெற்
இவர்
ஆண்டு
29ஆம் திகதி
சிகரத்
மலையேறி
அந்தத்தட
தோல்
அவர் ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



பன்னாலை சேர் கனகசபை வித்தியாலய இவ்வாண்டுக்கான இலவச பாடநூல் வழங்கல் தொடர்பாக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், பாடசாலை அதிபர் சி.சிவராஜன் ஆகியோர் ஆலோசனை வழங்குவதையும் ஆசிரியர்கள் புத்தகங்களுக்கு உறையிட்டு பாதுகாப்பாக வழங்குவதற்கு ஒழுங்கு செய்வதையும் படத்தில் காணலாம்.



கடந்த 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையில் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் மானிப்பாய்க் கிளையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் க.சிவகுமாரன் மற்றும் வங்கியின் உத்தியோகத்தர்களுடன் பரிசில்பெற்ற அனைத்து மாணவர்களும் வங்கி ஊழியர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (50-9)





யாழ்.நகர்மைய றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை கணபதி முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் கழகத் தலைவியால் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



மானிப்பாய் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்து ஓய்வுபெற்ற மூத்த உறுப்பினர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட உறுப்பினர்களுடன் சங்கத்தின் பொது முகாமையாளர் க.சற்குணலிங்கம், தலைவர் அ.சரவணன், வலிகாமம் கெத்தணியின் தலைவர் அ.மெய்யழகன், பொது முகாமையாளர் க.சுதாகரன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம். (50-9-224)





சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் மூக்குக் கண்ணாடி பெற்ற பயனாளிகளுடன் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம். (50-207)



வலி.மேற்குப் பிரதேச சபையில் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் பிரதேச சபையின் செயலாளர் கு.புத்திசிகாமணி தலைமையில் இடம்பெறுவதையும் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜேர்மன் நிறுவன வடக்கு-கிழக்குக்கான ஆலோசகர் வோட்டர்கெலர் அலுவலர்களுடன் நிற்பதனைப் படத்தில் காணலாம். (படம்: இரா.சுதர)



கோப்பாய் தெற்கு ஜே/260 கிராம அலுவலர் பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை பதில் அதிபர் திருமதி ஜீவமலர் மகேந்திரன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் சமாதான நீதிவானுமான கி.தங்கவடிவேல் ஆகியோர் இணைந்து மாணவன் ஒருவனுக்கு கற்றல் உபகரணம் வழங்குவதனையும், சங்கத்தின் பொருளாளரும், எடிபூகெயர் கல்வி நிறுவன நிர்வாகியுமான சி.சதீஸ்[illegible] படத்தில் காணலாம். (படம்: உமா)



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் சாரணியர் தினமும் கண்காட்சியும் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் [illegible]ச.நாகராஜா, அதிபர் திருமதி கி.சிவராஜா ஆகியோர் நிகழ்வைப் பார்வையி[illegible]தைக் காணலாம். (50-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 25.04.1953
மறைவு: 24.12.2009

## திருமதி மகாலிங்கம் பரமேஸ்வரி

'அன்புடையார் எல்லாம் உடையார்'
அன்பாலும் பண்பாலும்
எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத்
தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு காலங்கள்
கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்முடன் வாழும்.

(94046)

இளையார் கிணற்றடி,
கொற்றாவத்தை, பொலிகண்டி.

குடும்பத்தினர்.

# ஈரவிழிகளுடன் 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் அருட்தந்தை

## இம்மானுவேல் யோசவ் அருமைநாயகம்

மலர்வு:
03★04★1957
உதிர்வு:
23★01★2000

எம் அருமைச் சகோதரனே
யார் இருப்பது யார் இறப்பது
என்பதல்ல விவாதம்
யாழ்.திருச்சபைக்கு நீ வித்து
என்பதுதான்
உன் இருப்பைப் பற்றிய
எங்களின் இறுதித் தீர்ப்பு

உன் பெயர் போல நீ
என்றும் எப்போதும்
எங்களுக்கு அருமையே....
சீவியத்திலும் நேசித்தோம்
மரணத்திலும் உம்மை
மறவாதிருக்கின்றோம்.

151, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

மகேந்திரன் அண்ணா குடும்பத்தினர்.
தேவியக்கா குடும்பத்தினர்.

(93813)

## அரியாலையில் பூங்கா புனரமைப்பு

அரியாலை நாகா கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்குச் சமீபமாக கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் அழிவடைந்திருந்த பூங்கா மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட மேற்படி பூங்காவை சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் சிறுவர் பணியகப் பொறுப்பாளர் திருமதி யமுனா பெரேரா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதிப்பணிப்பாளர் ஜயந்த பீரிஸ், 51 ஆவது படையணியின் அதிகாரி குமுது பெரேரா உட்பட பலர் கலந்துகொண்டனர்.(1-111)


### வீடுவளவு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்குத் தெருவில் 2¼ பரப்புக்காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0776146434

(93891)

### காணி விற்பனைக்கு

இணுவில் பருத்தியடைப்பு பிள்ளையார் கிழக்கு வீதி ஒழுங்கை தெற்கு முடக்கில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
94, அம்மன் வீதி/ரெம்பிள் றோட்,
கொக்குவில் கிழக்கு.
(தரகர் தேவையில்லை)

(94039)


## சிப்பாய் காயம்

காங்கேசன்துறை படைத்தளத்தில் சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கோப்ரல் ஒருவர் காயமடைந் துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் பலாலி இராணுவத்தள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## பரணி உற்சவம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சாமுண்டி சமேத சிவஞான வைரவர் ஆலயத்தில் பரணி உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மு.ப. 10.30மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து விடேச பூசை, வசந்த மண்டப பூசை என்பன இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறும். (1-78)


பிரத்தியேக வகுப்பு
**Physics**
அனுபவம் மிகுந்த ஆசிரியரினால் தனியாகவோ/ குழு வாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0775405975


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## செல்லத்துரை பாலசிங்கம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 18 |
| ★ | ★ |
| 05 | 01 |
| ★ | ★ |
| 1932 | 2005 |

பாசத்தின் திருவுருவே! பண்பின் உறைவிடமே
எம் குடும்பத்தின் அணையாத ஒளி விளக்கே!
எம்மை வளர்த்து ஆளாக்கி எங்கள் ஒவ்வொருவரதும்
இதயங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!
வாழ்க்கை என்ற நீண்ட பயணத்தில் ஐந்து ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம் நினைவை விட்டு
மறையவே மறையாது!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/564265)


## தினசரி யாழ் - கொழும்பு வான் சேவை

தொலைபேசியூடாகவே பதிவுக்களை மேற்கொள்ளலாம்.

**றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி**

(94095) தொ.பே.: 077 5250 996, 021 222 2867
077 6090926


### இதயத்தை நெருடும்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி கேதீஸ்வரி சர்வேஸ்வரன்

(கேசி)

திதி அட்டமி (23.01.2010)

மலர்வு:
14.03.1973





இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் - எங்கள்
இதயத்தில் நீ என்றும் குடியிருப்பாய் கேசி!
அன்பான பேச்சும் பாசமான முகமும் - எங்கள்
இதயத்தை நெருடிச் சோகத்திலாழ்த்துகின்றனவே!
உன்னை இழந்த நாம் உறக்கமின்றித் தவிக்கின்றோம்
ஒருமுறை வந்து உன் திருமுகம் காட்டாயோ?
இன்று உன் பிள்ளைகள் 'அம்மா' என அழைப்பது
உந்தன் காதுகளில் விழவில்லையா? கேசி!
அன்பும் அறமும் உன்னிரு கண்களாகக் கொண்டாயே!
ஆனந்த வாழ்வை மறந்து சென்றுவிட்டாய்!!
இல்லறம் நல்லறமாயிருந்த வேளையிலே - நீ
இடைநடுவில் எமைத் தவிக்கவிட்டது நியாயமோ?
உன் உடல்தான் மறைந்ததே தவிர- உன்
உருவம் எம்மைவிட்டு மறையவே மறையாது
ஆத்மா சாந்தியடைய
கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உதிர்வு:
15.01.2008

அன்புக் கணவர்,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

489, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(94031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூபம் எடுக்கும் 'டெங்கு' அரக்கனை ஒழித்துக்கட்டி எம் சந்ததியைக் காப்போம்

## குடாநாட்டில் இனியும் வேண்டாம் அநியாய உயிரிழப்புக்கள்

டெங்கு நோய் யாழ். மாவட்டத்தில் தற்போது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது. சுகாதாரத் திணைக்களம், யாழ். மாநகரசபை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் அனேகமாக அனைத்துப் பகுதிகளிலும் டெங்கு விழிப்புணர்வுப் பிரசாரங்கள், கருத்தரங்குகள், வீதி நாடகங்கள், தெருக்கூத்து என்று பல்வேறு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஏராளமான துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டு வீடுவீடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு டெங்குநோயின் அபாயங்கள் குறித்து விளக்கி இருந்தனர். அது மட்டுமன்றி வீடுகளின் சுற்றுப்புறச் சூழலை நேரடியாகப் பார்வையிட்டுப் பொது மக்களுக்கு நல்ல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி விழிப்படையச் செய்கின்றனர்.

இவ்வாறான நிலைமையிலும் டெங்கின் தாக்கம் குறைந்தபாடாக இல்லை. இந்த நிலைமைக்கு ஏதுவான காரணங்கள் பல இருந்த போதிலும், பொதுமக்களின் ஒத்துழைப்பு, ஈடுபாடு போதாமையே முக்கியமான காரணம் என்று சுகாதாரப் பகுதியினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த மாதங்களில் குடாநாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே காணப்பட்ட டெங்குநோய், தற்போது குடாநாடு எங்கும் பரவிவருவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளாந்தம் உயர்ந்து செல்கின்றது. மரணித்தவர்களில் அதிகமானோர் குழந்தைகள்.

கடந்த காலங்களில் குடாநாட்டு மக்கள் வன்முறைகள், அட்டூழியங்களால் தமது குடும்ப உறுப்பினர்கள் பலரை இழந்து பரிதவிக்கின்றனர். இந்த நிலைமை தணிந்த நிலையில் குடாநாட்டு மக்களை ஆட்டிப்படைக்கும் டெங்கு என்ற அரக்கன் தலைதூக்கி நிற்கின்றான். அந்த அரக்கனை அழித்து ஒழித்துவிட வேண்டும்.

இனியும் வேண்டாம் அநியாய உயிரிழப்புகள். எமது சந்ததியை, குழந்தைகளைக் காப்பாற்ற அனைவரும் டெங்குநோயை முற்றாக ஒழிக்க முனைப்புடன் செயற்படுவோம்.

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து இவர்கள் கூறும் விளக்கங்களைப் பார்ப்போம்.

**பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கூறுகிறார்**



மிகவும் மோசமான, ஆபத்தான டெங்கு நோயைக்கட்டுப்படுத்த அனைவரும் முன் வரவேண்டும். இந்த நோயை ஒழிக்க தங்களால் முடிந்தவற்றைச் செய்ய இன்றே செயலில் இறங்க வேண்டும். நிலைமை மோசமாகி வருகின்றது. நோய்ப் பரம்பல் நாளாந்தம் அதிகரித்துக் கட்டுப்படுத்தாமல் போய்விடலாம்.

இந்த பயங்கரமான நிலைமையை கருத்தில் கொண்டு குடாநாட்டு மக்கள் உடனடியாக இன்றே முழு மூச்சுடன் டெங்கு ஒழிப்பில் தங்கள் பங்களிப்பைச் செலுத்த முன்வரவேண்டும்.

டெங்கைக் கட்டுப்படுத்த பொதுமக்கள், நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டும். இதற்கென விசேட குழுக்கள் மாவட்ட, பிரதேச, கிராமமட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் தமது பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்.

பொதுமக்கள் சிலரின் ஒத்துழைப்பு இன்மையால் நிலைமை மோசமாகி வருகின்றது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த சட்ட நடவடிக்கை எடுக்க நாம் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். உடனடியாகவே நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயாராகி விட்டோம்.

மலேரியாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கும் டெங்குவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கின்றன.

மலேரியாவைக் கட்டுப்படுத்த வீட்டுக்குள் உள்ள மூலை முடக்குகளுக்கு மலத்தியோன் விசுறும் நடவடிக்கை போதுமானது. தற்போது மலேரியா கட்டுப்படுத்தப்பட்டு முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது.

ஆனால் டெங்கு ஒழிப்பு அப்படியல்ல. இது வீட்டுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இதனை மக்கள் தான் செய்ய வேண்டும். நுளம்புகள் உற்பத்தியாகும் புல், புதர் நீர்தேங்கும் இடங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து பொது மக்கள் தாமே தமது சுற்றிடங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும்.

**செவ்வி:- உமா, லக்ஷ்மன்**

**புகையூட்டல் தற்காலிக நடவடிக்கையே**

சுகாதார பகுதியினராகிய நாம் மேற்கொள்ளும் புகையூட்டல் மூலம் நுளம்புகளை தற்காலிகமாகவே அழிக்க முடியும் என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் மக்களுக்கு அறிக்கைகள் மூலமும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் விழிப்புணர்வை மட்டுமே வழங்க முடியும். அவற்றைப் புரிந்துகொண்டு செயற்படுத்துவது பொதுமக்களின் கடமை.

2009 இல் முதல் பத்து மாதங்களில் இலங்கையில் 33 ஆயிரம்பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்காகினர். ஆனால் அதே காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் 30 பேர் மட்டும் டெங்குநோய்த்தாக்கத்திற்கு இலக்காகினர். ஆனால் அதன் நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

இடம்பெயர்ந்த மக்கள் குடாநாட்டிற்கு பெரும் எண்ணிக்கையில் வரத்தொடங்கினர். தென்பகுதியில் இருந்து சுற்றுலாப்பயணிகள் குடாநாட்டிற்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இந்த வருடம் தை மாத ஆரம்பத்திலிருந்து கடந்த 9ஆம் திகதி வரை டெங்கு நோயாளர்கள் 524 பேர் வைத்தியசாலையில் இனங்காணப்பட்டனர். பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நோக்கினால் யாழ்ப்பாணம் 142, சண்டிலிப்பாய் 86, நல்லூர் 80, உடுவில் 66, கோப்பாய்39, சங்கானை 33.

இதுவரை டெங்கு நோயினால்18 பேர் இறந்துள்ளனர். இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து நாம் தற்காப்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும். அதனை இன்று முதலே செயற்படுத்த வேண்டும்.

**யாழ். மாநகர சபை ஆணையாளர் சரவணபவன் தற்போதைய நிலைமையை விளக்குகின்றார்.**



டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யு.என் ஓ.டி.எஸ் நிறுவனமும் சில நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றது. பொது அமைப்புகள், நிறுவனங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டால் மட்டும் நிலைமை சீராகிவிடாது.

பொது மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் அனைத்தையும் மாநகர சபையே செய்ய வேண்டும் என நினைக்கின்றனர். மக்கள் தாமாகவே நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டும். மாநகர சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது பொதுவாக நோக்கும் போது மக்களின் ஒத்துழைப்பு தற்போது குறைவாகவே இருக்கின்றது. தற்போது டெங்கு நோய் தீவிரமடைவதற்கு பொதுமக்கள் சிலரின் கவனமற்ற செயற்பாடுகளும் காரணம் என்றே கூறவேண்டும். தங்கள் இடங்களை மட்டும் சுத்தமாக வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. சுற்றுப்புறங்கள் பொது இடங்கள் எல்லா இடங்களிலும் சுத்தத்தைப் பேணவேண்டும். வடிகால்களுக்குள் குப்பை கூழங்கள், பொலித்தீன் பைகளைப் போடுகின்றார்கள். பலமுறை அறிவுறுத்திய போதும் அதனை அனேகமானோர் கருத்தில் எடுப்பதில்லை. இதனால் வடிகால்கள் தடைப்படுகின்றன. அதன் மூலம் நுளம்புகளால் டெங்குநோய் மட்டுமன்றி, எத்தனையோ தொற்று நோய்கள் பரவுகின்றன. இந்த பாரதூரமான நிலைமையை எவரும் உணர்ந்து கொள்வதாக இல்லை.

வீதி,வர்த்தக நடவடிக்கைகள் சுற்றலாப் பயணிகளின் வருகை, மழைகாலத்தில் மரங்களை வெட்டுதல் ஆகியவற்றால் கழிவுகள் அதிகரித்துள்ளன. இவை நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக இருக்கின்றது.

மாநகர சபையிடம் சில வளப்பற்றாக்குறைகள் நிலவுகின்றன. குறிப்பாக வாகன வசதி போதுமானதாக இல்லை. எமது அவசர கோரிக்கைக்கு அமைய வாகனங்கள் கிடைக்கவுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கழிவு அகற்றும் நடவடிக்கைகளை துரிதமாக செய்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. அத்துடன் வடமாகாண ஆளுநர் ஒரு மில்லியன் ரூபாவை எமக்கு வழங்கியிருக்கிறார்.

**யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ். [illegible]மூர்த்தி தமது கருத்தைக் கூறுகிறார்.**



டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இரு விடயங்களை குறிப்பிட முடியும். அதில் பொது மக்கள் சார்ந்த விடயம் ஒன்றாகவும், அரச திணைக்களங்களை சார்ந்த விடயம் இன்னொன்றாகவும் நோக்க முடியும்.

பொது மக்கள் மத்தியில் நாம் என்ற உணர்வு குறைவடைந்த நிலையில், சுய நல மனப்பான்மை அதிகரித்திருக்கிறது. இதனால் பொது மக்கள் ஒன்றிணைந்து பொதுவான நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலை தோன்றியிருக்கிறது. நகர மயமாக்கலின் விளைவாகக் கூட இதனை நோக்கலாம். இதன் காரணமாக பொது இடங்கள், கைவிடப்பட்ட இடங்கள் கவனிப்பின்றி உள்ளமை டெங்குநோய் பரவக் காரணமாக இருக்கலாம். அல்லது கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படலாம். உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மக்களின் பிரச்சினைகளை, தேவைகளை உரிய முறையில் இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் பின் நிற்கின்றனர். விதிவிலக்காக மக்கள் நலனில் அக்கறை கொள்பவர்களும் இருக்கின்றனர். ஆனால் அதிகமானவர்கள் தமது கௌரவம் குறைந்து விடும் எனக் கருதி மக்களுடன் இணைந்து செயல்பட விரும்புவதில்லை. எனவே டெங்கு நோய் ஒழிப்பில் மட்டுமின்றி அனைத்து விடயங்களிலும் மக்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் இணைந்து செயலாற்றுவதன் மூலமே எதற்கும் தீர்வைக் காண முடியும். அரச நிறுவனங்கள் அறிக்கை வெளியிடுபவர்களாகவும், கருத்துச் சொல்பவர்களாகவும் மட்டும் இருந்தால் போதாது- என்றார்.

**யாழ். மத்திய கல்லூரியின் உயிரியல் பிரிவு மாணவனான ர.செந்தூரன் கூறுகிறார்:**

நோய்த் தாக்கம் அதிகரிக்கும் வேளைகளில் மட்டும் தீவிரமாகச் செயற்படுவது. என்ற நிலைமாறி



ஏனைய வேளைகளிலும் சுமுகமாக அந்தப் பணிகள் இடம்பெற வேண்டும். சாதாரண வேளைகளில் கவனிப்பாரற்று ஒதுங்கி இருக்கும் நிலைமை மாற்றப்படவேண்டும். அனைத்துக் காலங்களிலும் விழிப்பாக இருக்க வேண்டும் 'வரும் முன் காப்போம்' என்பதை அனைவரும் கருத்தில் எடுத்து செயற்பட வேண்டும். அரசாங்க நிறுவனங்கள், சுகாதாரப் பகுதியினர் அறிக்கைகளை மட்டும் வெளியிடுவதால் பயனில்லை. மக்களுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட முன் வரவேண்டும். துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தால் தங்கள் கடமை முடிந்து விட்டது என்று சிலர் கருதுகின்றனர். இதுவும் ஒரு விதத்தில் ஏமாற்று நடவடிக்கையே. எம் மக்களை அழிக்க முற்படும் டெங்கை ஒழித்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்தால் அனுகூலம் யாருக்கு?

சி.இராமச்சந்திரா

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் பார்க்க பல்வகையிலும் வேறுபட்ட ஒன்றாக இருக்கிறது. இது இந்த நாட்டின் அடுத்த ஆறு வருடங்கள் ஜனாதிபதியாக சேவை செய்பவரை முன்னைய காலங்கள் போலல்லாமல் ஒருவித அச்சுறுத்தல் இல்லாத சூழலில் தேர்ந்தெடுக்கும் நிகழ்வாகும். இந்தச் செயற்பாட்டில் மதிநுட்பத்துடன் பங்களிக்க வேண்டுமானால் பல தகவல்கள் தேவை. இதற்குத் தேவையான தகவல்களைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அவர்கள் சார்ந்த கட்சிகள், அனுதாபிகள், நலன் விரும்பிகள், ஊடகங்கள், எமது நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த உறவுகள் மூலம் பெறலாம். அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் சர்வதேச, தேசிய, பிராந்திய சமூக நலன்களைப் பின்புலமாகக் கொண்டவையாக இருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இத் தேர்தல் 30 ஆண்டுகளாக நடந்த யுத்தம் முடிவுக்கு வந்த கையோடு நடைபெறுகின்றது. ஆதலால் யுத்தம் முடிவுறும் காலங்களில் சர்வதேச சக்திகள் அரசு மீது உபயோகித்த அழுத்தங்கள், அதை மீறி அரசு செயற்பட்ட விதம், யுத்தத்திற்குப்பின் மேற்கத்திய நாடுகள் சார்ந்த சக்திகளிடமிருந்து அரசு எதிர்கொண்ட சவால்கள், அணிசேரா நாடுகளின் உதவி போன்றவை பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். மேற்கத்திய நாடுகள் தாங்கள் கீறிய கோட்டிற்குள் நின்று செயற்பட மறுத்த இன்றைய ஆட்சியாளர் மீது சீற்றம் கொள்வதும் பழிதீர்க்க முயல்வதும் வெள்ளிடைமலை.

அதேவேளை, எமது பிரச்சினைகளையும் அதன்மூலம் விரிவடைந்த யுத்தத்தையும் சர்வதேச நாடுகள் 'எடுப்பார் பிள்ளை'யாகப் பாவிக்க நாம் அனுமதித்தமை எமது ஞானசூனியத்தைத் துலாம்பரமாகக் காட்டுகின்றது. பல பிரமுகர்கள், சர்வதேச சமூகம் எம்மைக் கைவிட்டு விட்டது என்று பகிரங்கமாக சர்வதேச சமூகத்தின் மீது குற்றம் சுமத்தியமை உலகின் பல பாகங்களிலும் ஒலிக்கின்றது.

இதனால் தலைகுனிவு உணர்வும் சீற்றமும் கொண்ட மேற்கு நாடுகள் 'குருவை மிஞ்சிய சிஷ்யனா'கச் செயற்படும் அரசை மாற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது அண்மைக்கால செயற்பாட்டினூடாகப் புலப்படுகின்றது. இதுதான் அரசு மாறவேண்டும் என்னும் சுலோகத்தின் தோற்றுவாய். இந்த மேற்கத்திய நாடுகளின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியவராக, தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் அமெரிக்காவுக்குப் பயபக்தியுள்ள சிஷ்யனாகக் கணிக்கப்படுபவர் சரத் பொன்சேகா என்பது பரம இரகசியம். மேற்கத்திய நாடுகளின் தேவையான இலங்கை அரசு மாற்றம், எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக வேண்டும் என எண்ணும் கையறுநிலையில்இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, அதேநிலையில் இருந்த வேறு சில கட்சிகளுடன் சேர்ந்து உருவாக்கிய புதிய தேசிய முன்னணியில் சரத் பொன்சேகாவை ஏக தலைவனாக மக்கள் முன் அறிமுகப்படுத்தியமை, தேசிய தோற்றத்தோடு அரங்கேறுகின்றது. இந்த அணியில் உத்தியோகப்பற்றற்ற முறையில் கடைசியாக இணைக்கப்பட்ட அணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். இந்தக் காலதாமதமான இணைப்பிற்குக் காரணம் இல்லாமலில்லை. ஆரம்பத்திலேயே எதிர்க்கட்சிகளின் அணியில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு இணைக்கப்பட்டால் சிங்கள மக்கள் மத்தியில் புலி எதிர்ப்பு மேலோங்கி பாதகமாகும் சூழல் ஏற்படும் என்னும் காரணத்தால் ரணில் விக்கிரமசிங்க அதை விரும்பவில்லை என 'மின்னல்' நிகழ்ச்சியூடாக அறியக்கூடியதாக இருந்தது.

பொதுவாக வடக்கு, கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறநீங்கலாக ஏனைய கட்சிகள் தற்போதைய அரசு அடுத்த ஆறு வருடங்களுக்குத் தொடர்வதை எதிர்க்கவில்லை. ஆனால், ஆதரவு வழங்க நிபந்தனைகளை முன்வைத்தார்கள். யுத்தம் முடிந்த பின் மாறி வருகின்ற சூழலைக் கருத்திற் கொண்டு பின்வரும் அனுகூலங்களை மக்கள் அனுபவிக்கவும், தீர்க்கப்படாத பிரச்சினைகள் தீர்க்கவும் கால அவகாசம் வழங்கவேண்டிய முக்கியத்துவமும் அதற்கான தேவையும் இருப்பதாக நியாயப்படுத்துகின்றனர்.

அ) நலன்புரி நிலையங்களில் இருந்த மக்களின் மீள் குடியேற்றம்.

ஆ) இடம்பெயர்ந்தோர் குடியேற்றம்.

இ) வடக்கு - தெற்கு தரைவழி இணைப்பு.

ஈ) போக்குவரத்து மேம்பாடு.

உ) அபிவிருத்தி வேலைகள் ('கிழக்கின் உதயம்', 'வடக்கின் வசந்தம்')

ஊ) ஜனநாயக தொழிற்பாட்டிற்கான சூழல்.

எ) அடிப்படைப் பிரச்சினைத் தீர்வுக்கான உத்தரவாதம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்போதைய ஜனாதிபதியை மாற்றவேண்டும், எனவே, எதிரணிப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்கும்படி தமிழர்களைக் கேட்கின்றனர். இதற்கு அவர்கள் தரும் விளக்கம்:-

1.) அவர்கள் ஜனாதிபதிக்கு முன்வைத்த கோரிக்கைகளுக்குத் திருப்திகரமான பதில் இல்லை.

2.) அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை சரத் பொன்சேகாவும், ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்றுக் கொண்டனர்.

3.) நாம் அவரை நம்புகின்றோம்.

இதற்கு முன்பும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் காலங்களில் இதுபோன்ற காரணங்களைத்தான் அவர்கள் முன்வைத்தார்கள் என்பது தற்போதைய இளைஞர்களுக்குத் தெரியக் காரணமில்லை. ஆனால், தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைப் போன்று முன்னெப்போதும் அன்றைய மூத்த தலைவர்கள் மக்களை வஞ்சிக்கவில்லை என்பதை மூத்த பிரஜைகளும், அவர்களுடன் கருத்து முரண்பட்டவர்களும்கூட ஏற்றுக்கொள்வர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நம்பிக்கை வைத்துள்ள - தமிழ் மக்களை ஆதரவு வழங்கும்படி கேட்டுள்ள - எதிரணி வேட்பாளரைப் பற்றி முன்னோக்கிப் பார்ப்போம்.

1.) இவர் இலங்கையின் இராணுவ சேவையிலிருந்து ஒருசில மாதங்களுக்கு முன்னர் தான் ஓய்வுபெற்றவர்.

2.) இவர் சேவையில் இருந்த காலத்தில் 'இது சிங்களவரின் நாடு, சிறுபான்மையினர் வந்தேறு குடிகள், அவர்கள் இங்கு வாழலாம், உரிமைகள் கேட்கக் கூடாது' என்னும் சாரப்பட ஒரு பேட்டி அளித்தார். அதனால் சிறுபான்மையினரின் சீற்றத்திற்கு ஆளானார்.

3.) இவர் சேவையில் இருந்த காலத்தில் சமாதான முயற்சிகள் குலையக் காரணமாக இருந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

4.) இவர் சேவையில் இருந்த காலத்தில் நலன்புரி நிலையங்களில் இருந்தவர்களை அவர்களின் இடங்களுக்கு அனுப்பும் விடயத்தில் இடையூறாக இருந்தார் என இலங்கை நாடாளுமன்றத்தில் பதிவு உள்ளது.

5.) இவர் யுத்தம் முடிந்தபின் 1,00,000 பேரை இராணுவத்திற்கு சேர்ப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தவர் என்னும் செய்தியை அவர் மறுத்தார் என்ற தகவல் இல்லை.

6.) ஓய்வுபெற்ற பின் முன்னுக்குப் பின் முரணான செய்திகளை வழங்கித் தனக்கும் நாட்டிற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தியவர்.

இவரின் அரசியல் நிலைபற்றியும் அறிதலும் அவசியம். இவரின் நிலை ஒரு தொங்குபாலம் போன்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் தங்களால் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது என்பதாலும், அவர்களின் தேசிய, சர்வதேசிய தேவைகளினாலும் ஒரு திடீர் தயாரிப்பாக பொதுவேட்பாளரைக் களம் இறக்கின. இவ்வாறான மிகவும் பலவீனமான நிலையில் பொது வேட்பாளருடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது இருவருடனுமோ புரிந்துணர்வு ஒப்பந்தமோ வேறு வகையான ஒப்பந்தமோ செய்துகொண்டாலும் அது முழுமையாகச் செல்லுபடியாகாது. மக்கள் விடுதலை முன்னணியுடன் இணக்கப்பாட்டிற்கு வராமல் எந்தவொரு ஒப்பந்தத்தையும் செயல்படுத்த முடியாது. இதற்கான காரணம், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் இணைப்பைக் குலைக்கும்படி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த மக்கள் விடுதலை முன்னணியும், அதற்குச் சாதகமான தீர்ப்பை வழங்கிய முன்னாள் பிரதம நீதியரசரும் ஓரணியில் இப்போது இருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எல்லா வகையிலும் பலவீனமான 'மண்குதிரை' போன்ற எதிரணி வேட்பாளருக்குத் தமிழ் மக்களை வாக்களிக்கும்படி தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் கேட்பது அவர்களின் மதிநுட்பமின்மையாலல்ல, இராஜதந்திரத்தினாலுமல்ல, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான கரிசனையாலுமல்ல, சர்வதேச சமூகத்தின் பங்குபற்றல் மூலம்தான் எமது பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்னும் அதீத நம்பிக்கை என்ற காரணத்தினால்தான் எனக் கொள்ளலாம். இவ்வளவு பட்டறிவு வந்த பின்னும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யூதக் கனவிலிருந்து விடுபடவில்லை. அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய பொதுக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்கும்படி கேட்பது, இங்கு வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திற்கு பங்கமேற்படுத்தும் என்பதாலும், பிரச்சினை தீர்வுக்கு உதவாது என்பதாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சரத் பொன்சேகாவுக்கும் வாக்களிக்கக் கோரும் கோரிக்கையைப் புறக்கணிக்க அவை வலுவான காரணமாக அமையும். ★

---

## தமது உயிருக்கு அச்சுறுத்தல் என ரோஸி சேனநாயக்கா முறைப்பாடு

கொழும்பு, ஜன .23

தமக்கு உயிராபத்து நேரலாம் என்று அச்சம் தெரிவித்து மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சிப் பிரமுகருமான ரோஸி சேனநாயக்க பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூல முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். தமக்குத் தகுந்த பொலிஸ் பாதுகாப்பு வழங்க பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றமையாலேயே தமக்குக் கடிதங்கள் மூலமும், தொலைபேசி அழைப்புகள் மூலமும் படுகொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் பொலிஸ் மா அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

(சி)




---

## அரச ஊடகங்களைக் கண்டித்து கொழும்பில் வியாழனன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 23

உயர்நீதிமன்றம் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் வழங்கிய உத்தரவுகளை மீறிச் செயற்பட்ட அரச ஊடகங்களைக் கண்டித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை அரச மற்றும் சுயாதீன ஊடகங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

அரச ஊடகங்கள் ஒருபக்கச் சார்பாக செயற்பட்டு வருகின்றன என ஊடக அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக ஆளும்கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவை சுட்டிக் காட்டியுள்ளன.

இதேவேளை, இவ்வாறு ஒரு பக்கச் சார்பான பிரசாரங்களை மேற்கொள்வதனால் அரச ஊடகங்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது எனவும்-

தனிப்பட்ட ஓர் வேட்பாளரின் விளம்பரங்கள் மற்றும் பிரசாரப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் அரச ஊடகம் பல லட்சக் கணக்கான ரூபாக்களை இழந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக 'தாருண்ய ஹெடக்' என்ற அமைப்பின் விளம்பரங்கள் அதிகளவில் ஒளிபரப்புச் செய்யப்படுவதனால், ஏனைய விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்ய நேரத்தை ஒதுக்குவதில் சிக்கல்நிலை காணப்படுகிறது எனவும் குறிப்பிடப்படுகிறது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதினப்பத்திரிகைகளில் இடம் பெறும் ஆக்கங்கள் அனுபவகலைஞர்களின் கட்டுரைகள், விமர்சனங்கள், பேட்டிகள் போன்றவற்றை வாசிப்பதன் மூலமும் அறிவு வளர்கின்றது. அடுத்து நடனம், இசை சம்பந்தமான கண்காட்சிகளைப் பார்வையிடுவதுடன் நடனம் தொடர்பாக மற்றவரின் மனஎழுச்சிகளை அறிவதுடன், தானும் புதிய அறிவுசார்ந்த விடயங்களைப் பெற்றுக் கொள்ளவும் இது உதவுகிறது.

கட்புல சாதனங்களில் கணனி மயப்படுத்தப்பட்ட தற்கால உலகில் இருந்த இடத்திலிருந்தே உலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் கணனியின் இணையத் தளத்தினூடாக அறிய முடிகிறது. இவற்றின் மூலம் உலகில் எல்லாப்பாகங்களிலும் உடனுக்குடன் நடைபெறும் அனைத்து நடன, நாட்டிய நிகழ்வுகளையும் நாம் விரும்பிய நேரத்தில் பார்த்து அறிந்து கொள்ள இக் கணனி பெரிதும் உதவியாக இருக்கின்றது. அத்துடன் நாட்டியம் சம்பந்தமான பல விவரங்களையும் நாம் இதன் மூலம் திரட்டிக் கொள்ள முடியும். இந்தியாவில் தலைசிறந்த கலைஞர்களான திரு, திருமதி. சாந்தா தனஞ்சயன், அடையார் கே. லஷ்மணன், திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன், திருமதி சுதாராணி ரகுபதி , செல்வி பத்மா சுப்பிரமணியம், திருமதி அலர்மேலுவல்லி, ஸ்ரீமதி பிரியதர்சினி, கோவிந் போன்றோரின் பல படைப்புக்கள் இணையத்தளத்தில் இணைக்கப் பட்டுள்ளது. அத்துடன் இந்தியாவில் பரதநாட்டியத்தின் தாயகமாக விளங்கும் தமிழ்நாட்டின் பிரபல நாட்டிய ஸ்தாபனமாகிய 'கலாஷேத்திரா' பற்றியும் அதனை ஸ்தாபித்த ஸ்ரீமதி ருக்மணி தேவி அம்மையார் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் அவர் நடனத்துறையில் ஆற்றியபணிகள் பற்றியும் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இக் கணனி மூலம் நாட்டியத்தின் பழைய, புதிய முறைகளை அறிவதன் ஊடாக நாட்டியத்தின் வளர்ச்சிக்கு இதன் பங்களிப்பு பெரிதும் உதவிபுரியும் சாதனமாகத் திகழ்கிறது எனலாம். மேலும் நடனம், நாட்டியம் சம்பந்தமான படங்களைப் பார்ப்பதன் மூலமும் நடனம் பற்றிய சந்தேகங்கள் பற்றியும் புதிய அறிவினைப் பெறுவதற்கும் கட்புல சாதனங்கள் பெரிதும் உதவுகின்றன.

அடுத்தபடியாக நாட்டிய வளர்ச்சியில் "கட்புல செவிப்புல" சாதனங்கள் எந்த வகையில் உதவுகின்றன என்பதும் பற்றி பார்ப்போமேயானால். கட்புல செவிப்புல சாதனங்களாகத் தொலைக்காட்சி, கணனி, கலைநிகழ்ச்சிகள் போன்றவை உள்ளடக்கப்படுகின்றன.

(வளரும்)

# வடமராட்சியில் காத்தவராயன் கூத்து



தமிழர் வாழும் இடங்களில் பரவலாக இன்றும் நாட்டுக்கூத்துகள் நடைபெற்ற வண்ணமாகவே உள்ளன.

இது சர்வதேசங்களில் தமிழர் வாழும் இடங்களுக்கும் எடுத்து செல்லப்பட்டு, அங்கும் இந்த நாட்டுக்கூத்துகள் நடைபெற்று வருவது தமிழர்களுக்கே ஒரு பெருமையான விடயமாகும்.

இந்த நாட்டுக்கூத்துகளில் முதன்மை இடத்தை வகிப்பது காத்தவராயன் (காத்தான்) கூத்தாகும். சைவசமயத்தை இந்தக் காத்தவராயன் கூத்துசைவசமயத்தை மையமாக வைத்து முதன்மைப்படுத்திய கலை வடிவமாகும்.

இது தென்னிந்தியாவில் முத்துமாரியம்மன் ஆலயங்களிலும், காத்தவராயன் ஆலயங்களிலும் வருடாந்த உற்சவ காலங்களில் நடைபெற்றுவந்த வரலாற்றுக்கதை வடிவமாகும். உடுக்கு ஓசையைப் பின்னணியாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டு வந்தமையால் உடுக்கடிக்கதை எனவும் அழைப்பர்.

இக்காத்தவராயன் சுவாமிகள் சம்பந்தமாக கதை அமைக்கப்பட்டு காலப்போக்கில் கூத்துரு வடிவமாக்கப்பட்டதென்பர்.

இக்கூத்துப்பட்டறை நடைமுறைகள் தென்னிந்தியாவில் இருந்து வடமராட்சி வியாபாரிகள் மூலம் கடல் கடந்து இங்கு கெண்டுவரப்பட்ட கூத்துக்கலையாகும்.

சிந்து நடையுடன் இணைந்து அமைக்கப்பட்ட இந்தக்கூத்து ஆலயங்களில் பக்திப்பரவசத்துடன் ஆடப்பட்டு வந்தது. தொற்று நோய்கள் குறிப்பாக சின்னமுத்து,பொக்கிளிப்பான் போன்ற நோய்கள் நீங்குவதற்காக வேண்டுதல் செய்து அவை நீங்கியபின் நேர்த்திக்கடனுக்காகவும் ஆடப்பட்டு வந்தது.

ஆரம்பத்தில் இவை குறிப்பிட்டஓரிரு அண்ணாவிமார்கள் (இயக்குநர்) மூலம் நடைபெற்று வந்தது.இவர்களால் எழுதப்பட்ட மூல வடிவக் கொப்பி மூலமாகவே வசனநடைப் பாட்டுக்கள் அனைத்தும் பயன்படுத்தப்படும். யார் இக்கூத்தை பயன்படுத்தினாலும் இதன் மூலப்பிரதியாளரின் பெயர் பிரபலப்படுத்தப்படும்.

முன்பு சிலரால் வசன நடை பாட்டு மெட்டுக்கள் மாற்றப்பட்டு வந்தன. எனினும் இக்கூத்து விடிய விடிய ஆடப்படும் கூத்தாக நீண்ட பாடல் வசன சிந்துநடைக்கூத்தாகஆடப்பட்டு வந்தது. காலப்போக்கில் இவற்றில் இருந்து சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கு ஆடிக்காண்பித்தனர்.

அவர்களுக்குள் அமரர் அல்வாயூர்க்கவிஞர் செல்லையா அவர்களின் மகன் அமரர் கலைஞர் செல்லையா விவேகானந்தன் மிக முக்கியமானவராவர்.

இரவு 07,08 மணிக்குத் தொடங்கிய இக்கூத்து மறுநாள் காலை 05 மணிவரை கூடநடைபெற்றுவந்த இக்கூத்தின் இசை ,வசனம் பேன்றவற்றிலும் மாற்றம் செய்து 1 மணித்தியாலக்கூத்தாக 1987ஆம் ஆண்டு இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்புச் செய்தும் ,1988ஆம் ஆண்டு ரூபவாகினியிலும் ஒளிப்படமாக நடித்துக்காட்டியும் மக்களின் பாராட்டைப்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியில் இக்கூத்திற்குப் பெயர் பெற்றவர்கள் மாதனைக் கலைஞர்களாவர். அவர்கள் இன்றும் நாலுதலைமுறைக்கு மேலாக வாழையடி வாழையாக இளம்பராயத்தினர் கூட பலமேடைகளில் இந்தக்கூத்தை நடித்துக்காண்பித்து வருகின்றனர். மேலும் முத்துமாரிஅம்மன், அவரது மகன் காத்தவராயன் சுவாமி ,சிவபெருமான் ,மாயவன்,நாரதர் பேன்ற தெய்வங்கள் சம்பந்தமான இந்தக்கூத்து அமைந்துள்ள காரணத்தால் வடமராட்சியில் காத்தவராயர் சுவாமிக்காகப் பல இடங்களில் ஆலயங்களை அமைத்து வணங்கிவருகின்றர்கள்.

அவை வல்வெட்டித்துறையில் முத்துமாரிஅம்மன் ஆலய முன்பும்,ஊறணிநெடியகாடு ,திக்கம்,அல்வாய்,வதிரி ,அல்வாய்வடக்குவேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்து முன்பாகவும் ,மாயக்கையிலும்,தம்பசிட்டியில் வாணக்குடியிருப்பு ,பண்டாரியமன் ஆலயத்திற்கு முன்பாகவும் ,நெல்லண்டை வரத்துப்பளை,கற்கோவளம் ஆகிய இடங்களிலும் இவ்ஆலயங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சுந்தா




# பட்டாசு படுத்தும் பாடு

பண்டிகை முடிந்தாலும்
பட்டாசுச்சத்தம் ஓயவில்லையே.
எண்டிசை அதிர இயங்கிப்போ
கண்டகண்ட இடமெல்லாம்
எழுகிறது பட்டாசுச்சத்தம்!

பட்டாசு படுத்தும்பாடுதான் என்னே
வீட்டில் தூங்க முடியவில்லை.
வெளியில் நடக்கவும் முடியவில்லை
வீதியில் பயணிக்கவும் முடியவில்லை
கேட்டால் "பொந்து" என்றே கேலிகள்
பண்ணுகிறாரே
வெடிபோடும் வீரரின்
வீம்புத்தனத்தை யார் அறிவார்?
மாரடைப்பு வியாதி உடையவர்கள்
மனை வாழும் நோயாளர்கள்
எழுகின்ற பட்டாசு ஓசையால்
நிதமும் போராடி மாய்கின்றாரே.

ஆரறிவார் இந்த அவலத்தை?
அதை நிறுத்த யார் முனைவார்?
ஊரெங்கும் வெடியோசை
இடையறாது இங்கெழுந்தால்
எவ்வாறு நாம் இனியும்
நல்வாழ்வைத் தொடரலாம் ?

-பரதேசி-



# முயன்றார்; வென்றார்; புகழ்ச்சியின் உச்சியைத் தொட்டார்!

உச்சியைத்தொட முடியாமல் முக்கால்வாசி தூரத்திற்கு மட்டுமே ஏறித் திரும்பவேண்டி ஏற்பட்டது. அந்தத் தோல்விக்குப் பின்னர் சில வாரங்கள் கழித்து மலையேறுவது குறித்து மாணவர்களுக்கு வகுப்பெடுக்க ஒரு பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றார்.அங்கே மேடையில் எவரெஸ்ட் சிகரத்தின் படம் வைக்கப்பட்டிருந்தது.அந்தப் படத்தைப் பார்த்துக் கிலாரி உரக்கக் கூறினார், "எவரெஸ்ட் சிகரமே! இந்தத்தடவை நான் தோற்றுவிட்டேன்; நீ ஜெயித்துவிட்டாய்.ஆனால் அடுத்ததடவை நான்தான் வெல்லுவேன். காரணம் யாதெனில் உன்னுடைய வளர்ச்சி முடிவடைந்துவிட்டது. ஆனால் நான் வளர்ந்து கொண்டே இருக்கின்றேன்.தினம்தோறும் என் அறிவு ,உழைப்பு,முயற்சி எல்லாம் வளர்கின்றன.அதனால் உன்னை வெற்றி கொள்வேன்"


அடுத்த வருடம் 1953ஆம் ஆண்டு டென்சிங்குடன் இணைந்து கடும் முயற்சிசெய்து,தளராமல் ஏறி கிலாரி எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டுவிட்டார். வளர்ச்சியுடன் கூடிய முயற்சியும் உழைப்பும் வீண்போகாது. முயன்றார்; வென்றார்;புகழடைந்தார்.

வ.க.ஜெயபாலன்

## நாடும் நடப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பவாத நோக்கம் கொண்டதே எதிர்க்கட்சிகளின் இன்றைய கூட்டணி

## அமைச்சர் ரோஹித போகொல்லாகம விசனம்



கொழும்பு,ஜன.23

எதிர்க்கட்சியினரிடம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தூர நோக்குள்ள அரசியல் சிந்தனைகள் எவையும் இல்லை. தற்போது ஏற்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டணியானது சந்தர்ப்பவாதக் கூட்டணியே ஆகும் - என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் பல்வேறு காரணங்களினால் மாறுபட்ட தோற்றங்களைப் பிரதிபலித்து நிற்கிறது. ஆறு வருடங்களின் பின்னர் நடத்தப்பட வேண்டிய தேர்தலை ஜனாதிபதி தமது ஆட்சியின் நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் நடத்துகிறார். தேர்தலை அறிவித்தால் தாமே வெற்றிபெறுவார் என்ற பாரிய நம்பிக்கையிலேயே அவர் இதனை மேற்கொண்டுள்ளார்.

வெற்றி குறித்து சந்தேகம் இல்லாத தன் காரணமாகவே தேர்தலை முன் கூட்டி நடத்துவதற்கு அவர் முடிவெடுத்தார். ஆனால், எதிர்க்கட்சியினர் தமது கொள்கைகளுக்கு முரணாக இம்முறைத் தேர்தலில் போட்டியிடுவது இங்கு விசேடமான அம்சமாகத் தெரிகிறது.

அரசியல் கட்சிகள் என்பது பெயரளவிலான அமைப்புகள் அல்ல. தற்போது, எதிர்க்கட்சிகளிடம் கொள்கைகள் இல்லை. பொருளாதாரம் குறித்த சிந்தனைகள் காணப்படவில்லை. இலங்கையின் இறையாண்மை, தேசிய ஒருமைப்பாடு குறித்த சரியான கொள்கைகளை இந்தக் கட்சிகள் கொண்டிருக்கவில்லை.

அரசமைப்பு ரீதியான உரிமைகள் பற்றியும் எதிர்க்கட்சிகளிடம் எந்தக் கொள்கைகளும் கிடையாது. தமது செயற்பாடுகள் குறித்து கொள்கை இல்லாவிட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் இவர்களால் எப்படி சேவை செய்ய முடியும்?-என்றார். (சி)




# தொழிலாளர்களே சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டும்; ஸ்டார் ஹோட்டலில் 'விஸ்கி' அடிப்போர் அல்லர்!

## நுவரெலியாவில் ஜெனரல் பொன்சேகா சாடல்

நுவரெலியா, ஜன. 23

உழைக்கும் தொழிலாளி ஒருவருக்குத் தான் தெரியும், எவ்வளவு சம்பள உயர்வு கேட்கவேண்டுமென்று.

இதைத் தீர்மானிக்க வேண்டியவர்களும் தொழிலாளர்களே. ஆனால், கொழும்பில் நட்சத்திர ஹோட்டல்களில் 'விஸ்கி' அடித்து விட்டுத் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் நிலையே மலையகத்தில் தோன்றியுள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என எதிரணியின் பொது வேட்பாளர் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

நுவரெலியா நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியா மாநகர முதல்வரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியாத் தொகுதி அமைப்பாளருமான சந்தனலால் கருணாரட்ணவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

அங்கு ஜெனரல் சரத்பொன்சேகா தொடர்ந்து கூறியவை வருமாறு:-



தோட்டத் தொழிலாளர்களை ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும் நினைத்து அவர்களை வாக்களிக்கும் இயந்திரங்களாக உபயோகித்து, ஒரு சில சந்தர்ப்பவாத மலையகத் தலைவர்கள் அரசியல் நாடகம் நடத்திய காலம் மலையேறிவிட்டது.

குறுகிய காலத்தில் யுத்தத்தை முடித்ததுபோல, இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் உண்மையாக உழைக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை 500 ரூபாவாக உயர்த்துவேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இன்றைய ஜனாதிபதி ஒருலட்சத்து எழுபதாயிரம் வாக்குகளினால் மட்டுமே வெற்றி பெற்றார். இம்முறை தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வாக்களிப்பதன் மூலம் அது என்னுடைய வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறலாம்.

இன்று இந்த நாட்டில் குடும்ப ஆட்சியை நடத்திக்கொண்டு அரச சொத்துக்களைக் கொள்ளையடிப்பதால் நாட்டின் பொருளாதாரம் பின்னடைவு கண்டுள்ளது.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து செழிப்பான ஜனநாயக நாடாக உருவாக்க வேண்டுமானால் ஆட்சி மாற்றம் தேவை. இதை மக்களே தீர்மானித்து விட்டனர். தபால் வாக்குகளில் பாதுகாப்புப் படையினர் 90 வீதம் வாக்குகளை எனக்கு வழங்கியுள்ளார்கள்.

அதேபோல் நுவரெலியா மாவட்ட மக்களும் எனக்கு 80 வீதம் வாக்குகள் வழங்குவார்கள் என்பதை இங்கு திரண்டிருக்கும் மக்கள் வெள்ளம் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

மாறிமாறி ஒவ்வொரு தேர்தலிலும் யுத்தத்தை மட்டும் மூலதனதாக வைத்து இந்த அரசு செய்துவந்த பித்தலாட்டத்திற்கும் ஊழலுக்கும் இந்த ஜனாதிபதித் தேர்தல் சிறந்த பாடத்தைக் கற்பிக்கும்-என்றார்.

(சி)

# பொன்சேகாவின் நம்பிக்கைக்குரிய மாற்றத்தை நம்பமுடியாது என்கிறார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஜன. 23

சரத் பொன்சேகாவின் நம்பிக்கைக்குரிய மாற்றங்கள்என்ற கோட்பாட்டைப் பின் பற்றினால் நம்பமுடியாத அளவுக்குப் பாதகமான நிகழ்வுகள் பல இந்த நாட்டில் நிகழும் என்று சுற்றாடல், இயற்கை வள அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மகாவலி கேந்திர நிலையத்தில் ஜாதிக ஹெல உறுமயவினருக்கு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தை எதிர்த்து நாட்டில் பயங்கரவாதம் பாதுகாக்கப்பட வேண்டும் என விரும்பிய குழுவினர்களுடன் சரத்பொன்சேகா தற்பொழுது கைகோர்த்துள்ளார்.

தற்பொழுது அமைதியாக இருக்கும் இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். சர்வதேசப் பிடியின் கீழ் இந்தக் குழுவினர் நாட்டைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

சரத் பொன்சேகா எமது படைவீரர் களைச் சர்வதேச யுத்த நீதிமன்றத்துக்கு முன்னால் நிறுத்த முயற்சித்தார். ஆனால் எமது படையினர் யுத்தக் குற்றங்கள் எதனையும் புரியாததால் தப்பிக்கொண்டனர்.

பொன்சேகாவுக்கும் சம்பந்தனுக்கும் இடையிலான உடன்படிக்கை 14 அம்சங்களைக் கொண்டது. அதில் வடக்கு, கிழக்கு இணைப்பு, பாரம்பரிய தாயகம் என பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ரணில்-பிரபா ஒப்பந்தம் உட்பட ஐக்கிய தேசியக் கட்சி செய்த எல்லா ஒப்பந்தங்களையும் அக்கட்சி மறைத்தும், மறுத்துமே வந்துள்ளது.

புலிகள்-ரணில் ஒப்பந்தம் செய்து கொண்டபோது அப்போது மங்கள சமரவீர இது பற்றி ரணிலிடம் கேள்வி எழுப்பினார். அப்போதும் ரணில் அதனை மறுத்தார். ஆனால் இறுதியில் அது உண்மையானது. இது போன்றே பொன்சேகா- சம்பந்தன் ஒப்பந்தமும் காணப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'ஒரே தேசம், ஒரே மக்கள்' என்ற கொள்கையை வலியுறுத்தியுள்ளார். ஆனால் பொன்சேகா இந்த முக்கியமான விடயத்தை விட்டுவிட்டார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

# அரசின் அழிவுகாலம் 26 இல் ஆரம்பிக்கும்

## மேல்மாகாணசபை உறுப்பினர் முஸம்மில் கூறுகிறார்

மாவனல்லை, ஜன. 23

''இந்த அரசு முஸ்லிம்களுக்குப் பல்வேறு அநியாயங்களைப் புரிந்துள்ளது. எமது வியாபார நடவடிக்கைகள் முடங்கிக் கிடக்கின்றன. பிள்ளைகளின் கல்விநிலை பின்னடைந்துள்ளது. இப்படி அநியாயம் புரிந்து வரும் இந்த அரசின் அழிவுகாலம் 26 ஆம் திகதியுடன் ஆரம்பமாகும்.

இவ்வாறு மேல்மாகாணசபை உறுப்பினர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார். மாவனல்லை வீனஸ் திடலில் நடைபெற்ற கேகாலை மாவட்ட முஸ்லிம் சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண கல்முனை மக்களுக்கென சவூதி அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட அறுநூறு வீடுகள் இன்றுவரை அந்த மக்களுக்குக் கையளிக்கப்படவில்லை.

ஜாதிகஹெல உறுமயவின் கைதியாக இருக்கும் ஜனாதிபதி முஸ்லிம் மக்களுக்கு அநியாயம் செய்கிறார். கிழக்கு மாகாணத் தேர்தலிபோது ''முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்குவேன்'' என்று சொன்னார். அதை வழங்கினாரா? கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினாரா?

சுவர்ணபூமி, புனிதபூமி என்ற போர்வையில் இன்று கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அத்துடன் அங்கு இனவாதக் குடியேற்றங்களை மேற்கொண்டு முஸ்லிம்களுக்குப் பாதகம் விளைவிக்கப்படுகின்றது.

இப்படிப்பட்ட அரசுக்கா, எமது வாக்குகளை வழங்குவது? பிரதேச சபைகள், மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றமும் அவர்கள் வசமே உள்ளன. ஆட்சி அதிகாரமும் அவர்களிடமே இருக்கின்றது. எனினும் எமது பிள்ளைகளுக்குத் தேவையான பாடசாலைக் கட்டடங்களை அமைத்துக் கொடுக்கின்றார்களா? தேவையான அதிபர்களை நியமிக்கின்றார்களா; இல்லை.

எனவே, முஸ்லிம் மக்கள் இத்தேர்தலில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். தமது வாக்குகளை அரசுக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும்.

நாட்டுக்காகத் தியாகம் புரிந்த-நாட்டில் நேர்மையான ஆட்சியை அமைக்கவுள்ள-சரத்பொன்சேகாவுக்கே முஸ்லிம்கள் தமது முழு ஆதரவையும் வழங்க வேண்டும்-என்றார். இக்கூட்டத்தில் கபீர் காஸிம் எம்.பி. மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் யூ.எல். எம். பாறூக் ஆகியோரும் உரையாற்றினர். (சி)

# தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரித்தோருக்கு தேர்தலில் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும்!

## -பஷீர் சேகு தாவூத் சிறுபான்மை சமூகங்களுக்கு அழைப்பு

ஏறாவூர், ஜன.23

தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரித்து வைத்து இதுவரை காலமும் அழகு பார்த்த பேரினவாதிகளுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஏறாவூரில் தெரிவித்தார்.

அவர் எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து ஏறாவூர் - ஐயங்கேணியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

''நாட்டில் வாழும் சிறுபான்மை தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை ஜனாதிபதித் தேர்தல் மூலம் உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் எம்மைப் பிரித்து வைத்து அழகுபார்த்த பேரினவாத சக்திகளுக்கு இதன் மூலம் நாம் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

அரசியல் நீரோட்டம் என்ற பெயரில் மக்களின் மத்தியில் இனரீதியான பேதங்களை வி[illegible] முஸ்லிம் மக்கள் எதிர்த்தே ஆக வேண்டும்.'' (சி)

# யுத்த வெற்றிக்கு உரிமை கோரும் அருகதை சரத்துக்கு இல்லையாம்

## ஆளும் கட்சிப் பிரமுகர் கருத்து

ஏறாவூர், ஜன. 23

யுத்த வெற்றிக்கு உரிமை கோருவதற்கு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஹஸன் மௌலவி தெரி வித்துள்ளார்.

அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து ஏறாவூர் - மீராகேணிப் பிரதே சத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

''யுத்த வெற்றிக்கு பொன்சேகா உரிமை கோருகின்றமை கட்டடத்தைக் கட்டிய மேசன் கட்டடத்துக்கு உரிமை கோருவதற்கு ஒப்பானது.

முஸ்லிம் மக்கள் கப்பம் செலுத்தி அடிமை வாழ்வை அனுபவித்த ஒரு இருண்ட யுகத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சி செய்து வருகின்றனர். விறகு வெட்டும் வியாபாரியையும் கடத்தி வைத்து லட்சக்கணக்கில் கப்பம் அறவிடும் நிலை அன்று இருந்தது.

அந்த நிலையை மற்றிய மைத்து இன்று மக்கள் நிம்மதியாக எங்கும் எப்போதும் சென்று வரக்கூடிய சூழ்நி லையை ஏற்படுத்தித் தந்தவர் ஜனாதிபதி மஹிந்தவே.

வடக்கில் இறுதிக் கட்ட யுத்தம் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது அதனை நிறுத்த வேண்டுமென சர்வதேச ஏகாதிபத்திய சக்திகள் ஜனாதிபதிக்கு பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்தார்கள்.

அந்த அழுத்தங்களுக்கு ஜனாதிபதி அடிபணிந்தி ருந்தால் இன்று நாம் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

எனவே, அச்சமற்ற வாழ்வை ஏற்படுத்தித் தந்த ஜனாதிபதிக்கு முஸ்லிம் மக்கள் நன்றி செலுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக எதிர்வரும் தேர்தலில் அவருக்கு வாக்களிக்க வேண்டும்.'' (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# தமிழ் வாக்குகளால் ஓர் ஆட்சி மாற்றம்

# மஹிந்த ஆட்சிக்கு முடிவுரை எழுதுவோம்

## அன்புக்குரிய தமிழ் மக்களே!

**மஹிந்த ராஜபக்ஷவின் கடந்த நான்கு வருட ஆட்சியானது தமிழ் மக்களின் ஆன்மாவில் ஆறாத ரணங்களை ஏற்படுத்திய, அவர்களை வேரோடு அழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட ஒரு 'சம்ஹார' ஆட்சியாகும்.**

- மஹிந்த ராஜபக்ஷவின் தமிழின விரோத ஆட்சியின் கீழ் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்டிருந்த வடக்கு- கிழக்கு துண்டாடப்பட்டது.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான சுனாமிக் கட்டமைப்பு இல்லாது ஒழிக்கப்பட்டது.
- இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மஹிந்த ராஜபக்ஷவால் உருவாக்கப்பட்ட நிபுணர்குழு அளித்த தீர்வுத் திட்ட அறிக்கை மஹிந்த ராஜபக்ஷவாலேயே கிழித்தெறியப்பட்டது.
- இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கிய இன்னொரு குழுவான சர்வகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அளித்த தீர்வுத் திட்ட அறிக்கையும் அவராலேயே குப்பைத் தொட்டியில் வீசப்பட்டது.
- திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் திட்டமிட்ட முறையில் சிங்கள மக்களைக் குடியேற்றி சிங்களமயமாக்கல் அதிதீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவ மயமாக்கலும் அதைத் தொடர்ந்து சிங்களமயமாக்கலுக்குமான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.
- பல ஆயிரம் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போயினர். இன்னும் பல ஆயிரம் இளைஞர்கள் சுடப்பட்டு வீதிகளில் வீசப்பட்டனர். இதன் மூலம் தமிழர்களின் இன விருத்திச் சந்ததியொன்று திட்டமிட்டு நிர்மூலமாக்கப்பட்டது.
- தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு மனித உரிமை மீறல்கள் அப்பட்டமாகத் தலைவிரித்தாடின.
- மனிதாபிமான மீட்புப் பணி என்றபெயரில் வன்னியில் பல ஆயிரம் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். நடைப் பிணமாகிய மூன்று லட்சம் மக்கள் மிருகங்களைப் போல முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இன்று நிராயுதபாணிகளாக நிற்கும் எம் முன்னால் உள்ள ஒரே ஆயுதம் வாக்குகள்தான். அதனை அன்னப்பறவைச் சின்னத்திற்கு நேரே இட்டு ஜனாதிபதியாக சரத்பொன்சேகாவைத் தேர்வு செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்புடன் வேண்டி நிற்கிறது.

## தமிழ் மக்களின் இன்றைய காலத் தேர்வு சரத் பொன்சேகாவே!

தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்பதுடன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் தொடர்ந்து குரல்கொடுப்பதற்கான இயங்கு வெளியொன்றும் உருவாக்கப்படல் வேண்டும். இவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சரத்பொன்சேகாவை ஆதரிக்கிறது.

தேர்தல் நாளன்று உங்கள் அன்றாடப் பணிகளை விடவும் வாக்களிப்பதற்கு முன்னுரிமை கொடுங்கள்.
தாமதம் காட்டாமல் காலையிலேயே வாக்களிப்பதன் மூலம் உங்கள் வாக்குரிமையை நிலைநாட்டுங்கள்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

திரு. இரா.சம்பந்தன் (நா.உ.),
தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி,
பாராளுமன்றக் குழுத் தலைவர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

திரு.சுரேஷ் க.பிறேமச்சந்திரன் (நா.உ.),
செயலாளர்,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி,
இணைப்பாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

திரு.மாவை.சோ.சேனாதிராஜா (நா.உ.),
செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி.

திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (நா.உ.),
செயலாளர்,
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்.

(சி/5642 70)

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெறவுள்ளது.

**ஆட்சி மாற்றத்துக்காக அணி திரண்டு வருக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய - இலங்கை உடன்படிக்கையைத் தவறவிட்டோம்!

சந்திரிகாவின் அதிகபட்ச அதிகாரப்பகிர்வுத் தீர்வை வீணடித்தோம்!

ரணில் விக்கிரமசிங்கா காலத்துப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பியடித்தோம்!

இப்படியே தீர்வுக்கான வாய்ப்புக்களையெல்லாம் தோற்கடித்துத் தோற்கடித்தே அனைத்தையும் இழந்துவிட்டோம்!

இப்போது...

13++ தீர்வு முதல், அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு வரை உறுதியளிக்கும் ஒரு தலைமை தரும் வாய்ப்பையும் வீணடித்து மீண்டும் ஒரு அழிவு யுகத்துக்கு வழிசமைக்கப்போகிறோமா?






மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியில் பங்கெடுத்து

அரசியல் பேரம் மூலம்
எமது உரிமைகளை வென்றெடுப்போம்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு பிரசார கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.23

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் டெங்கு ஒழிப்பு பிரசாரக் கூட்டமும் அது சம்பந்தமான வீடியோ படக்காட்சியும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50- 204)

# யாழ். ஊடக ஒன்றியம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ். ஊடக ஒன்றியம் எனும் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

நல்லூர் நல்லை ஆதீன மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்த அங்குரார்ப்பண நிகழ்வு ஊடகவியலாளர் என். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

வடக்கு மாகாண ஊடகவியலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1-302)


## தவறிவிட்டது

வெடியரசன் வீதி, காரைநகர் யோ. பவானந்தன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் புத்தகம்(HW8544) செம்மணி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

T.P.0772487146 (94173)

## வேலையாள்கள் தேவை

அப்பள வேலை செய்வதற்கு ஆண்/பெண் வேலையாள்கள் உடனடியாகத் தேவை : சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். முன் அனுபவம் இல்லாதவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்பு : ஸ்ரீமகேஸ்வரன் அப்பளக்கொம்பனி சீனிப்புளியடி, ஆரம்பப் பாடசாலை அருகில், K.K.S. வீதி, இணுவில்.

தொ. பே: 0771393670 (94168)

## CAR FOR SALE

SUZKI MARUTI 800,A/C MANUL.KA .XXXX-LOW MILEAGE MINT CONDITION.

CONTACT : 0212225755,0212223239

## காணி விற்பனைக்குண்டு

நெல்லியடி, கரவெட்டி மேற்கில் அமைந்த நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 6 பரப்பு 2.77 குளி உடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0779395269

(தரகர் தேவையில்லை) (94161)

## பெண் வேலையாள்கள் தேவை

பல்பொருள் விற்பனை நிறுவனம் ஒன்றுக்கு கல்வித்தகுதியுடையவராகவும், சுறுசுறுப்பு ஆனவராகவும், தலைமைத்துவம் உடையவராகவும், பொதுவாக நிறுவனத்தைக் கொண்டு நடத்தக்கூடியவராகவும் உள்ள பெண் வேலையாள்கள் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது.

25.01.2010 திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு :
175 A, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (94170)

## சிங்களம்

சரளமாக குறுகிய காலத்தில் சிங்களம் பேச Personal/Group வகுப்புகள் ஆரம்பம். அரச கரும மொழிகள் திணைக்கள போதனாசிரியர், திரு.சொலமன்.

இடம்: K.K.S.வீதி, கொக்குவில் கிழக்கு, 3ஆம் கட்டை ஒழுங்கை. (94163) [சினில் அலுவலகம் அருகில்]. T.P.:0776654 224.


# முதலாம் ஆண்டு நினைவில்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 . 12 . 1939 | 02 . 02 . 2009 |

திதி: பூர்வபட்ச அட்டமி.23.01.2010

அமரர்

## சுப்பிரமணியம் குமாரசாமி (சின்னண்ணா)

அன்பான அப்பாவே!
ஓடி உருண்டதுவோ உமைப்பிரிந்து ஓராண்டு
நெஞ்சம் ஏற்குதில்லையே
உங்கள் பிரிவை எண்ணி எண்ணி
நிதம் நிதம் வாடி வதங்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துலாக்கட்டு லேன்,
வீரணங்கல்,வதிரி,
கரவெட்டி.

(சி/564268)

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

# 33 ஆம் நாள் நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1975 . 12 . 20 | 2009 . 12 . 22 |

## திருமதி அசுந்தன் சூரியகலா

அன்பு மிகு மனைவியாய்
ஆசைமிகு தாயாய்
கண்டிப்பான எஜமானியாய்
புன்முறுவல் தோழியாய்
பூவுலகில் புகழோடு வாழ்ந்து
விண்ணுலகம் சென்ற உம்மை
என்றென்றும் நினைவு கூருகின்றோம்.

நெல்லொரு பாதி,
பிள்ளையார் கோயில் அருகாமை,
தாவடி தெற்கு, கொக்குவில். (94167)

என்றும் நினைவுடன்
அசுந்தன் (கணவர்),
கேனுஜன்,டினுஜன்(மகன்மார்),
சினேகா (மகள்).

# மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் ஸ்ரீகரன்

பிறப்பு: 17-07-1944 இறப்பு: 20-01-2010

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான விஸ்வலிங்கம் ஸ்ரீகரன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர் முன்னாள் பகுதி நேர விரிவுரையாளர் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி ஆலோசகர் Geoinfomatic-Colombo) அவர்கள் 20.01.2010 புதன்கிழமை இறையடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற விஸ்வலிங்கம்-நாகேஸ்வரி தம்பதியினரின் புதல்வரும் பொன்னம்மா திருநாவுக்கரசு காலஞ்சென்ற திருநாவுக்கரசின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் Dr. சதீஸ்குமார் (China), பிரதீஸ்குமார் (U.K.), கேதீஸ்குமார் (USA), ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. டெசி, பபித்தா, சுபாசினி ஆகியோரின் மாமனாரும் மனோகரன், லீலாவதி, இரத்தினாகரன், பிரேமாவதி, திலகவதி, ரூபவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவமலர் காலஞ்சென்ற சரவணபவன், இராஜேஸ்வரி, ஜெயசீலன், துரை இரட்ணம், நகுலநாதன், கையிலைநாதன், சிவமலர், செல்வரெட்ணம், கனகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22.01.2010 வெள்ளிக் கிழமையும் 23.01.2010 சனிக்கிழமையும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து 24.01.2010 ஞாயிறு காலை 9.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
No. 11 6/2, Nelson Place, Colombo - 06.

# 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 1964.08.31 | 1997.01.16 |

## அமரர் சீவரத்தினம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)
அட்டமித் திதி (23.01.2010)

தெய்வத்தின் திருவுருவே அப்பா - நீர்
எமைப் பிரிந்து இன்றோடு பதின்மூன்று ஆண்டுகளாயினவே
ஆண்டுகள் பல கடந்தும் ஆறவில்லை
உம் பிரிவாலான துயர்

அன்பின் உறைவிடமே அப்பா!
இப்பூவுலகில் எமைத் தவிக்கவிட்டு எங்குதான் போனீரோ?
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம் மனதை விட்டு என்றுமே நீங்காது

ஐவர் நாங்கள் பாரினில் உம் புகழ் நிலைக்க
பட்டங்கள் பல பெற்று உம் பாதத்தில் சமர்ப்பிப்போம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்

91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். (94162)

# மரண அறிவித்தல்



## பிலிப் யோசப் பெனடிக்ற்

(இளைப்பாறிய புகையிரத தலைமைக் காப்பாளர்)

புலோலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கண்டி வீதி, இல.236ஐ வதிவிடமாகவும் கொண்ட பிலிப் யோசப் பெனடிக்ற் காலமானார்.

அன்னார் காலம்சென்ற பிலிப்பையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அல்பிரெட் - யோசபின் தம்பதியினரின் அன்பு மருமகனும் றோஸ் ஜெயவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விக்ரோறியா, வின்சன்ற், மாசில்லாமணி அல்போன்சஸ், அருட்திரு யேசுநேசன் (அமதி) மற்றும் மாகிறேட்(USA), மரியநேசன்(Swiss), மற்றில்டா(Canada) ஆகியோரின் சகோதரனும், ராஜன் (Sewalanka), செல்வா, சந்திரா (அவுஸ்திரேலியா), போல் (GTZ), ராஜி(நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற றீசா மற்றும் மொறீன், செல்வி, விஜே ஆகியோரின் அன்பு மாமனாரும், றொஷான், றஜீவ், நிரோஷன், மதுஷன், ரீனா, மிதுன், ஜீனா, கெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ், கண்டி வீதி, இல.236 இல்லத்திலிருந்து நாளை (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
றோஸ் ஜெயவதி
(மனைவி).

236, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (94166)


# ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி

ஐரோப்பிய நாடுகளில் உயர்கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்புகளையும் வழங்கிவரும் கொழும்பு S.I.B.M நிறுவனம் இப்போது யாழ். நகர் மாணவர்களுக்கு தனது முழுமையான சேவையை வழங்க முன்வந்துள்ளது.

அலுவலக நேரம் :
திங்கள் முதல் சனி வரை
காலை 9 முதல் 4வரை.

இங்கிலாந்து(U.K), போலந்து (Polland) ஆகிய நாடுகளுக்கு

* விசா(Visa) 100% உத்தரவாதம்
* (Sponsor) வசதி
* விசா கிடைத்தவுடன் பணம் செலுத்தும் வசதி
* நிராகரிக்கப்பட்ட விசாக்களை திரும்பவும் பெறக்கூடிய வசதிகள்
* விரும்பிய பாட நெறிகளைத் தெரிவுசெய்யும் வசதி.





தொடர்புகளுக்கு :-
72, றக்கா றோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி
0772299900, 0215670309,
0789147333, 0778690989

(94169)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விமானங்களை கடத்த தீவிரவாதிகள் திட்டமாம்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

புதுடில்லி,ஜன.23

இந்தியாவின் பயணிகள் விமானங்களை கடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என வெளியாகிய் தகவலையடுத்து இந்திய விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதுடன் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு:-

இந்திய விமானங்களை கடத்த பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் லஷ்கர்- இ -தொய்பா , அல்குவைதா மற்றும் ஜமாயத் உத் தாவா போன்ற இயக்கங்கள் சதி செய்து வருகின்றன என உளவுத்துறை எச்சரித்துள்ளது.

குறிப்பாக இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்துக்கு அச்சுறுத்தல் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேபாள், வங்கதேசம், பூட்டான், மாலைத்தீவு, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட சார்க் நாடுகளில் இருக்கும் விமான நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. அங்கிருந்து புறப்படும் இந்திய விமானங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விழிப்புடன் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து யங்கூன் , தாகா, கொழும்பு செல்லும் விமானங்களின் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விமான கடத்தல் சதி குறித்து பேட்டியளித்த உள்நாட்டு பாதுகாப்பு சிறப்பு செயலர் யு.கே.பன்சால் கூறியவை வருமாறு:-

பயங்கரவாத சதி தொடர்பாக மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சகத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏர் இந்தியாவை தவிர மற்ற விமான நிறுவனங்களுக்கும் எச்சரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.கடந்த வாரமே மத்திய உள்துறை அமைச்சகம் உத்திரபிரதேசம், பீகார், மேற்குவங்கம், அஸாம், மகாராஷ்டிரா; கர்நாடகா, டில்லி உள்ளிட்ட 7 மாநிலங்களில் இருக்கும் அனைத்து விமான நிலையங்களையும் பாதுகாப்பை அதிகரிக்க வலியுறுத்தப்பட்டது.

ஏற்கனவே குடியரசு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் உச்சகட்ட உஷார் நிலை அமுலில் இருக்கிறது. இந்நிலையில் தற்போது வந்துள்ள உளவுத்துறை எச்சரிக்கையால் பாதுகாப்பு பல அடுக்காக உயர்த்தப்பட்டுள்ளது.

### பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு ஒரு பெண் பலி; 22 பேர் காயம்

இஸ்லாமாபாத்தில் வாகனத்தில் குண்டு வெடித்து பெண் பலியானார். இச்சம்பவத்தில் 22 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பாஜ்யோர் பழங்குடியினப் பகுதியான காகேயில் வியாழக்கிழமை இச்சம்பவம் நிகழ்ந்தது. ஹார் நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனத்தில் தீவிரவாதிகள் வெடிகுண்டை வெடிக்க வைத்துள்ளனர்.இதில் ஒரு பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 22 பேர் காயமடைந்தனர்.

## விமானத்திலிருந்து லேசர் குண்டு வீசி வெற்றிகரமாகச் சோதனை!

புதுடில்லி, ஜன.23

விமானத்தில் இருந்து தரையில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கக்கூடிய லேசர் குண்டுகளை இந்தியா நேற்று முன்தினம் வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.

ஒரிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இச்சோதனை நடைபெற்றது.

தலா ஆயிரம் இறாத்தல் எடையுள்ள லேசர் குண்டுகளை அடுத்தடுத்து 2 இந்திய விமானப்படை விமானங்கள் எடுத்துச் சென்று வீசின. லேசர் குண்டுகளின் செயல்பாடு திருப்திகரமாக இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியச் செய்திகள்

## டில்லியில் கடுமையான பனிமூட்டம்; விமான, ரயில் சேவைகளில் பாதிப்பு

புதுடில்லி, ஜன.23

டில்லியில் கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான பனிமூட்டம் நிலவிவருகிறது.

வாகன சாரதிகள் அருகில் உள்ள பொருட்களை கூட பார்க்க முடியாத அளவுக்கு பனிமூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது.

இதனால் விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. புதுடில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய 18 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 20 விமானங்களின் நேரம் மாற்றி அமைக்கப்பட்டது. மேலும் அங்கு வரவேண்டிய 27 விமானங்கள் வேறு ஊர்களுக்கு திருப்பி விடப்பட்டன.

இதேபோல் புதுடில்லியில் இருந்து புறப்பட வேண்டிய 18 ரயில்கள் ரத்துசெய்யப்பட்டன. 24 ரயில்களின் நேரம் மாற்றி அமைக்கப்பட்டது. 66 ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன.

## தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சிவ்சங்கர் மேனன் நியமனம்



புதுடில்லி,ஜகன.23

தேசிய பாதுகாப்பு ஆலோசகராக, வெளியுறவுத் துறை முன்னாள் செயலர் சிவ்சங்கர் மேனன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன், மேற்கு வங்க மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதையடுத்து, புதிய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக, வெளியுறவுத்துறை முன்னாள் செயலர் சிவ்சங்கர் மேனன்(வயது-60) நியமிக்கப்பட்டுள்ளார். வெளியுறவு விவகாரங்களில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர் மேனன்.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே நிகழ்ந்த, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, அணுசக்தி ஒப்பந்த பேச்சுக்களின் போது முக்கிய பங்காற்றியவர்.வெளியுறவு செயலராக மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்னர், கடந்தாண்டு ஜூலை 31 ஆம் திகதி ஓய்வு பெற்றார். அதற்கு முன், பாகிஸ்தானுக்கான இந்திய உயர் ஆணையாளராகப் பதவி வகித்தார்.

கடந்த 1972 ஆம் ஆண்டு, வெளியுறவுச் சேவைப் பிரிவில் பணியில் சேர்ந்த சிவ்சங்கர் மேனன், சீனா, இஸ்ரேல், ஆஸ்திரியா, ஜப்பான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பணியாற்றினார். அத்தோடு, அணுசக்தி துறை ஆலோசகராகவும் பதவி வகித்துள்ளார். தற்போது, தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# இனவெறித் தாக்குதலைத் தடுப்பதற்கு ஆஸ்திரேலியாவில் தனி அமைச்சகம்

## விக்டோரியா மாகாண அரசு நடவடிக்கை

மெல்போர்ன், ஜன. 23

ஆஸ்திரேலியாவில் இனவெறித் தாக்குதல்கள் அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில், இதுதொடர்பான விவகாரங்களை கவனிக்கத் தனி அமைச்சகத்தை விக்டோரியா மாகாண அரசு உருவாக்கியுள்ளது.

உலக அரங்கில்

ஆஸ்திரேலியாவில் குறிப்பாக விக்டோரியா மாகாண தலைநகர் மெல்போர்ன் உள்ளிட்ட பகுதிகளில் இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் சம்பவம் அதிகரித்து வருவதால் இருநாட்டு உறவில் விரிசல் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் ஆஸ்திரேலியாவில் இந்தியர் மீதான, குறிப்பாக மாணவர்கள் மீதான வன்முறை சம்பவங்கள் 100 இற்கும் மேல் தாண்டியுள்ளன.

இனவெறி காரணமாக இந்தியர் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால், நள்ளிரவு நேரத்தில் வேலை முடிந்து கையில் பணத்துடன் செல்லும் நபர்களிடம் நடக்கும் வழிப்பறிச் சம்பவங்கள்தான் இவை என ஆஸ்திரேலியா தரப்பில் கூறப்பட்டு வந்தது.

எனினும், இந்த விளக்கத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை. தாக்குதல் சம்பவங்களைத் தடுக்க ஆஸ்திரேலியா உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில், இது தொடர்பான விவகாரங்களைக் கவனிக்க தனி அமைச்சகத்தை விக்டோரியா மாகாண அரசு புதிதாக அமைத்துள்ளது.

இதுவரை இல்லாத வகையில் 'மரியாதை அமைச்சர்' என்ற புதிய பொறுப்பை உருவாக்கி, முன்னாள் கால்பந்தாட்ட வீரர் ஜஸ்டின் மேடன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். விக்டோரியாவில் வாழும் இந்தியர்களின் கல்வி, சட்டம் ஒழுங்கு மற்றும் அவர்கள் தொடர்புடைய இதர விவகாரங்களை ஜஸ்டின் மேடன் கவனிப்பார் என விக்டோரியா மாகாணப் பிரதமர் ஜோன் பிரம்பி அறிவித்துள்ளார்.

அமைச்சரவையில் ஏற்கனவே அங்கம் வகிக்கும் ஜஸ்டின், திட்டங்கள் துறையை ஏற்றுள்ளார். தற்போது கூடுதலாக இந்த 'மரியாதை திட்ட' பொறுப் பையும் கவனிப்பார் என பிரதமர் கூறினார்.

### ஆஸியில் மீண்டும் இந்தியர் மீது தாக்குதல்

ஆஸ்திரேலியாவில் இந்தியர்களின் மீது இனவெறித் தாக்குதல் தற்போது வாடிக்கையாகிவிட்டது. முன்னதாக, இன்று காலை பிரிஸ்பேன் நகரில் வெவ்வேறு இரண்டு இடங்களில் இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் ஒரு டாக்சி டிரைவர் ஆவார். ஆஸ்திரேலியர்களின் இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## பொருளாதார வளத்தில் அமெரிக்காவை பத்து ஆண்டுகளில் முந்திவிடும் சீனா

### பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்கள் கணிப்பீடு

பொருளாதார வளத்தில் அமெரிக்காவை இன்னும் 10 ஆண்டுகளில் சீனா பின்னுக்குத் தள்ளிவிடும் என பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். பிரிட்டனைச் சேர்ந்த பொருளாதார ஆலோசனை நிறுவனமான பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் இது தொடர்பான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அடுத்த 10 ஆண்டுகளில் அமெரிக்காவை சீனா பின்னுக்குத் தள்ளிவிடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டுகளில் சீனாதான் மிகப் பெரிய பொருளாதார வளம் உள்ள நாடாக விளங்கும். அப்போது அமெரிக்கா 2 ஆவது இடத்தில் இருக்கும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியா 3 ஆவது இடத்திலும், ஜப்பான் 4 ஆவது இடத்திலும், பிரேஸில் 5 ஆவது இடத்திலும் இருக்கம். அடுத்த 5 இடங்களில் முறையே ரஷ்யா, ஜேர்மனி, மெக்ஸிக்கோ, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் இருக்கும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியம் தந்த தகவலின் அடிப்படையில் 10 பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்திலும், ஜப்பான் 2 ஆவது இடத்திலும், சீனா 3 ஆவது இடத்திலும், ஜேர்மனி 4 ஆவது இடத்திலும், பிரான்ஸ் 5 ஆவது இடத்திலும் உள்ளன என்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 இடங்களில் உள்ள நாடுகள் வரிசையில் பிரிட்டன், இத்தாலி, ரஷ்யா, ஸ்பெயின், பிரேஸில் ஆகிய நாடுகள் உள்ளன. 2020 ஆம் ஆண்டுக்கு [illegible] இந்தியா, சீனாவை விட பெரிய அ[illegible]றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பொருளாதார நெருக்கடியால் அமெரிக்க மக்கள் ஆத்திரத்தில்

### நிலைமை புரிகிறது என்கிறார் ஒபாமா

வாஷிங்ரன், ஜன. 23

''பொருளாதார நெருக்கடி காரணமாக அமெரிக்க மக்கள் கோபத்திலும் விரக்தியிலும் இருக்கிறார்கள். இதை நான் அறிவேன்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, தொலைக்காட்சியொன்றுக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்க மக்களுடனான எனது நேரடித் தொடர்பு குறைந்துவிட்டது. அடுக்கடுக்கான பிரச்சினைகளை கையாளுவதிலேயே நான் அதிக நேரத்தையும், கவனத்தையும் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் [illegible] அதனால் அமெரிக்க மக்களுடன் எனக்கிருந்த பிணைப்பு பலவீனமாகி விட்டது. இது உண்மைதான்'' என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.

''50 ஆண்டுகளாக ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற்று வந்த செனட் இடத்தை குடியரசுக் கட்சி கைப்பற்றியதற்கு இதுதான் காரணம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியாக தாம் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெறுவதையொட்டி அவர் தொலைக்காட்சிக்கு இந்த பேட்டியை அளித்துள்ளார்.

''அமெரிக்க மக்கள் ஆத்திரத்திலும், விரக்தியிலும் உள்ளனர். இதற்கு கடந்த ஆண்டில் நடந்த நிகழ்வுகளே காரணம் அல்ல. கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வரும் நிகழ்வுகளே காரணம்'' என்றும் ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சை - 2008**

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி -II-2006 & 2007 (வெளிவாரி)

நாடகமும் அரங்கியலும் (EX.DTAG 3.2)

செய்முறைப் பரீட்சை

மேற்படி கலைமாணித் தேர்வுக்கான, செய்முறைப் பரீட்சைக்கு முன்னரான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று 06.02.2010 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கலைத்துறை மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளும் இக்கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

பதிவாளர்
22.01.2010 (சி/564237)

## நெஞ்சில் நீங்காத நினைவலைகள்




முருகேசு நரசிங்கம்
தோற்றம்: 10.12.1920
மறைவு : 16.01.2008

நரசிங்கம் ஞானமணி
தோற்றம்: 19.02.1929
மறைவு : 02.07.1994

*'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(சி/564281)

## முதலாம் ஆண்டு நினைவாக

உதிர்வாக 03 ★ 06 ★ 1999



நினைவாக 03 ★ 02 ★ 2009

(10ஆம் ஏக்கர், கல்மடு நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட)

### ஈஸ்வரலிங்கம் ஜனாத்தன்

ஆண்டொன்று ஆனதும் ஆறவில்லை மனம்
ஆறுதல் தந்திட ஆயிரம் உறவுகள் ஆயினும்
நீ எம் அருகினில் இல்லை
தேடுகிறோம் உன்னை தினம் தினம்
மீண்டும் வருவாய் என்ற நம்பிக்கையில்

உமது பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, சகோதரிகள், பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், சபாபதி குடும்பம், மாமா குடும்பம் (தர்மராஜா), யோகலிங்கம் குடும்பம், தங்கத்துரை குடும்பம், துரை குடும்பம், செந்தில்நாதன் குடும்பம், அம்மம்மா, அப்பம்மா.

(94172) கோப்பாய்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

நிகழும் விரோதி வருடம் மார்கழித் திங்கள் 26ஆம் நாள் பின் இரவு (11.01.2010) ஞாயிற்றுக்கிழமை அபர பட்ஷ ஏகாதசி திதியில் சிவபதமடைந்த எமது தந்தையும் குடும்பத் தலைவருமான

அமரர்

பிரம்மஸ்ரீ **தியாகராஜ ஐயர் கணேசசிவசண்முக சர்மா**

அவர்களின் நினைவாக நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் நாளை (24.01.2010) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

27/4, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (94131) குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

499/1, முதலி கோயிலடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்வராசா தவக்குமார் எனப் பெயர் குறிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் (NP HJ - 3191) ஆவணங்கள் யாழ்ப்பாணத்திற்கும் நவாலிக்கும் இடைப்பட்ட கே.கே. எஸ் வீதியில் தவறவிடப்பட்டுள்ளன. (சன்மானம் வழங்கப்படும்)
கண்டெடுத்தவர்கள் தொடர்பிற்கு: T.P 0778828584 (94190)

## விற்பனைக்கு

மாருதி ஒமினி வான் - வெள்ளை நிறம் முதலாவது உரிமையாளர். மிகக் குறைந்த பாவனை நல்ல நிலையில் உள்ள இலக்கம்- KC XXXX உடன் விற்பனைக்கு உண்டு. பார்வையிட விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம் **077-5963280.** (564272)

## வீடு வாடகைக்குண்டு

யாழ். வேம்படிச் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
(94180) 0771636090, 0774146165

## விக்டோரியாவில் இன்று புதிய கட்டடத்திற்கு அடிக்கல்

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் 'இசுறு' பாடசாலைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கௌரவ விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்வர். (50-16)

## மூக்கு கண்ணாடி விநியோகம்

நவாலி, ஜன.23

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு வழங்குவதற்கான கண்ணாடிகள் வந்து சேர்ந்துள்ளன.

பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பெயர், முகவரிகளையுடையவர்களை உடன் பிரதேச செயலகத்திற்கு வந்து இவற்றைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

பெயர் விவரம்,
லூசியாஸ் தோமஸ் (ஜே/151), இ.இராமலிங்கம் (ஜே/148), மா.அரியமலர் (ஜே/144), க.விஜயலட்சுமி (ஜே/139), சு.இரத்தினகூசை (ஜே/132), ம.ஜோசவ் ஜீவரத்தினம் (ஜே/151), க.செபஸ்ரியாம்பிள்ளை (ஜே/150), ந.பரமேஸ்வரன் (ஜே/150), ந.நிலோஜன் (ஜே/143), சி.மேரிசெற்றோஸ்வசந்தி (ஜே/151). (50-100)

## சிங்கர் நிறுவனத்தின் கிளைகள் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தினர் சுன்னாகத்திலும், நெல்லியடியிலும் தமது கிளைகளை இன்று திறக்கவிருக்கின்றனர்.

சுன்னாகக்கிளை காலை 9மணிக்கும் நெல்லியடிக்கிளை பிற்பகல் 4மணிக்கும் நிறுவனத்தலைவரும், முகாமைத்துவ பணிப்பாளருமான ஹேமக்க அமரசூரியவினால் திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் விற்பனைப் பணிப்பாளரும் சந்தைப்படுத்தல் முகாமையாளருமான குமார்சமரசிங்கவும் கலந்து கொள்வார். (1)

## நவாலியில் இன்று சிறுவர் மகிழ் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.23

'சிறுவர் மகிழ் பொங்கல் விழா' இன்று சனிக்கிழமை நவாலியில் இடம் பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட நவாலி வடக்கு - நவாலி தெற்கு - நவாலி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இந்த நிகழ்வில் பங்கு பற்றுவர்.

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சிறுவர் நிதிய இல்லத்தில் மு.ப 10 மணிக்கு இந்த நிகழ்வு இடம் பெறும். (ஒ-302)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் நீண்டகாலம் தாதியராகவிருந்த ஊர்காவற்றுறை, நாரந்தனையைச் சேர்ந்த திருமதி சிசிலியா தேவதாசனின் அன்புத்தாயார்

**திருமதி சவரிமுத்து லூர்த்தம்மா**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். குடும்பத்தவர்களுக்கு ஆறுதலைக் கூறி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

ஆதார வைத்தியசாலை,
ஊர்காவற்றுறை. (சி/564275)
மாவட்ட வைத்திய அதிகாரி,
உத்தியோகத்தர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் நடராசா



மானிப்பாய் தெற்கு, புளியடிச் சந்தை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நடராசா நேற்று (22.01.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் அமரர் துரைராசா, கனகம்மா, அமரர் பீதாம்பரம் ஆகியோரின் சகோதரனும், நேசமலரின் பாசமிகு கணவரும் ஜெயபாலசிங்கம், தனபால சிங்கம், அமரர் கௌசலை, மற்றும் சுபத்திரை (சுபா, கனடா), நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமாரி, ராதா மணிமேகலை, ஜெகதீஸ்வரன் (மோகன்- கனடா) விமலநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீர்த்தனா, கீர்த்திகா, லோசனா, யதீஸ்வரன், பானுஷா, துரியாதரன், துஷ்யந்தி, ஆராதிகன், யசிந்தா, தயந்தா, குபேந்திரன், திவ்வியன், தினுஷா (கனடா), சுதர்சன் (கனடா), கார்த்திக்கோசினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2010) சனிக்கிழமை ந.ப 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயபாலசிங்கம்(மகன்)
குடும்பத்தினர்.

மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய். (94183) 0779688047

## வேலுப்பிள்ளை பரமசாமி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமசாமி நேற்று (22.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-செல்லம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா- தங்கம் தம்பதியினரின் மருமகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், அன்னலக்சுமி (ஆசிரியை, யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), அசோக்குமார் (கனடா), கணேசமூர்த்தி, லோஜினி, நிஷாயினி (ஆசிரியை, யா/சதானந்த வித்தியாலயம், அளவெட்டி) ஆகியோரின் தந்தையும், குமாரானந்தன், அஜித்குமார் ஆகியோரின் மாமனாரும், சுரேகாவின் பேரனும், இராமசாமி, சிதம்பரம், குமாரசாமி, கந்தசாமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2010) சனிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு, தம்மளை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

டச்சு வீதி, அளவெட்டி,
021 4902434. (94189)
தகவல்,
குடும்பத்தினர்.

## றிச்சேட் புஸ்பம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட றிச்சேட் புஸ்பம் நேற்று (22.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர்-றெபேக்கா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ்கெலன் தம்பதிகளின்அன்பு மருமகளும், காலஞ்சென்ற றிச்சேட்டின் அன்புமனைவியும், றோஸ்மலர், அலெக்சாண்டர், காலஞ்சென்ற மைக்கல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஞ்சனி, றதினி, றயனி, பெனற் ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்றவர்களான சந்திரராஜா, செல்வவிநாயகம் மற்றும் வைகுந்தநாதன், இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியும், றயீவன், றாகவன், யாழினி-சதீஸ், யாமினி-ஜெக்சன், வானதி-ஜனகன், லக்ஷினி, றாகுலன், சங்கவி, சத்துருக்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிநேஸ், ஆதிஸ், ஆசிக்கா, அக்சனா, அகர்சன், அதிர்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.01.2010) சனிக்கிழமை பி.ப - 4 மணியளவில் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

687/1 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (94186)
தகவல்:
றி.பெனற் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு; அமெரிக்காவும் கவலை தெரிவிப்பு!

## சர்வதேச அரங்கில் இலங்கைக்குக் கெட்ட பெயராம்



கொழும்பு, ஜன. 23

தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்த தனது கவலையை மீண்டும் வெளியிட்டுள்ள அமெரிக்கா, சர்வதேச அரங்கில் இலங்கையின் நற்பெயரிற்கு இது மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என எச்சரித்துள்ளது.

தேர்தலில் எவர் வென்றாலும் அவருடன் அமெரிக்கா இலங்கையின் மனித உரிமை நிலைவரம் உட்படத் தனக்குள்ள கரிசனைகளைத் தொடர்ந்தும் வலியுறுத்தும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

தனியார் தொலைக்காட்சியொன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டெனிஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து அனைவரும் கவனம் செலுத்துகின்றனர்.

வன்முறைகள் அதிகரித்து வருவதே எமக்குக் கவலையை அளிக்கின்றது. ஜனநாயக நடைமுறையில் இவற்றிற்கு இடமில்லை.

மோதல் நடைபெறுகின்ற ஆபத்தான நாடென்ற நிலையிலிருந்து, வர்த்தக நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ளக்கூடிய நாடு என்ற அளவிற்கு இலங்கை குறித்த சர்வதேச மதிப்பு தற்போதே மாறத் தொடங்கியுள்ளது.

**இப்போதைய நற்பெயருக்கு அச்சுறுத்தல்**

ஆனால், இத்தகைய தேர்தல் வன்முறைகள் இந்த நற்பெயருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை இது ஒரு பின்னோக்கிச் செல்லும் நடவடிக்கையாக அமைந்துள்ளது.

தேர்தல் முடிவடைந்தும் அனைவரும் நல்லாட்சியை ஏற்படுத்துவது குறித்த தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

தேர்தல் ஆணையாளரின் ஆணைகள், உத்தரவுகளை நடைமுறைப்படுத்தப் படவேண்டும்.

மேலும் மக்கள் தாம் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற சூழல் அவசியம்.

இலங்கை ஜனநாயக நாடென்பது மட்டுமல்ல, அமெரிக்காவின் நேச நாடும் ஆகும்.

நாங்கள் இந்த அடிப்படையிலேயே தேர்தலைக் கண்காணிக்கிறோம். வாக்களிப்பது மற்றும் வாக்காளர் பதிவு போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் அமைப்புகளுக்கு நிதி வழங்குகிறோம்.

**நாம் நடுநிலையாகவே உள்ளோம்**

எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கு நாம் நிதியுதவி வழங்கியிருக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பது முற்றிலும் பிழையானது. நாங்கள் நடுநிலையாகவேயுள்ளோம். சிலருக்கு இந்த உண்மையை ஏற்பது கடினமாகவுள்ளது.

ஜனநாயகத் தேர்தலில் எவர் வென்றாலும் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவோம்.

தேர்தல் முடிவடைந்ததும் யார் வென்றாலும் நாங்கள் தொடர்ந்தும் எமது கரிசனைகளைத் தெரிவிப்போம்.

இவற்றில் மனித உரிமைகள் மீறல், நல்லிணக்கம், அடிப்படை உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்பது போன்றவை முக்கியமானவை. இவை குறித்து நாங்கள் தற்போதும் கவனம் செலுத்துகிறோம். அடுத்த அரசுடனும் இவை குறித்துக் கேள்வி எழுப்புவோம் - எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## புனித தோமையார் ஆலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா

பருத்தித்துறை புனித தோமையார் ஆலய புதிய கட்டட திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆசீர்வதித்து இக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து நன்றித் திருப்பலி பூஜையும் இடம்பெறும்.

முன்னர் ஆயர் பேரருட்திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் கடந்த 28வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நடப்பட்ட இந்தக் கட்டடம் தற்போது தான் கட்டி முடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# எதிரணி எம்.பிக்களுடன் சென்ற ஊடகவியலாளர்கள் 'மெனிக் பாம்' முகாமுக்குள் செல்ல அனுமதி இல்லை!

கொழும்பு, ஜன. 23

வன்னியில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்கள் திறந்துவிடப்பட்டுள்ளன என்றும், அங்கு ஊடகவியலாளர்கள் உட்பட எவரும் சென்றுவர முடியும் என்றும் அரசு அறிவித்தாலும், அவை எல்லாம் பொய்யான அறிவிப்புகள் எனக் கொழும்பு மாவட்ட எம்.பியும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் நேற்று நண்பகல் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நேற்று 'மெனிக் பாம்' முகாமுக்கு எதிர்க்கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் சிலர் பிரசாரத்துக்குச் சென்றபோது அவர்களில் மூன்று எம்.பிக்களை மட்டும் முகாமுக்குள் அனுமதித்த படையினர், அவர்களுடன் சென்ற ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய அனைவரையும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி உள்ளே செல்ல விடமுடியாது எனக் கூறித் தடுத்து விட்டனர் என்றும் மனோகணேசன் குறிப்பிட்டார்.

''இடம்பெயர்ந்தோரின் முகாம்கள் கட்டுப்பாடின்றித் திறந்து விடப்பட்டுள்ளன என்ற அரசின் அறிவிப்பு முழுப் பம்மாத்தாகும். அங்கு அகதிமுகாம் பகுதி எங்கும் ஜனாதிபதி மஹிந்த ரஜபக்ஷவின் 'கட்- அவுட்'டுகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. அவர் மட்டுமே இத் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்ற மாயையே அங்கு உருவாக்கப்பட்டுள்ளது. முகாம்களில் 45 ஆயிரம் பேர் வாக்களிக்கப் பதிவு செய்துள்ள போதிலும், அது தொடர்பாக உரிய பிரசார நடவடிக்கைகளைக் கூட நாங்கள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இல்லாத நிலையே நிலவுகின்றது. அந்த மக்கள் இன்னமும் மூடிய இரும்புத் திரைக்குப் பின்னால்தான் இருக்கின்றார்கள்.

நானும், ஜயலத் ஜயவர்த்தனா எம்.பியும், இராமலிங்கம் சந்திரசேகரன் எம்.பியும் மட்டுமே முகாமுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டோம். எங்களுடன் வந்த ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. அங்கு இடம்பெறும் பிரசாரங்கள் பற்றிய தகவல்களை கூட வெளியே வர முடியாமல் தடுக்கும் எத்தனமே இது. நாம் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு கூட்டி உண்மை நிலையை அம்பலப்படுத்துவோம்.'' - என்றும் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (சி)

# மூடிய கதவுக்குள் முணுமுணுப்பதை விடுத்து உண்மையைப் பகிரங்கமாகக் கூறுங்கள்

## தேர்தல் ஆணையருக்கு இடித்துரைக்கிறது 'கபே' அமைப்பு

கொழும்பு, ஜன. 23

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க மூடிய கதவுகளின் பின்னால் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதை விடுத்து, தனது அறிக்கைகளை நாட்டு மக்கள் அனைவருக்கும் பகிரங்கமாக விடுக்க வேண்டும் எனத் தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளரால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களில் 90 வீதமானவை அரசினால் புறக்கணிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள 'கபே' அமைப்பு வாக்களிப்பு தினத்தன்று வன்முறைகள் குறைவடையும் என நம்பிக்கையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

'கபே' அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கட்சித் தலைவர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் எனத் தன்னால் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு மூடிய கதவுகளின் பின்னால் அறிக்கைகளை விடுவதற்கு பதில், அந்த அறிக்கைகளை முழு நாட்டிற்கும் பகிரங்கமாகத் தேர்தல் ஆணையாளர் விடுக்கவேண்டும்.

அது அவரது கடமையுமாகும். மூடிய கதவுகளின் பின்னால் தெரிவுசெய்யப் பட்ட சிலருக்கு அவர் விடுக்கும் அறிக் கைகள் வாக்காளர்களைச் சென்றடைவ தில்லை.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க 80 இற்கும் மேற்பட்ட ஆணைகளை, அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். எனினும், இவற்றில் 90 வீதமானவை புறக்கணிக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றன. அரச தரப்பே இவற்றில் பெருமளவானவற்றை மீறுகின்றது. வன்முறைகள் பெருமளவு அதிகரித்துள்ளன.

வாக்களிப்பு இடம்பெறும் ஜனவரி 26 ஆம் திகதி வன்முறைகள் தணியும் என்பதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை.

தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 779 முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

இரு பிரதான வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மத்தியிலேயே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# திடீரென தேர்தல் பிரசாரக் களமாகிய யாழ்.நகரத் தனியார் கல்வி நிலையம்!

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.நகரில் ஆரியகுளம் சந்திப் பகுதியில் உள்ள தனியார், கல்விநிலையம் நேற்று எதிர்பாராத விதமாக திடீரென இருதரப்பு தேர்தல் பிரசாரக் களமாக மாறியது.

இந்த தனியார் கல்விநிலையத்தில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தங்கள் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் அங்கு கூடியிருந்தனர். அவர்களின் கலந்துரையாடலும் ஆரம்பமாகியது.

அதேவேளையில் திடீரென அங்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் பிரமுகர்களும் வந்து சேர்ந்தனர். அதைத் தொடர்ந்து அந்த இடம் தேர்தல் பிரசாரக் களமாக மாறியது. அரசியல்வாதிகளின் முழக்கம் ஆரம்பமானது. வழக்கம் போல பட்டதாரிகளுக்கு வாக்குறுதிகள் வாரி இறைக்கப்பட்டன.

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக பதவிக்கு வந்தவுடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் 800 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதும் அந்த வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் ஏ.எச்.எம். அஸ்வர், பிரதிக் காணியமைச்சர் ஜீவன் குமாரதுங்க, பிரதி நீதி அமைச்சர் எஸ்.புத்திரசிகாமணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா ஆகியோரே அங்கு உரையாற்றினார். அவர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களான ஆர்.கே.மைந்தன், பி.கிரிதரன், எஸ்.குணசிங்கம் ஆகியோரும் வந்திருந்தனர்.

இந்தப் பிரசாரம் முடிந்த கையோடு அங்கு விரைந்து வந்து சேர்ந்தார் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் சி.வி.கே.சிவஞானம். அவரும் பட்டதாரிகளுக்கு சில விளக்கங்களைக் கூறினார்.

அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் வேலை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை நாம் நிச்சயமாக மேற்கொள்வோம். தற்போதைய ஜனாதிபதியின் காலத்தில் அதற்கான சாதக நிலைமைகள் இருக்கவில்லை. ஆட்சி மாற்றம் தேவை. சரத் பொன் சேகாவைத் தெரிவு செய்வதன் மூலமாக இது சாத்தியமாகும். நடைபெற விருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் நாம் வெற்றி பெற்று மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவோம் -என்றார். (ஒ-14-111)

## ரிரான் அலஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிரான் அலஸின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 4.15 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் காரணமாக அவரது வீட்டிற்குப் பலத்த சேதமேற்பட்டுள்ளதுடன், அவரது கார் முற்றாகத் தீயில் கருகியுள்ளது.

எனினும், ரிரான் அலஸும் அவரது குடும்பத்தினரும் எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

பாரிய சத்தமொன்றைக் கேட்டு தனது அறையிலிருந்து தான் வெளியே வந்து பார்த்தபோது வீடு தீப்பற்றி எரிவதைத் தாம் கண்டார் எனத் தெரிவித்துள்ள ரிரான் அலஸ், ஆளும் கட்சியினரே இந்தக் குண்டுத்தாக்குதலுக்குக் காரணம் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆளும் கட்சி தன்னைக் கொலை செய்ய முயல்வதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேர்தல் வாக்களிப்பிற்கு முன்னதாக வன்முறைகள் அதிகரிக்கலாம் என்ற அச்சம் காரணமாகப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் காணப்படும் படத்தை பொன்சேகாவின் பிரசார அலுவலகத்தினர் வெளியிட்டதன் காரணமாக ரிரான் அலஸ் இலக்கு வைக்கப்பட்டார் என எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் குடும்பத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பைக் குறிப்பிட்ட படம் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து ரிரான் அலஸிற்குத் தொடர்ச்சியாக மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன எனவும் எதிர்க்கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரிரான் அலஸ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிலகாலம் தடுத் துவைக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகத் தீவிரமாகப் பணியாற்றிய ரிரான் அலஸ் பின்னர் அவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுடன் இணைந்து செயற்பட்டுவந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவையும் இவர்களே உருவாக்கினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு எச்சரிக்கிறார் எதிரணி வேட்பாளர் சரத் பொன்சேகாவின் ஊடகப்பேச்சாளரான அனுரகுமாரதிஸநாயக்க.

கொழும்பில் நேற்று தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அந்த மாதிரி வாக்குச்சீட்டையும் திஸநாயக்க காண்பித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டுநாயக்காவில் இருந்து விமானம் மூலம் வாக்குச் சீட்டுக்கள் மாதிரியான போலிச் சீட்டுக்கள் அடங்கிய நூற்றுக்கும் மேற்பட்ட பொதிகள் பலாலிக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது குறித்து நம்பகரமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. அவ்வாறான வாக்குச்சீட்டுக்கள் சில எம்மால் மீட்கப்பட்டுள்ளன.

அந்தமாதிரிச் சீட்டில் இரண்டாவது கூட்டில் சரத்பொன் சேகாவின் பெயரும் அவருக்கு வழங்கப்பட்ட சின்னம் கழுகு என்ற தோரணையில் அதன் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உண்மையான வாக்குச் சீட்டில் சரத் பொன்சேகாவின் பெயர் அவரது சின்னமான அன்னம் 13ஆவது இடத்தில் காணப்படுகின்றன.

வாக்களிப்பில் குழப்பத்தை ஏற்படுத்த முன்னெடுக்கப் பட்டுள்ள போலி வாக்குச் சீட்டுக்களால் தமிழ் மக்கள் ஏமாந்து விடக் கூடாது. மக்கள் விழிப்புடன் செயற்பட்டு இந்த சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்- என்றார் அவர்.

(ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

23ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் தேர்தல் முடிவடையும் வரையில் மௌனம் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் தேர்தல் தொடர்பான செய்திகளை வெளியிடலாகதென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப)

## வன்முறை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுக்கு இலக்கான ரிரான் அலஸின் வீட்டை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குண்டுத் தாக்குதலுக்கு அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி, தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தாதமைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சாடியுள்ளார்.

அரசால் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் அது பதவி விலக வேண்டும் என்றும் சந்திரிகா கோரிக்கை விடுத்தார் எனவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## தமிழ் அரசியல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட கைதிகளின் உறவினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் கைதிகளை விடுதலை செய்யக் கோரி கோஷங்கள் எழுப்பியதுடன், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் உண்மைக்கு மாறான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இந்நிலையில் இவ்வாறான போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெறும் என ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்.

## யாழ்.நகரிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிப் பிரசாரக் கூட்டங்கள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கோரி ஈ.பி.டி.பி. ஏற்பாடு செய் துள்ள பிரசாரக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வடமராட்சியில் மாலுசந்தியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. அமைப்பின் தேசிய அமைப்பாளர் எஸ். கீர்த்தி மற்றும் அரசியல் பிரமுகர்களும் உரையாற்றுர்.

எதிரணி வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு கோரி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஏற்பாடு செய்துள்ள பிரசாரக்கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூரில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் ஏனைய முக்கியஸ்தர்களும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவர். (அ-1)

## தடுப்புக் காவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தே இவர்கள் தொடர்பாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் மற்றி முகமட் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டவர்களில் சுமார் 85 பேர் சில நிபந்த னைகளின் பேரில் விடுவிக்கப்பட்டனர். சுமார் 35 பேரைப் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதற்கான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்டோருக்கு நிபந்தனையுடன் கூடிய விடுதலை வழங்கப்படுகின்றமையை ஆட்சேபித்து சிரேஷ்ட சட்டத்தரணி கே.ஸி.தவராஜா நீதிமன்றத்தில் கடுமையாக வாதிட்டார்.

இதேவேளை, இந்தக் கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்படுகின்றமையை ஆட்சேபித்து சுமார் இருபது, இருபத்தைந்து சட்டத்தரணிகள் கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றக் கட்டடத்துக்கு வெளியே ஒன்று கூடி ஆட்சேப எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்த நபர்களின் விடுதலையையும், அவர்களுக்காக ஆஜரான சட்டத்தரணிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் துண்டுப் பிரசுரமும் விநியோகித்தனர். அவர்கள் இடையே சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் டபிள்யூ. தயாரத்னவும் காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## இடம்பெயர்ந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்படவுள்ளன. இந்தப் பணியில் ஆயிரம் பஸ்கள் இலவச சேவையில் ஈடுபடுத்தப்படும். இதற்காக வவுனியாவில் விசேட செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

தேர்தல் திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## புதிய ஜனாதிபதியை தீர்மானிப்போர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் நேற்று நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

வவுனியா குருமன்காடு கலைமகள் விளையாட்டரங்கில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே சம்பந்தன் இப்படிச் சொன்னார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சம்பந்தன் கூறியவை மேலும் வருமாறு:-

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தெளிவாகச் சிந்தித்து, வடக்கு-கிழக்கு மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நிராகரித்து விட்டார்கள் என்ற முடிவு தெட்டத் தெளிவாக வெளிவரக்கூடிய வகையில் தமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தங்களின் போது தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இன்றுள்ள நிலையில் தமிழரும், முஸ்லிம்களும் ஓரணியில் ஒன்றுபட்டு நின்றால் மட்டுமே எமக்குச் சாதகமான ஒரு தீர்வைப்பெற முடியும்.

இதனைக்கருத்தில் கொண்டு உறுதியான நிலைப்பாடு ஒன்றை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சு நடத்திவருகின்றோம். இருதரப்புக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு நிலவுகின்றது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஓரணியில் போட்டியிட முயற்சிகளை, பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்.

### அவசரப்பட்டு எடுத்த முடிவல்ல

ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை ஆதரிப்பது என எடுக்கப்பட்ட முடிவு அவரப்பட்டு எடுக்கப்பட்டதல்ல. தீர ஆலோசனை நடத்தி, ஆழமான சிந்தனை, நீண்ட ஆலோசனைகளின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மீண்டும் தன்னிடம் ஆட்சியைத்தருமாறு மஹிந்த மக்களிடம் ஆணை கேட்கின்றார். தமிழ் மக்களால் அவருக்கு ஆணை வழங்க முடியாது.

தமிழ் மக்களை எந்தவொரு பகுதியிலும் பெரும்பான்மையாக வாழ விடுவதில்லை என்ற இரகசியத் திட்டத்துடன் - இரகசிய நிகழ்ச்சி நிரலுடன் - மஹிந்த தலைமையிலான ஆட்சியாளர்கள் செயற்படுகின்றனர்.

### மஹிந்தவுடன் இணைந்துள்ள இனவாதக்குழுக்கள்

இதற்காக மஹிந்தவுடன் இணைந்து ஜாதிகஹெலஉறுமய உட்பட பல இனவாதக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் வாழ்விடங்களை அழித்தல், அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களை இராணுவ மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் போன்றவை அவர்களின் நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டுள்ளன.

வன்னியில் சீனாக்காரனின் உதவியுடன் மஹிந்த தலைமையிலான குழு இந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றது.

இந்த நிகழ்ச்சி நிரலின்படி அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவதற்கு எமக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அரச சார்பற்ற அமைப்புக்களுக்கும் கூட அனுமதி மறுக்கப்படுகின்றது.

### இருவருடனும் மூன்று கட்டப் பேச்சுக்கள் நடத்தினோம்

தமிழ் மக்களின் எதிர்கா லம் குறித்து பிரதான வேட்பாளர்கள் இருவருடனும் மும் மூன்று கட்டப் பேச்சுக்களை நடத்தினோம். மஹிந்தவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவில்லை. பொன்சேகாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் எமக்குச் சாதகமான முன்னேற்றங்களை காண முடிந்தது.

### ஒப்பந்தம் செய்யப்படவில்லை

இதன் காரணமாகவே பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்குவது என முடிவு செய்தோம். ஆனால் பொன்சேகா தரப்புடன் எந்தவிதமான ஒப்பந்தமும் நாம் செய்யவில்லை.

இரகசிய ஒப்பந்தம் என்றும் இரகசிப்பேச்சு என்றும் பிரசாரம் செய்து இனவாதக் கருத்துக்களை அரச தரப்பு பரப்பிக்கொண்டு இருக்கின்றது.

மஹிந்தவுடன் பேச்சு நடத்தியது போன்றும் எதிரணி வேட்பாளருடன் பேசுவதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை இல்லையா? சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்குவதற்கு எமக்கு உரிமை இல்லையா?

நேற்று வியாழக்கிழமை வவுனியாவில் நடந்த ஜனாதிபதி மஹிந்தவிற்கு ஆதரவான கூட்டத்தில் சித்தார்த்தன், ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து மஹிந்தவிற்கு ஆதரவு தருமாறு பேசியுள்ளனர்.

### இனவாத பிரசாரத்திற்கு துணையாக சித்தார்த்தன்

தமிழ் மக்கள் ஏகோபித்து எடுத்த முடிவை திரித்து, தெற்கில் இனவாதப் பிரசாரம் செய்யும் அரசுக்கு வாக்களிக்குமாறும் சித்தார்த்தனும், ஸ்ரீதரனும் எப்படிக் கேட்கமுடியும்? எப்படி மஹிந்தவிற்கு இவர்கள் ஆதரவு கொடுக்க முடியும்.

எமது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தை விடுவிக்குமாறு நாம் கேட்டோம். அதற்கு அரசு இணங்கவில்லை.

இன்று அவரை விடுதலை செய்து வவுனியா ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையத்திற்கு வற்புறுத்தலின் பேரில் அழைத்துச் சென்று பிரசார நடவடிக்கை களில் அவரை ஈடுபடுத்திவருகிறது.

தமிழ்-முஸ்லிம் மக்களிற்கு விரைந்து அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். வன்முறைகள் முடிவுக்கு வந்துவிட்டன. வன்முறைகளை முற்றாக நிராகரிக்கின்றோம். இளைஞர்களின் தியாகத்தை மதிக்கிறோம். தமிழ் தேசத்தின் நலன்களில் சகலரும் ஒன்றுபட்டு தீர்வைப் பெறவேண்டும்.

### சர்வதேச சமூகம் எம்முடன் நிற்கிறது

சர்வதேச சமூகம் எமக்கு பின்னால் நிற்கிறது. அண்மையில் இந்தியாவிற்கு சென்றோம். தீர்வு விடயத்தில் எமக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்க இந்தியா சம்மதித்துள்ளது.

பொலிஸ், காணி, கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகள் உள்வாங்கப்பட்டு கணிசமான சுயாட்சி முறையிலான தீர்விற்கு உதவ இந்தியா முன்வந்துள்ளது - என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஆர்.எம். இமாம், கே.துரைரட்ணசிங்கம், விநோ நோதராதலிங்கம், எஸ்அரியநேந்திரன் ஆகியோரும் உரையாற்றினர். (அ-ஒ-1)


**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

(சி/562626)

Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
**Obesity package - 1200/=**

**SM CONSULTANT SERVICE**
**UK STUDENT VISA**

2009ம் ஆண்டு யூன் - டிசம்பர் காலப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு லண்டன் student Visa பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதை மாணவர்கட்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன் மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
★ பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
★ விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
★ சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!

தங்குமிட ஒழுங்குகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள் மற்றும் விசா சம்பந்தமான மேலதிக ஆலோசனைகள் என்பன எமது லண்டன் ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்.

அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை7.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

021 222 3818
021 567 3818
077 452 8818

தொடர்புகளிற்கு: - இல: 148, கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

**சாரதி/தோட்டப்பராமரிப்பாளர் தேவை**

பிரபலமான ஸ்தாபனமொன்றில் பணியாற்ற அனுபவமுள்ள சாரதி/தோட்டப்பராமரிப்பாளர் தேவை.

தங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும்.
வயதெல்லை கிடையாது. ஆயினும் 40-50 வயதுக்கு இடைப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கும், கொழும்பு போக்குவரத்துக் கட்டமைப்பை நன்கு தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
*விண்ணப்பதாரிகள் உறவினர் அல்லாத இரு பிரமுகர்களது நற்சான்றுப் பத்திரத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.*
த.பொ.இலக்கம்:- 25, யாழ்ப்பாணம்.
e mail :- mms lanka @ gmail.com

யாழில் புகைப்படத் துறையில்

Embrace a world of CREATIVITY
Expression
UV HOT COOL LAMINATION



புதியதொரு அறிமுகம்

Karizma Album, Storybook Album மற்றும் Digtal Album Duro frame போன்ற உங்கள் அனைத்து நிஜமான நிழல்களையும் நீண்ட காலம் பேணிப்பாதுகாப்பதற்கு என தனித்துவமாக அதிககூடிய தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட U.V. Laminating இயந்திரத்தினை யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக

**சிறிநதியா கலர் லாப்**

நிறுவனத்தார் ஆகிய நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

சிறிநதியா கலர் லாப்
லக்ஷன் பிளாசா கட்டடம், 108 நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்23.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.